

RNI No.APTAM/2021/80590

SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:6, Issue:02, Pages:56
September-2026, Price Rs.20/-

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்
செப்டம்பர் 2026,
விலை ரூ.20/-

## திருமலையப்ப ஸ்வாமி வருடாந்திர பிரம்மோத்ஸவம்


துவஜாரோஹணம், 15-09-2026



## திருமலையப்ப ஸ்வாமி நவராத்திரி பிரம்மோத்ஸவம்

**11-10-2026 முதல் 20-10-2026 வரை**

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 11-10-2026 | ஞாயிறு | --- | சேனாதிபதி உத்ஸவம், அங்குரார்ப்பணம் |
| 12-10-2026 | திங்கள் | வைர கவச ஆபரணத்தில் திருச்சி உத்ஸவம் | பெரிய சேஷ வாகனம் |
| 13-10-2026 | செவ்வாய் | சிறிய சேஷ வாகனம் | ஹம்ஸ வாகனம் |
| 14-10-2026 | புதன் | சிம்ம வாகனம் | முத்துப்பந்தல் வாகனம் |
| 15-10-2026 | வியாழன் | கல்ப விருக்ஷ வாகனம் | சர்வ பூபால வாகனம் |
| 16-10-2026 | வெள்ளி | பல்லக்கில் மோகினி அவதாரம் | கருட சேவை |
| 17-10-2026 | சனி | ஹனுமத் வாகனம், புஷ்பக விமானம் | யானை வாகனம் |
| 18-10-2026 | ஞாயிறு | சூரியப்பிரபை வாகனம் | சந்திரப்பிரபை வாகனம் |
| 19-10-2026 | திங்கள் | தங்கத்தேர் | குதிரை வாகனம் |
| 20-10-2026 | செவ்வாய் | திருச்சி உத்ஸவம்,ஸ்நபன திருமஞ்சனம், சக்கரஸ்நானம் | --- |



நேஹாபி$_4$க்ரமநாசோऽஸ்தி
ப்ரத்யவாயோ ந வித்$_3$யதே ।
ஸ்வல்பமப்யஸ்ய த$_4$ர்மஸ்ய
த்ராயதே மஹதோ ப$_4$யாத் ॥

இந்தக் கர்ம யோகத்தில் ஆரம்பம், அதாவது விதை அழிவது என்பது இல்லை; நேரெதிரான விளைவும் இல்லை. இந்தக் கர்ம யோகம் என்கிற தர்மத்தைச் சிறிதளவு கைக்கொள்வதும் கூட பெரியதான பிறப்பு, இறப்பு என்ற பயத்திலிருந்து காப்பாற்றுகிறது.

*– ஸ்ரீமத் பகவத் கீதை 2–40*

ஸ்ரீசேஷசைல கருடாசல வேங்கடாத்ரி
நாராயணாத்ரி வ்ருஷபாத்ரி வ்ருஷாத்ரி முக்யாம:।
ஆக்யாம் த்வதீய வஸதே அனிசம் வதந்தி
ஸ்ரீவேங்கடாசலபதே தவ சுப்ரபாதம்॥

*திருவேங்கடமுடையானே, இங்கு வந்திருப்பவர்கள் உன் வாஸஸ்தலமான திருமலையின் பற்பல திருநாமங்களை ஓயாமல் சொல்லிக் கொண்டிருக்கின்றனர். உனக்கிது நல்விடிவாகுக.*

*- ஸ்ரீ வேங்கடேஸ்வர சுப்ரபாதம்*





## ஸ்ரீ லக்ஷ்மி வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், உபமாகா

உபமாகா ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி திருத்தலம் விசாகப் பட்டிணம் மாவட்டத்தில் நக்கபள்ளி வட்டத்தில் உள்ளது. இந்த ஆலயத்தில் பாஞ்சராத்ர ஆகமப்படி பூஜைகள், வருடாந்திர கல்யாண உத்ஸவம் (5 நாட்கள்), பிரம்மோத்ஸவம், அத்யயனோத்ஸவம், திருக்கல்யாணம், ஆழ்வார்கள் திருநட்சத்திரங்கள், ஸ்ரீராமரின் அத்யயனோத்ஸவம், வைகாச சுத்த ஏகாதசி நாளில் ஸ்ரீவேணு கோபால ஸ்வாமி வருடாந்திர கல்யாணோத்ஸவம், தனுர் சங்கர மணம் போன்றவைகளும், வாகன சேவைகளில் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி தனித்தும், உபய நாச்சிமார்களுடனும் கிராம திருவீதி வலம் வந்து அருள்புரிகின்றார். வடக்கு வாயில் தரிசனம் இந்த ஆலயத்தின் சிறப்பாகும். இம்மலை கருட வடிவில் உள்ளதால் “கருடாத்திரி” என்பர்.

**பிரம்மோத்ஸவ நிகழ்ச்சி நிரல்**

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 14-09-2026 | திங்கள் | --- | சேனாதிபதி உத்ஸவம், அங்குரார்ப்பணம் |
| 15-09-2026 | செவ்வாய் | துவஜாரோஹணம் | பெரிய சேஷ வாகனம் |
| 16-09-2026 | புதன் | சிறிய சேஷ வாகனம் | ஹம்ஸ வாகனம் |
| 17-09-2026 | வியாழன் | சிம்ம வாகனம் | முத்துப்பந்தல் வாகனம் |
| 18-09-2026 | வெள்ளி | கல்ப விருக்ஷ வாகனம் | சர்வ பூபால வாகனம் |
| 19-09-2026 | சனி | பல்லக்கில் மோகினி அவதாரம் | கருட சேவை |
| 20-09-2026 | ஞாயிறு | ஹனுமத் வாகனம் மாலை-வஸந்தோத்ஸவம் | யானை வாகனம் |
| 21-09-2026 | திங்கள் | சூரியப்பிரபை வாகனம் | சந்திரப்பிரபை வாகனம் |
| 22-09-2026 | செவ்வாய் | திருத்தேர் | குதிரை வாகனம் |
| 23-09-2026 | புதன் | அவப்ருதோத்ஸவம், சக்கரஸ்நானம் | துவஜாவரோஹணம் |







## ஸ்ரீபத்மாவதித் தாயார் பவித்ரோத்ஸவம், திருச்சானூர்

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 23-09-2026 | புதன் | ...... | அங்குரார்ப்பணம் |
| 24-09-2026 | வியாழன் | பவித்ர பிரதிஷ்டை | |
| 25-09-2026 | வெள்ளி | பவித்ர சமர்ப்பணம் | |
| 26-09-2026 | சனி | பவித்ரோத்ஸவம் நிறைவு | |

வருடம் முழுவதும் தெரிந்தோ, தெரியாமலோ நடக்கும் தவறு களுக்குப் பரிகாரமாக பாத்ரபத (ஆவணி) மாதத்தில் மூன்று நாட்கள் நடைபெறும் பவித்ரோத்ஸவம் அங்குரார்ப்பணத்துடன் தொடங்கி விமரிசையாக நடைபெறும். பவித்திர சமர்ப்பணை, ஹோமங்கள் எனப் பலவிதமான நிகழ்வுகளுடன் அனைத்து விக்ரகங்களுக்கும், துவஜஸ்தம்பம்(கொடிமரம்) போன்றவற்றிற்கும் பவித்திர மாலைகள் அணிவிக்கப்படும். மாலை நேரங்களில் ஸ்ரீபத்மாவதித் தாயார் திருவீதி உலா வருவது சிறப்பு அம்சமாகும்.



வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

செப்டம்பர் 2026

மலர் 06 இதழ் 02



சிறப்பு ஆசிரியர் :
திரு. முத்தாட ரவிச்சந்திரா, ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
வெளியீட்டாளர்-ஆசிரியர்,
பிரதான ஆசிரியர் (முழு கூடுதல் பொறுப்பு) :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி.,
பி.ஜி.டிப்.இன் ஜே.எம்.சி.,

அச்சிடுபவர் :
திரு. R.V. விஜயகுமார், பி.ஏ., பி.இடி,
துணை செயலாட்சித் தலைவர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா

பிரதிகளுக்கு:
THE CHIEF EDITOR,
"Sapthagiri", 2nd Floor, T.T.D Press
Building, Tirupati - 517 507.
0877- 2264543, 2264359
பிரதான ஆசிரியர் : 2264363

நீங்கள் ஸப்தகிரி இதழை
www.tirumala.orgயில் பார்த்து,
படித்து மகிழலாம். ஆலோசனைகள்/
கருத்துக்கள்/புகார்களுக்கு
sapthagiri_helpdesk@tirumala.org

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |

இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும்
அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவார்
-பிரதான ஆசிரியர்

## உள்ளுறை

பக்கம்

ஞானப்பிரானும் ஞான விளக்கும் 7
-திருமதி பட்டம்மாள் ஜெகந்நாதன், சென்னை.

ஆரோக்கியமும் நலமும் நல்கும் ஏழுமலையான் 9
- திரு. அத்தி ரங்கராஜன், திருப்பதி.

ஸ்ரீவாரி சேவையில் மருத்துவர்கள் 12

வேங்கடத்தை வணங்கு -திரு.எஸ். சுதர்சனம், நங்கைநல்லூர். 14

மாமுனி மனத்துள்ளான் 17
- முனைவர் ஸ்ரீ. உ.வே.அத்தங்கி ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, திருவல்லிக்கேணி.

மலையைத் தாங்கிய கண்ணனும் மலை மீது நிற்கும் மலையப்பனும் 21
- பேராசிரியர் எஸ்.கோகுலாச்சாரி, புவனகிரி.

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருவேங்கடவா! 24
- திருமதி கோ. அறிவுசெல்வி ராஜாராம், திண்டிவனம்.

திக்கெங்கும் தரிசிப்போம் திருவேங்கடவனை 31
- திருமதி வைஷ்ணவி சேஷகிரி, திருப்பதி.

சனீஸ்வரனும் ஸ்ரீநிவாசப் பெருமாளும் - திருமதி சுபா தியாகராஜன், சேலம். 35

உலகு தன்னை வாழ நின்ற நம்பீ! - டாக்டர் ஜி.கௌசல்யா விஜயன், வேலூர். 38

வேங்கடாத்ரி கவி தரிசித்த வேங்கடநாதன் 41
- காயார் கோமடம் சேஷாத்ரிதாஸன், சென்னை.

உயிர் காத்த வேங்கடவன் -முனைவர் தி. கமலி, சென்னை. 46

ராசிபலன்கள் : செப்டம்பர் 2026 - டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம். 48

சிறுவர் உலகம் : பல்சுவைப் பகுதி 49

சித்திரக்கதை : கோவர்த்தன கிரியை ஏந்திய கோவிந்தன் 52

### வாசகர்களுக்கு...

இவ்விதழ் திருமலை வருடாந்திர பிரம்மோத்ஸவ சிறப்பிதழாக வெளி வருவதால் இந்த இதழில் வெளிவர வேண்டிய தொடர் கட்டுரைகள் இடம் பெறவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

-பிரதான ஆசிரியர்

### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : திருமலை ஆலயத்தில் துவஜாரோஹணத் திருக்காட்சி.

பின்னட்டை : திருமலையில் திருத்தேர் உற்சவத் திருக்காட்சி.



உங்களுடன்

# திருவோணத் திருவிழா

"வேங்கடாத்ரி ஸமம் ஸ்தானம் பிரம்மாண்டே நாஸ்தி கிஞ்சன..." இப்பிரம்மாண்டத்திலேயே வேங்கடாத்ரிக்கு நிகரான இடமில்லை. கலியுகத்தின் வைகுண்டமே இந்த வேங்கடாத்ரி ஆகும். இது ஆதி தேவன், தேவாதி தேவன், வேதவேத்ய னான அந்த ஸ்ரீமந்நாராயணன் தானே விருப்புற்று எழுந்தருளும் சிகரம் ஆகும். மிகவும் சிறப்புற்ற புண்ணியத் திருத்தலமான வேங்கடாத்ரியைத் தரிசித்தாலே நம் பாவங்கள் யாவும் நீங்கப்பெற்று இப்பிறவியிலேயே புனிதர்களாகி முக்தி அடையலாம். இதனை கவிச்சக்கரவர்த்தி கம்பரும் "கோடுஉறு மால்வரை அதனைக் குறுகுதிரேல் உம் நெடிய கொடுமை நீங்கி வீடு உறுதிர்" என்று குறிப்பிடுகிறார்.

இவ்வளவு பெருமை பெற்ற புனிதத் திருத்தலமான திருமலை சிகரத்தில்தான் அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகனான திருவேங்கடமுடையானுக்கு உற்சவங்கள் நடைபெறுகின்றன. அவன் சன்னதியில் ஒவ்வொரு நொடிப்பொழுதும் உற்சவங்கள் நடைபெற்று கொண்டே இருக்கும். இந்த உற்சவங்களிலேயே மிகச் சிறப்பு வாய்ந்தது பிரம்மதேவனால் நடத்தப்படும் பிரம்மோற்சவமாகும்.

படைப்புக் கடவுளான பிரம்ம தேவன் முன் நின்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு நடத்தப்படும் உற்சவம் ஆகும். முக்கோடி தேவர்களும் கலியுக வைகுண்டமான திருமலைக்கு இறங்கி வந்து கொண்டாடப்படும் உற்சவம் ஆகும். அவர்கள் அனைவரும் ஆர்வத்துடன் இருந்து ஸ்ரீநிவாசனுக்கு நடைபெறும் உற்சவத் திருக்காட்சிகளை ஆனந்தத்துடன் கண்டு அனுபவிக்கும் உற்சவம். மனிதர்களும் தேவர்களும் ஒரு சேரக் கலந்து கொண்டாடும் புனிதமான உற்சவம் ஆகும்.

இத்திருமலையை ஒருமுறை தரிசித்தாலே கிட்டிடும் பிறவிப் பலன். ஒரு முறை துதித்தாலே நசிந்துவிடும் கர்மா. இந்த வருடம் திருவேங்கடமுடையானுக்கு இரண்டு பிரம்மோற்சவங்கள் நடைபெற உள்ளன. செப்டம்பர் மாதத்தில் திருவேங்கடமுடையானின் அவதார தினத்தினை முன்னிட்டு வருடாந்திர பிரம்மோற்சவமும், அக்டோபர் மாதத்தில் நவராத்திரி பிரம்மோற்சவமும் நடைபெற உள்ளன. வருடாந்திர பிரம்மோற்சவத்தில் துவஜாரோகணமும், மரத்தேர் உற்சவமும், துவஜாவரோகணமும் நடைபெறும். நவராத்திரி பிரம்மோற்சவத்தில் இவை மூன்றும் இடம் பெறாது.

திருமலை எங்கும் வேத கோஷமே எதிரொலிக்கும். மரம், செடிகள் கூட நாராயணனின் திருநாமத்தையே துதிக்கும். திருமலையே தோரணங்களாலும், வண்ணமயமான மின்விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்டு இருக்கும். திருமலைவாசனும், ஆதி புருஷனுமான புருஷோத்தமன் தினமும் வெவ்வேறு வாகனங்களில் தனித்தும், உபய தேவியருடனும் எழுந்தருளி தன்னை நாடி வருவோருக்கு வேண்டிய வரங்களை அளித்திடுவான்.

எங்கும் கோவிந்த நாமம், எதிலும் கோவிந்தனின் வடிவமுடைய திருமலை வைகுண்டத்தின் மறுவடிவம். ஆரத்தியோடு கூடிய சமயத்தில் திருவேங்கடவனைத் தரிசித்தாலே போதும் நம் வாழ்க்கைக்கான உத்வேகம் கிடைத்துவிடும். மேலும், இப்பிரபஞ்சத்தின் தேரோட்டியின் ரதத்தை இழுக்கும் பாக்கியமும் கிட்டிடும். ஆதலால்தான் நாம் அனைவரும் திருமலைக்குச் செல்லுதல் வேண்டும். கோலாகலமான பிரம்மோற்சவக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளுதல் வேண்டும்.

பிரம்மோற்சவ வைபவத்தின் போது திருவேங்கடமுடையானைத் தரிசிக்க வரும் பக்த கோடிகள் அனைவருக்கும் அனைத்து வசதிகளும் கிடைத்திடும் வகையில் திருமலை திருப்பதி தேவஸ்தானமும் அனைத்து வசதிகளையும் ஏற்பாடு செய்துள்ளது. பக்தர்கள் தேவஸ்தானத்திற்கு பெரும் ஒத்துழைப்பு நல்கிட வேண்டி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இப்பிறவி எடுத்த பலனிற்காகவும், பிறவிப்பேறு பெறுவதற்காகவும் திருமலைக்குச் செல்வோம் வாருங்கள். பிரம்மோற்சவ வேளையில் திருமலைக்குச் செல்ல இயலாதவர்களும் திருமழிசை ஆழ்வார் தன் உள்ளத்திலேயே திருவோணத் திருவிழாவைத் தரிசித்தது போல எஸ்.வி.பி.சி. தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்பின் வாயிலாக இல்லத்தில் இருந்தபடியே தரிசித்து கோவர்த்தனகிரி நாயகனான கோவிந்தனின் திருவருளைப் பெறுங்கள்.

கண் பெற்ற பலனிற்காக வேங்கடவனைத் தரிசிப்போம்!
வாய்பெற்ற பலனிற்காக கோவிந்தனின் நாமத்தைத் துதிப்போம்!!

பூமாதேவியை இரண்யாட்சன் பிரளய சமுத்திரத்தின் ஆழத்தில் ஒளித்துச் சிறைப்படுத்த, பூதேவியானவள் தன்னை விடுவிக்கும்படி பெருமாளிடம் வேண்டினாள். பெருமாள் ஜல க்ரீடையில் லயிக்கிற வராக வடிவத்தில் பிரளய வெள்ளத்தில் பாசி தூர்த்துக் கிடந்த பூமிப்பிராட்டியைக் கொம்பினால் கண்டெடுத்து இளைப்பாற்றி ஞானோபதேசம் செய்ததால் ஞானப்பிரான் என அழைககப்பட்டான்.

பிறகு வராகப் பெருமாள் தன் கர்ஜனையால் சாம வேத த்வனி போல் முழங்கிக் கொண்டு தன் கொம்பின் நுனியால் பூமியைத் தாங்கிப் பாதாள லோகத்தில் இருந்து கரு நீல வண்ணத்தில் பெரும் உருவத்தோடு வெளியே வர, அவன் வாயிலிருந்து எழுந்த பெருமூச்சினால் தெறித்த நீர்த்திவலை களானது ஐந்தாவது லோகமான ஜனர் லோகத்தில் இருக்கும் ஸனந்தனன் முதலான யோகிகளை புனிதப்படுத்தின என்று புராணங்களிலும், அருளிச் செயல்களிலும் கூறப்பட்டுள்ளன.

பூமியையும், அதிலுள்ள எளியவர்களாகிய நம்மைத் தீங்கு இன்றிக் காத்த வராகப் பெருமாளை நம்மாழ்வார் தன் திருவிருத்தத்தில் (99) போற்றிப் பாடுகிறார். ஸம்ஸாரிகள், தேவர்கள், நித்ய சூரிகள் ஆகிய எல்லோரையும் ரக்ஷிப்பதற்கு ஏதுவாகிய ஞானம் எம்பெருமானிடத்திலேயே உள்ளதால் ஆழ்வார் இப்பெருமாளை ஞானப்பிரான் என்று அருளினார்.

ஸ்ரீராமாநுஜர் அவதரித்து கலியின் கொடுமையால் பரந்திருக்கும் அறிவின்மை ஆகிய இருளை வேதமென்னும் பிரகாசமான விளக்கால் நீக்கியதாலும், ஞானப்பிரானுக்கு அடிமையாய் இருக்கும் தன்மையே ஆத்மாவுக்கு உயர்ந்த செல்வம் என்று உணர்த்தி அருளியதாலும் ஞான விளக்காய்ப் போற்றப்படுகிறார். ஸ்ரீராமாநுஜர் கூரத்தாழ்வானை தன் ஆசாரி யரான திருக்கோட்டியூர் நம்பிகளிடம் ஆத்மாவுக்கு முதன்மை யான பண்பு அறிவுடைமையா, அடிமைத்தனமா என்னும் வினாவுக்கு விடையை உலகுக்கு உணர்த்த விரும்பி அனுப்பி னார். நம்பிகளும் நம்மாழ்வாருடைய ''அடியேனுள்ளான்'' (திருவாய்மொழி 8–8–2) என்னும் பாடலைப் பதிலாகச் சொன் னார். எம்பெருமானுக்கு அடிமையாய் இருக்கும் தன்மையே ஆத்மாவுக்கு உயர்ந்த செல்வம் என்றும் உலகுக்கு இப்பாடலின் மூலம் உணர்த்தினார்.

ஸ்ரீராமாநுஜர் மயர்வற மதி நலம் உடையவர். எம்பெருமானால் அருளப் பெற்ற பக்தி ரூபாந்த ஞானத்தை உடைய வர். ஞானம் அனுஷ்டானம் நன்றாகவே உடையவர். அநேக ஆசார்யர்களின் அறிவு சார்ந்த விளக்கங்களைக் கேட்டு மகிழ்ந்து தான் இயற்றிய ஸ்ரீ பாஷ்யத்தின் மூலம் ஸ்ரீ வைஷ்ணவத்திற்கு அறிவியல் பூர்வமான விளக்கத்தை அவரால் தர முடிந்தது. ஆகவே கோயிலில் பெருமாளின் திவ்ய மங்கள சேவையைக் காட்டுகிற தீபக் காலுக்கு "ஞான விளக்கான ஸ்ரீராமாநுஜ ரின் திருவிளக்கு" என்று பெரியோர்கள் பெயர் வைத்தனர்.

## வராக சரமச்லோகமும் தேவப் பெருமாளின் ஆறு வார்த்தைளும்

பூமிப் பிராட்டியை மீட்டெடுத்தபோது நமக்காக வராகப் பெருமாள் உபதேசித் ததே வராக புராணம். அதில் உள்ளதே மகத்துவமான பொருள் அமைந்த இந்த வராக சரம சுலோகம்.



## திருமலையில் ஆதிவராகரும் எம்பெருமானாரும்

திருமலையில் வராகப் பெருமாளுக்கு செய்யப்பட்ட பூஜைகள் நின்று போயிருந்ததைக் கவனித்த எம்பெருமானார் பலிபீட பூஜை, நித்ய ஹோமம், பிரம்மோத்சவம், முச்சந்தி பூஜை செய்யப்பட வேண்டும் என்றும், இங்ஙனம் செய்யப்படும் பூஜை முதலில் வராகப் பெருமாளுக்கு செய்யப்பட்ட பின்தான் ஸ்ரீநிவாசப் பெருமாளுக்கு செய்ய வேண்டும் என்றும், யாத்திரை செய்பவர்கள் முதலில் வராக தீர்த்தத்தில் நீராடி, வராகப் பெருமாளை வணங்கிய பின்தான் ஸ்ரீநிவாசனை வணங்க வேண்டும் என்றும் வரையறை செய்தார். மேலும், வராகப் பெருமாளுக்கு ஒரு உத்ஸவ மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்து ஒரு நாள் அத்யயன உத்ஸவமும், ஸ்ரீ வராக ஜெயந்தி அன்று (திருமலையில் ஸ்ரீவராகர் தோன்றிய ஐப்பசித் திருவோணத் தினத்தன்று) சிறப்பாக உத்ஸவமும் நடத்தி வைத்தருளினார். இன்றும் அப்படியே நடந்து வருகிறது.



*ஸ்திதே மநஸிஸுஸ்வஸ்தேஸரீரேஸதியோ நர:*
*தாதுஸாம்யே ஸ்தித் ஸ்மர்த்தா விச்வரூபஞ்ச மாமஜம்*
*ததஸ்தம் ம்ரியமானம்து காஷ்டபாஷாண ஸந்நிபம்*
*அஹம் ஸ்மராமி மத்யக்தம் நயாமீ பரமாம் கதிம்*

“ஒருவன் தன் சரீரம் நல்ல நிலைமையில் இருக்கும் போதே எம்பெருமானை நினைத்து பக்தி செய்தானாகில் அவன் மரணமடைகிற சமயத்தில் வியாதியின் கொடுமையால் தன் நிலைகெட்டு மரக் கட்டை போல இருந்தாலும் அவனை நானே நினைத்துப் பரகதியில் சேர்ப்பிப்பேன்” என்று அருளினார்.

திருக்கச்சி நம்பிகள் மூலமாக காஞ்சி தேவப் பெருமாள் ஸ்ரீராமாநுஜருக்கு அருளிய ஆறு வார்த்தையில் “அந்திமஸ்நகி வர்ஜனம்” என்று சரணாகதனுக்குக் கடைசி நிமிஷச் சிந்தனை தேவையில்லை என்று கூறுகிறார். பெருமாள் தரும் இவ்வுறுதியை உட்கொண்டதே வராக சரம சுலோகம். சரணாகதியின் எளிமையைப் பறைசாற்ற இதைவிட வேறு எந்த சாட்சியும் வேண்டாம். நாம் அவனை மறக்காதிருக்க ஞானம் கொடுத்து, அதனால் அவன் திருவடிகளிலே சரணாகதி பண்ண வைத்து நம்மை உய்வித்த எம்பெருமானாரை சாஸ்திர தாத்பர்ய ஞானத்தின் சீர்மையில் திளைத்தவர் என்று தன் இராமாநுஜ நூற்றந்தாதியில் போற்றுகிறார் அமுதனார்.

### அபிமானம், உபமானம் இல்லாதவர்

ஆண்டாள், நாச்சியார் திருமொழியில் (11–8) *“...மானமிலாப் பன்றியாய்”* என்று அருளியுள்ளாள். அதில் வராகரை “மானமிலாப் பன்றி” என்று இரு வகைப் பொருள் ஆகும் ஈஸ்வரன் என்ற செருக்கு சிறிதும் இல்லாமல் பன்றிக் கூட்டத்தோடே இரண்டறக் கலந்த எளிமையே அபிமானமிலாப் பன்றியாகக் கூறப்படுகிறது. உபமானமிலாப் பன்றி என்றால் நிகரற்றப் பன்றி என்று பொருள். இவனைப்போல உலகில் வேறு ஒரு பன்றி இல்லை என்றும் போற்றப் படுகிறான். ஸ்ரீராமாநுஜரும் அபிமானமும், உபமானமும் இல்லாத அவதார புருஷராக அவதரித்தும் உலகத்தில் மனிதரைப் போன்று வாழ்ந்து எதிலும் பற்றின்றி அபிமானமில்லாமலே வாழ்ந்து காட்டினார்.

– திருமதி பட்டம்மாள் ஜெகந்நாதன்,
சென்னை, 97909 38925



# ஆரோக்கியமும் நலமும் நல்கும் ஏழுமலையான்

– திரு. அத்தி ரங்கராஜன்,
திருப்பதி, 98490 99246

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது யாவரும் அறிந்ததே. கோடிக்கணக்கான பொற்காசுகளை விட ஆரோக்கியமான வாழ்வே நிறைவளிக்கும் என்பது இதன் பொருள். இன்றைய நாளின் வாழ்வியல் முறையும், அவை அள்ளிக் கொடுக்கும் நோய்களும், தின்பண்டங்களின் குறைந்த தரமும், மாசு நிறைந்த சுற்றுப்புறச் சூழலும் பார்த்தால் நோயற்ற வாழ்வு என்பதே ஒரு பகல் கனவு போல தெரிகிறது. நோய்கள் அண்டா மல் உடலையும், மனதையும் பேணிக் காப்பது என் பது உண்மையிலேயே ஒரு பெரிய எதிர்பார்ப்பு தான், ஏன் பேராசை என்றும் சொல்லலாம்.

எத்தனையோ பேர் கைநிறைய மாத்திரைகளை வாய் நிறைய அள்ளிப் போட்டுக்கொண்டு நலமான வாழ்வை கோருகிறார்கள். ஆனால், இது ஒரு தினசரி நிகழ்வாகவே போய், வாழ்நாள் முழுவதும் மாத்திரையும் கையுமாக அலைய வேண்டி இருக்கிறது.

*"வைத்தியோ நாராயண ஹரி"*

இது மருத்துவரின் பெருமையைக் கூறும் பழமொழி. அதாவது, வைத்தியன் என்பவன் பிணிகளைப் போக்கும் நாராயணனைப் போன்றவன் என்று பொருள். கடவுளைப் போல் மனிதர்களை காக்கும் மருத்துவர்களை அந்த நாராயணனுக்கே இணையான இடத்தில் நிறுத்துகிறது இந்த சொல்.

இதில் மறைந்திருக்கும் இன்னொரு பொருள் என்னவென்றால் நாராயணனைப் போல் ஒரு மருத்துவன் இல்லை என்பது தான். உலகையே காத்திடும் அந்த நாராயணன் எனும் பரம்பொருளே இங்குள்ள அனைவரின் ஆரோக்கியத்தையும் காக்கும் முதல் மருத்துவன், நலம் கோருபவன், நீண்ட ஆயுள் வழங்குபவன் என்று பொருள்.

குடும்பத்தில் அனைவரின் நலமான வாழ்விற்காகவே இங்கு ஒவ்வொருவரும் துடிதுடிக்கின்றனர். கடவுளை மனமுருகி வேண்டடினாலும் பிறப்பு, இறப்பு, மூப்பு, பிணி போன்றவை மனிதனை அண்டாமல் விடுமோ? இருப்பினும், கொடிய நோய்களைப் போக்கி, ஆரோக்கியமான, வளமான வாழ்விற்காகப் பரிதவிக்கும் ஒவ்வொருவருக்கும் அந்த கலியுக கண் கண்ட தெய்வமான ஸ்ரீநிவாசன் அருள்பாலிக்கிறான்.

பக்தர்களின் மீது தனது ஆசிகளைப் பொழிவது மட்டுமின்றி, கொடிய நோய்வாய்பட்டவர்களின் இன்னல்களைப் போக்குவதில் தனது திருமார்பில் அமர்ந்திருக்கும் மஹாலட்சுமியையும் கருணைபுரிய வைக்கின்றார். பக்தர்களின் மருத்துவ அவசியங்களையும் தீர்த்து வைக்கிறார்.

தி.தி.தேவஸ்தான அறக்கட்டளையினர் இன்றல்ல, நேற்றல்ல, மக்களின் துயரத்தைப் போக்கும் பணியை என்றோ கையில் எடுத்தனர்.

திருமலை திருப்பதி தேவஸ்தானத்திற்கு வேங்கடாசலபதி கோயிலை நிர்வகிக்கும் வேலை

மட்டுமல்ல, பக்தர்களின் கண்ணீரை துடைப்ப தும், பெருமாளை நம்பினாரின் நம்பிக் கையைக் காப்பதும் அவர்களின் கூடுதல் பொறுப்பு. அதனால்தான் அவர்கள் பல்வேறு மருத்துவமனைகளையும் கட்டி, மக்களின் நலன் காக்கும் பணியையும் மேற்கொள் கிறார்கள்.

திருப்பதியில் அமைந்துள்ள "ஸ்ரீவேங்கடேஸ்வரா பன்னோக்கு மருத்துவ பல்கலைக்கழகம்" (ஸ்விம்ஸ்) தேவஸ்தானத் தினரால் 1983ஆம் வருடம் நிறுவப்பட்டது. நோய்வாய்ப்பட்ட மக்களுக்கு ஈடற்ற நம்பிக்கையை ஊட்டும் வகையில் திருமலை யின் அடிவாரத்தில் அலிபிரியில் இந்த உயர்தர மருத்துவமனை அமைந்திருக்கிறது.

மக்களுக்கு நலம் பேணுவதற்கு மட்டும் அல்லாமல், இளைய மருத்துவர்களை தயார் படுத்துவதற்கும், அவர்களை ஆராய்ச்சியில் ஊக்குவிப்பதற்கும் சேர்த்துதான் இந்த ஸ்விம்ஸ் நிறுவப்பட்டது.

இன்று இந்திய அளவில் அரசாங்கத் துறையில், 34 வருட கல்வி, மருத்துவம், ஆராய்ச்சி அனுபவம் கொண்டு, குறைந்த கட்டணத்திலோ அல்லது ஏழை எளியோருக்கு இலவசமாகவோச் சேவை செய்யும் ஒரே பன்னோக்கு மருத்துவ பல்கலைக்கழகம் இது தான் என்று சொன்னால் அது மிகையாகாது. இங்கு 42 துறைகளில் 31 வகையான முதுநிலை பட்டதாரி பாடப்பிரிவுகளுக்கான பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.

தென் இந்தியாவின் முதல் மகளிர் மருத்துவக் கல்லூரியும் இதுவே. கொரோனா பெருந் தொற்றின்போது ஆந்திர மாநிலத்திலேயே சிறப்பான சேவை அளித்ததற் கான அங்கீகாரம் பெற்ற மருத்துவமனையும் இதுவே. ஆசியாவிலேயே மிகப்பெரிய டயாலிசிஸ் நிலையமும் இதுவேயாகும் எனலாம்.

புற்றுநோய் பிரிவில் 19 வருடகால பயிற்சியளிக்கும் ஆந்திர மாநிலத்தின் ஒரே மருத்துவமனை. தற்பொழுது 300



## திருமலை தரிசனத்தில் மூத்த குடிமக்களும் மாற்றுத்திறனாளிகளும்...

**மூத்தக்குடிமக்கள், அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் நிறுவிய ஒரு தரிசன முறை இது. அவர்கள் தேவஸ்தானத்தின் இணைய தளத்திற்குச் சென்று முன்பதிவு செய்து கொண்டு திருமலைக்கு வர வேண்டும். தெற்கு மாட வீதியில் அமைந்துள்ள திருமலை நம்பிகள் சன்னதி அருகில் இருக்கும் கூடத்திலிருந்து மதியம் தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுவர்.**

**65 வயது நிறைந்தவர்கள் மூத்தக்குடிமக்களாகக் கருதப்படுவார்கள். அவர்களுடன் அவரது துணைவன் அல்லது துணைவியைக் கூட்டிச் செல்ல அனுமதிப்பர். இதற்கான தரிசன டோக்கன் பெற்றவர்கள் ஆதார் அட்டையை எடுத்துக் கொண்டு செல்ல வேண்டும். அதேபோல், மாற்றுத் திறனாளிகள் அவர்களுக்கு அரசு வழங்கிய மருத்துவச் சான்றிதழைக் கொண்டு செல்ல வேண்டும்.**

**இது போலவே, இதயம், மூளை, கல்லீரல், முதுகுத் தண்டு அறுவைச் சிகிச்சை ஆனவர்கள், சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை, டயாலிசிஸ் மற்றும் புற்று நோய் உறுதியானவர்கள் தங்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவ நிபுணரின் தகுந்த சான்றிதழுடன் வர வேண்டும். அவர்களுடன் அவரது கணவன் அல்லது மனைவியைக் கூட்டிச் செல்ல அனுமதிப்பர்.**

படுக்கை வசதியுடன், அதிநவீன தொழில்நுட்பம் நிறைந்த இயந்திரங்களும் கொண்டு ஒரு சர்வதேச அளவிலான புற்றுநோய் ஆராய்ச்சி மற்றும் மருத்துவமனையும் நடத்துகிறது.

தேசிய அளவில் சிறப்பான மருத்துவ மனைகளுக்கும், சிகிச்சை நிறுவனங்களுக்கும் அங்கீகாரம் அளிக்கும் என்.ஏ.பி.எச். என்ற நிறுவனத்திடமிருந்து அங்கீகாரம் பெற்ற அரசுத் துறையில் நடத்தப்படும் ஒரே மருத்துவ மனையும் இதுவே. மேன்மையான கூட்டு ஆராய்ச்சிகளுக்காக ஸ்விம்ஸ் பல்கலைக்கழகம், அரவிந்த் கண் மருத்துவமனையுடனும், டாடா குழுமத்தை சேர்ந்த ஸ்ரீ வேங்கடேஸ்வரா புற்றுநோய் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சியகத்துடனும் ஒப்பந்தங்கள் கையெழுத்து இட்டுள்ளது. இவையெல்லாம் கல்வி, ஆராய்ச்சி போன்ற விஷயங்களில் இந்த மருத்துவ பல்கலைக் கழகம் இமாலய உயரத்தை எட்டியுள்ளதை காட்டுகிறது. அதேபோல், நோயாளிகளின் நலன் மற்றும் சேவை என்னும் அடிப்படையில் பார்த்தாலும் ஸ்விம்ஸ் ஒரு தனித்துவத்தை அடைந்துள்ளது.

2025ஆம் ஆண்டில் மட்டுமே 26.97 லட்சம் சிகிச்சைக்கு வந்தோரில் 5 லட்சத்து 40 ஆயிரம் வெளி நோயாளிகளையும், 64 ஆயிரத்துக்கும் மேலான உள் நோயாளிகளையும் கையாண்டு, 21 ஆயிரம் அறுவை சிகிச்சைகளை வெற்றிகரமாக முடித்துள்ளனர்.

இந்த மருத்துவ பல்கலைக்கழகத்தின் இயக்குனர் மற்றும் துணை வேந்தர் டாக்டர் ஆர்.வி. குமார் அவர்களின் தலைமையில், முதல்முறையாக "ட்ரிப்புள் ட்ரான்ஸ் பிளான்ட்" எனப்படும் மூன்று மாற்று அறுவை சிகிச்சைகளை (இருதயம், கல்லீரல், சிறுநீரகம்) ஒரே நேரத்தில் கையாண்டனர். இந்த அறுவை சிகிச்சை இதுவரை எய்ம்ஸ் எனப்படும் அகில இந்திய மருத்துவ பல்கலைக்கழகத்தில் கூட செய்தது இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஏழை நோயாளிகளுக்கு பன்னோக்கு மருத்துவ சிகிச்சைக்கு "டாக்டர் என்.டி.ஆர். வைத்திய சேவை" திட்டத்தால் ஆந்திர அரசு நிதி உதவி அளிக்கிறது. 3,713 சிகிச்சை முறைகளுக்கு இந்த திட்டம் விரிவாக் கப்பட்ட நிலையில், 28,152 நோயாளிகளுக்கு 129.75 கோடி ரூபாய் மதிப்பிலான அறுவை சிகிச்சைகளை ஸ்விம்ஸ் ஒரே வருடத்தில் வெற்றிகரமாக நடத்தி இருக்கிறது. மேற்கூறப்பட்ட திட்டத்தின் கீழ் வராத சிகிச்சை முறைகளுக்கு இறைவனே நேரில் வந்து வேங்கடேஸ்வரா பிராணதானம்" திட்டத்தின் கீழ் 2,292 நோயாளிகளுக்கு 11.23 கோடி ரூபாய் நிதி உதவியை தி.தி.தே. அளித்துள்ளது.

இப்படி ஏழை எளியோரின் கண்ணீரைத் துடைப்பதிலும், அவர்களின் தீரா நோய்களுக்கு வைத்தியம் அளிப்பதிலும், திருமலை திருப்பதி தேவஸ்தானம் "வைத்தியோ நாராயணோ ஹரி:" எனும் சொல்லுக்கு முன்மாதிரியாகத் திகழ்கிறது.

டயாலிசிஸ் எனப்படும் சிறுநீரகக் கோளாறுக் கான சிகிச்சை முறையிலும் ஸ்விம்ஸ் தென்கிழக்கு ஆசியாவிலேயே மிகப்பெரிய மருத்துவமனை யாகத் திகழ்கிறது. 2017ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்த டயாலிசிஸ் மையத்தில் தினமும் சிகிச்சை பெறுவோருக்கான 100 இயந்திரங்கள், அதி தீவிர சிகிச்சை பெறுவோருக்காக 25 நவீன இயந்திரங்க ளும் உள்ளன. 2025ஆம் ஆண்டில் மட்டுமே ஹீமோ டயாலிசிஸ் எனும் முறையை 1 லட்சத்து 39 ஆயிரம் தடவை செய்துள்ளது.

நோயாளி உயிர் பிரிந்து அவர்களின் குடும்பத்தி னருக்கு அந்த பூத உடலை எடுத்துக்கொண்டு வீடு திரும்பிடக்கூட காசு இல்லாத நிலை ஏற்படலாம். இடி விழுந்தாற்போல் நிலைகுலைந்து நிற்கும் அந்த ஏழை குடும்பத்தாருக்கு இலவசமாக அமரர் ஊர்தி களை போக, வர என 200 கிலோமீட்டர் வரையிலான தூரத்திற்கு இலவசமாக, ஒரு நாளுக்கு மூன்று பேருக்கு இந்த உதவி அளிக்கப்படுகிறது.

தொடரும்...

**2026, அக்டோபர் மாதப் பண்டிகைகள் மற்றும் பருவ தினங்கள்**

| | |
|---|---|
| 10 | மஹாளய அமாவாசை. |
| 12-20 | திருமலையப்ப ஸ்வாமி நவராத்திரி பிரம்மோத்ஸவம், திருச்சானூர் ஸ்ரீபத்மாவதித் தாயார் நவராத்திரி உத்ஸவம். |
| 16 | திருமலையப்ப ஸ்வாமி கருட சேவை. |
| 17 | சரஸ்வதி பூஜை. |
| 19 | துர்காஷ்டமி, மஹாநவமி. |
| 20 | விஜய தசமி, வேதாந்த தேசிகர் சாத்துமுறை. |
| 26 | திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி அன்ன அபிஷேகம். சத்ரவாடா ஸ்ரீகரிவரத ராஜ ஸ்வாமி பவித்ரோத்ஸவம். |

# ஸ்ரீவாரிசேவையில் மருத்துவர்கள்


நமது வைணவ சாஸ்திரங்களில் சேவையே தலையாய தர்மமாகக் கருதப்படுகிறது. இந்து சனாதன தர்ம சித்தாந்தங்களில் சேவை ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றது."மானிட சேவையே மாதவன் சேவை" சுயநலமற்ற அல்லது எந்த ஒரு பலனையும் எதிர்பாராமல் பிறருக்குச் செய்யும் சேவையானது பகவானுக்கே கைங்கர்யம் செய்தாற் போலாகும் என்று கூறப்படுகிறது.

## ஸ்ரீவாரி சேவையின் தோற்றம்

திருமலையில் பக்தர்களின் சேவைக்காக தி.தி.தே. 1998 ஆம் ஆண்டு முதன் முதலாக "ஸ்ரீநிவாச சேவை" என்னும் பக்தர்களே பிற பக்தர்களுக்கு சேவை செய்யும் தன்னார்வ சேவை திட்டத்தை கொண்டு வந்தது. அன்று 200 சேவகர்களைக் கொண்டிருந்த இத்திட்டத்தில் இன்று 2000 திற்கும் மேலான பக்தர்கள் பங்கு கொண்டு, தினமும் திருமலைக்கு வரும் பல்லாயிரக்கணக்கான பக்தர்களுக்குச் சேவை புரிகின்றனர். வைகுண்ட ஏகாதசி, ரத சப்தமி, பிரம்மோத்ஸவம், கோடை கால விடுமுறை போன்ற நாட்களில் சேவகர்களின் எண்ணிக்கை இரு மடங்கு அதிகரிக்கும்.

## மானிட சேவையே மாதவன் சேவை

"பக்தர்களுக்கு செய்யும் தொண்டே பகவானுக்குச் செய்யும் சேவை" என்பது சாஸ்திர வாக்கு. இதனை மெய்ப்பிக்க தி.தி.தே. "ஸ்ரீவாரி சேவை : தன்னார்வத் தொண்டு" என்னும் திட்டத்தைத் துவங்கியது. உலகம் முழுவதிலிருந்தும் பக்தர்கள் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி சக பக்தர்களுக்கு சேவை புரிந்து வருகின்றார்கள்.



கடந்த 28 ஆண்டுகளில் உலகெங்கிலிருந்தும் சுமார் 12.50 லட்சத்திற்கும் மேற்பட்ட ஸ்ரீவாரி சேவகர்கள், திருமலைக்கு வரும் பக்தர் களுக்கு சுயநலமற்ற தன்னார்வத்தொண்டு புரிந்து உள்ளனர்.

## சீருடை

பெண்கள் : மெரூன் பார்டர் கொண்ட ஆரஞ்சு வண்ணப்புடவை, மெரூன் பார்டர் கொண்ட இரவிக்கை/ஆரஞ்சு வண்ண குர்தா, மெரூன் வண்ண பைஜாம், மெரூன் வண்ண சுடிதார். ஆண்கள் : வெள்ளை சட்டை, வெள்ளை பேண்ட்–வேஷ்டி அணிதல் வேண்டும்.

## இணையதளம் வழி விண்ணப்பம்

இந்துக்கள் மட்டுமே ஸ்ரீவாரி சேவைக்கு விண்ணப்பிக்கலாம். ஸ்ரீவாரி சேவையில் பங்கு கொள்ள இணைய தளத்தின் மூலமாக "https://ttdevasthanams.ap.gov.in/srivari-seva/instructions" எனும் வளைதளத்தில் பதிவு செய்ய வேண்டும். மேலும் வழிகாட்டுதல்கள் தி.தி.தே. வளைதளத்தில் பெறலாம். 7 நாட்கள் சேவை செய்ய (தனியாகவோ/ குழுவாகவோ) 18–60 வயதுக்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

## திருப்பதியில் ஸ்ரீவாரி சேவை

திருமலையில் ஸ்ரீவாரி சேவையின் வெற்றிப் பயணத்தை முன்னிட்டு 2014 ஆம் ஆண்டு இச்சேவை திருப்பதியிலும் தொடங்கப்பட்டது.

திருப்பதி, திருச்சானூர், ஸ்ரீநிவாச மங்காபுரம், அப்பளாயகுண்டா, எஸ்.வி. கோ சாலை, தி.தி.தே. மருத்துவமனை, தி.தி.தே. ஓய்வு விடுதிகள், அன்னப்பிரசாத வளாகம், திருமலை திருப்பதி தேவஸ்தானத்திற்கு உட்பட்ட பிற ஆலயங்கள் (உற்சவக் காலங்கள்) என பல இடங்களி லும் ஸ்ரீவாரி சேவகர்கள் தொண்டு புரிகின்றனர்.

### சேவை செய்யும் சில பொது இடங்கள்

- பக்தர்களின் கூட்டத்தைக் கட்டுப்படுத்த தரிசன கியூ வரிசை மற்றும் காத்திருக்கும் கட்டிடத் தொகுதி
- வைகுண்டம் கட்டிடத்தொகுதி, நாராயணகிரி தோட்டம் ஓய்வு கூடாரம், தரிசன வரிசை, பிரசாத வளாகம் முதலிய இடங்களில் தண்ணீர், மோர், பால், அன்னப் பிரசாதங்களை பக்தர்களுக்கு பரிமாறும் பொறுப்பு.
- மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா அன்னப்பிரசாத கூடத்தில் உணவு பரிமாறும் சேவை.
- பக்தர்களின் உடைமைகளை ஸ்கேன் செய்தல்.
- பகவானுக்கு பூமாலை கட்டும் சேவை.
- ஆன்மீக புத்தகங்கள், தி.தி.தே. காலண்டர், தி.தி.தே. உற்பத்தி செய்யும் பொருட்கள், உலர் மலர் தொழில் நுட்பத்தால் செய்யப்பட்ட அகர்பத்திகள் விற்கும் சேவை.
- தரிசன வரிசை மற்றும் மருத்துவமனையில் முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு உதவும் சேவை.
- தேங்காய் விற்கும் சேவை மற்றும் லட்டு பிரசாத கௌண்ட்டரில் துணிப்பைகளை விற்கும் சேவை.
- லட்டு மற்றும் அன்னப்பிரசாதத்திற்காக முந்திரியைப் பிரித்தல்.
- நிர்வாகத்தை மேலும் சீர்ப்படுத்த பக்தர்களிடமிருந்து ஆலோசனைகளைப்

## ஸ்ரீவாரி வைத்திய சேவை



திருவேங்கடவனைத் தரிசிக்க வரும் பக்தர்களுக்கு மருத்துவர்களும் தொண்டு செய்திடும் வகையில் "ஸ்ரீவாரி வைத்திய சேவை" என்றொரு புதிய திட்டத்தை தி.தி.தே. அண்மையில் ஆரம்பித்தது. இது இந்தியா மட்டுமின்றி உலகெங்கிலும் உள்ள புகழ் பெற்ற மருத்துவர்கள் தங்கள் அறிவாற்றலை திருப்பதியில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளுக்கு அளிக்க உதவுகிறது. தன்னார்வத் தொண்டு புரிய நினைக்கும் மருத்துவர்கள் தங்கள் பெயரை இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்து கொள்ள வேண்டும். அதன் பிறகு, குறிப்பிட்ட நாட்களில் திருப்பதிக்கு வந்து தேவஸ்தான மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளிகளுக்கு மருத்துவம் செய்யலாம்.

தி.தி.தேவஸ்தான மருத்துவமனைகளில் தகுதி பெற்ற மருத்துவர்கள் இருந்தாலும், உலகளாவிய புகழ் பெற்ற மருத்துவர்களின் ஆலோசனை இவர்களுக்கு கிடைக்க இத்திட்டம் உதவுகிறது.

திருமலை திருப்பதி தேவஸ்தானம் நடத்தும் ஸ்விம்ஸ், பர்ட், பத்மாவதி இருதயாலயம் மற்றும் ஆயுர்வேத மருத்துவமனை மற்றும் கல்லூரிகளில் பதிவு செய்த மருத்துவர்கள் தொண்டாற்றலாம். இந்தியாவில் மட்டுமின்றி, வெளி நாடுகளில் இருந்தும் கூட இங்கு தொண்டாற்றுவதற்கு மருத்துவர்கள் விருப்பம் தெரிவித்து தங்கள் பெயர்களை பதிவு செய்து கொள்கிறார்கள். இது மட்டுமின்றி, அவர்கள், ஆன்லைன் மூலம் பாடங்கள் எடுக்கவும், சிறப்பு சொற் பொழிவு ஆற்றவும் கூட செய்கிறார்கள். இது தி.தி.தே. நடத்தும் மருத்துவ கல்லூரி மாணவர்களுக்கு அவர்களின் ஆற்றலை மேன்மேலும் வளர்த்துக் கொள்ள ஒரு அபூர்வ அவகாசமாகப் பார்க்கப்படுகிறது.

**மருத்துவர்களே வாருங்கள்!**
**பிறப்பறுக்கும் மருத்துவனான வேங்கடவனின் பக்தர்களுக்குத்தொண்டாற்றுவோம்!!**

# வேங்கடத்தை வணங்கு!


திரு.எஸ். சுதர்சனம்,
நங்கை நல்லூர்,
9962788065

வேம் என்றால் பாபங்கள். கட என்றால் நாசமாதல். பாபங்கள் நாசமடையும் இடம் வேங்கடம். *''அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல் மங்கை உறை மார்பன்''* என பிராட்டியைத் தன் திருமார்பில் எப்போதும் வைத்து மகிழ்பவன். ஆதலால் "திருவேங்கடவன்". அவன் நித்யவாஸம் செய்யும் வேங்கடம் என்னும் மலையைத் தொழுதாலே நம் பாவங்களெல்லாம் அழியும் என்கிறார் திருமழிசையாழ்வார்.

*''சேணுயர் வேங்கடம்''* என்று ஓங்கிய சிகரங்களையுடைய திருமலையின் புகழ்பாடுகிறார். ஸப்தகிரி – ஏழுமலை என்றெல்லாம் புகழப்படும் மலை (நான் முகன் திருவந்தாதி 42),

*சென்று வணங்குமினோ சேணுயர்வேங்கடத்தை, நின்று வினை கெடுக்கும் நீர்மையால் -என்றும்*
*கடிக்கமல நான் முகனும் கண் மூன்றத்தானும், அடிக்கமலமிட்டேத்தும் அங்கு*

பாபங்களைச் சுட்டெரிப்பதால், "போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்" என்பதால் வேங்கடாத்ரி. ஆதிசேஷனே மலை உருவில் தோன்றி திருமாலுக்குக் கைங்கர்யம் செய்வதால் சேஷாத்திரி. மலை உருவில் எல்லா வேதங்களும், திருவேங்கடவனின் புகழைப் பாடுவதால் வேதாத்ரி என்றும், வேதகிரி என்றும் அழைக்கப்படுகிறது. பெரிய திருவடி கருட பகவான் இம்மலையை ஸ்ரீவைகுண்டத்திலிருந்து எடுத்து வந்து வைத்ததால் கருடாத்ரி. விருஷபாசுரன் என்னும் அரக்கன் இம்மலையில் மோக்ஷம் பெற்றதால் வ்ருக்ஷபாத்ரி. சிறிய திருவடி, அனுமனின் தாய் அஞ்சனை, தவம் செய்து ஆஞ்சநேயனைப் பெற்றதால் அஞ்சனாத்ரி. ஆதிசேஷனும் வாயு தேவனும் பலத்தில் இருவரும் சமமானவர்களே என்று பகவானின் திருவருள் பெற்றதால் ஆனந்தாத்ரி.



*''ஆடு தாமரை யோனும் ஈசனும் அமரர் கோனும் நின்றேத்தும் வேங்கடம்''* என்பதற்கேற்ப, எம்பெருமானின் நாபிக் கமலத்திலிருந்து தோன்றிய நான்முகனான பிரம்மாவும், முக்கண்ணனான சிவபெருமானும், திருவேங்கடமுடையானின் திருவடிகளில் தாமரை மலர்களிட்டு வணங்கித் துதிப்பார்கள். ஏழுமலையானின் துயரறு சுடரடிகளைப் பணிவதால் நம் பாவங்கள் அழியும் என்பதால் திருவேங்கடம் சென்று வணங்குமினோ என்று நமக்கு உபதேசம் செய்கிறார். நீர்மை என்னும் குணமுடையவன் திருவேங்கடவன் என்கிறார். தன்னை வணங்குபவர்களிடம் நீங்காது தங்குபவன். அவர்கள் விட்டு அகலாதவன். அவர்கள் செய்த பாவங்களைப் போக்கி நல்வழிப் படுத்தும் ஸ்வபாவம் உடையவன் என்கிறார். துன்பம் வரும் போது நழுவவிடாதவன். தான் அருளிச் செய்த திருச்சந்த விருத்தத்தில் *''வேங்கடம், அடைந்த மால பாதமே, அடைந்து நாளும் உய்ம்மினோ''* என்று உபதேசம் செய்கிறார். மண்ணுலகில் வாழும் நமக்கு

மட்டுமல்ல. ஸ்ரீவைகுண்டத்தில் பகவானுக்கு ஒழிவில் காலமெல்லாம் வழுவிலா அடிமை செய்து வாழும் நித்ய சூரிகளும் பக்தியுடன் திருவேங்கட மலையையே வணங்குகின்றார்கள் என்கிறார். உடல் நோய்களைத் தீர்த்து ஒழித்துக் கட்டுவதும் திருவேங்கட மலையே என்கிறார் (நான்முகன் திருவந்தாதி 48),

*வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்*
*வேங்கடமே மெய்வினை நோய் தீர்ப்பதுவும்!*

*''வேங்கட மாமலை ஒன்றுமே தொழ நம் வினை ஒழுமே''* என்பது ஸ்வாமி நம்மாழ்வாரின் உபதேசம். ஆழ்வார்களின் அருளிச் செயல்களில் மூழ்கி எழுந்த அழகிய மணவாள தாசர் என்ற பிள்ளைப் பெருமாளும்,

*நோவினையும் நோயினையும் நோய் செய்*
*வினையையும் வீவினையும் தீர்த்தருளும் வேங்கடமே*

என்று பாடுகிறார். ஸ்வாமிதேசிகனும் *''கடுவினையர் இருவினையும் கடியும் வெற்பு''* (அதிகார சங்கிரகம் 43) என்று பாடுகிறார்.

"கோவிந்தா'' என்று பக்தர்களிடும் கோஷம் கேட்குமிடம் திருவேங்கடமலை. மண்ணுலகில் இருந்து விண்ணுலகம் சென்று தேவர்களையும் மகிழ்விக்கும் ஒப்பற்ற பகவந் சங்கீர்த்தனம், பக்தர்கள் விரும்பிவந்து சேர்ந்திடும் மலை திருமலை என்கிறார் திருமழிசை ஆழ்வார். *''பேணி வரும் வேங்கடவா!''* என்று பாடுகிறார். கலியுக வரதன் வீற்றிருக்கும் திருமலை "பக்தி க்ஷேத்ரம், முக்தி க்ஷேத்ரம்" தீர்த்த க்ஷேத்ரம். ஆகவே *''என் உள்ளம் புகுந்தாய்''* என்கிறார் (நான்முகன் திருவந்தாதி 41),

*காணலுறுகின்றேன் கல்லருவி முத்துதிர*
*ஓணவிழவில் ஒலி அதிர பேணி*
*வருவேங்கடவா என்னுள்ளம் புகுந்தாய்*
*திருவேங்கடமதனைச் சென்று*

ஸ்வாமி புஷ்கரணி, சேஷாசல ஸ்வாமி தீர்த்தம் (வராக தீர்த்தம்), கோனேரி தீர்த்தம், வைகுண்ட தீர்த்தம், சக்ர தீர்த்தம், ஜாபாலி தீர்த்தம், வருண தீர்த்தம், ஆகாச கங்கை, பாப விநாச தீர்த்தம், பாண்டவ தீர்த்தம், குமாரதாரைத் தீர்த்தம், ஸ்ரீராமகிருஷ்ண தீர்த்தம், தும்புரு தீர்த்தம், சுகஸந்தான தீர்த்தம், யுத்தகலா தீர்த்தம், சீதம்மா தீர்த்தம், ஸ்வர்ணமுகி ஆற்றுத் தீர்த்தம் என்று பல புண்ணியத் தீர்த்தங்களும், நீர்வீழ்ச்சிகளும் காட்சி அளிப்ப தால் *''கல்லருவி முத்துதிர''* என்று பாடுகிறார். மங்களா சாசனம் எங்கும் கேட்கும்படி ஓடி விழும் பவித்திரமான தீர்த்தங்கள் நிறைந்த மலை. பகவான் அவதரித்த

அண்மைக் காலமாக திருமலைக்கு நடந்து வரும் பக்தர்களிடையே இதய நோய் சம்மந்தப்பட்ட நோயாளிகளே அதிகமாக இடம் பெறுகின்றனர். இதன் காரணமாக பக்தர்களுக்கு தி.தி.தே. சில ஆலோசனைகளை வழங்கி வருகிறது. பக்தர்கள் தங்களின் ஆரோக்கிய நலனைக் காத்திட பின்வரும் ஆலோசனைகளைக் கடைபிடிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

- **60 வயதிற்கு மேற்பட்டோர், நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம், ஆஸ்துமா, வலிப்பு, கீல்வாதம் போன்ற நோய்களால் பாதிக்கப் பட்டோர் மலை ஏறுவதைத் தவிர்க்கவும்.**
- **இதயத்தில் ஸ்டென்ட் பொருத்தப்பட்டவர்கள், உடல் பருமனானவர்கள் மலை ஏறுவதைத் தவிர்க்கவும்.**
- **மலை ஏறும்போது ஏற்படுகின்ற மன அழுத்தம் மற்றும் மிக உயரத்தில் குறை வான ஆக்சிஜன் செறிவும் இதய பாதிப்பு மற்றும் ஆஸ்துமாவை மேலும் மோசமாக்கலாம்.**
- **நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்ட பக்தர்கள் தாங்கள் வழக்கமாகப் பயன் படுத்தும் மருந்துகளைத் தவறாமல் தங்களுடன் கொண்டு வருதல் வேண்டும்.**
- **மருத்துவ உதவி தேவைப்படும் பட்சத்தில் அலிபிரி நடைபாதையில் உள்ள படி எண். 1500, காலி கோபுரம் மற்றும் இராமாநுஜர் சன்னதி அருகில் உள்ள மருத்துவ மையங்களைத் தொடர்பு கொள்ளவும்.**
- **திருமலையில் 24/7மணி நேரமும் அஸ்வினி மருத்துவமனை/முதலுதவி மையங்கள் செயல்படுகின்றன.**
- **நாள்பட்ட சிறுநீரக பாதிப்பு உள்ளவர்களுக்கு அவசர டயாலிசிஸ் மருத்துவ சிகிச்சைக்கு திருப்பதி ஸ்விம்ஸ் மருத்துவமனையும் உள்ளது.**



திருவோணத் திருவிழா அவதார உத்ஸவ தினங்களில், தமிழிலும் வடமொழியிலும் நாலாயிர திவ்ய பிரபந்தமும், வேதபாராயணமும் எங்கும் நிறைந்திருக்கும் பெருமை பெற்ற திருமலை. திருவேங்கட மலை நமக்கு ஒரு “பெரிய நிதி” என்று உணர்த்துகிறார் (நான்முகன் திருவந்தாதி 45)

*“வானோர்க்கும். மண்ணோர்க்கும் வைப்பு”*

“வெற்பு” என்றால் “மலை”. பல மலைகளின் பெயரைச் சொன்னாராம். திருவேங்கட மலை என்று இடையில் சொன்னாராம். மோட்சம் பெற வழி வகுத்துக் கொண்டேன். சிறிய பதத்தை உச்சரித்தேன், ஸ்ரீவைகுந்தம் என்னும் பெரியபதம் கிடைத்து வியந்தேன் என்கிறார். என் திருப்தியை அளவிட முடியாது. வேதங்களால் புகழப்படும் மஹாலட்சுமியின் நாதனான பகவானின் திருவடிகளை அனுபவித்து மகிழ்கிறேன் என்கிறார் திருமழிசையாழ்வர் (நான்முகன் திவைந்தாதி 40)

*வெற் பென்று வேங்கடம் பாடினேன்,*
*வீடாக்கி நிற்கின்றேன் நின்று*
*நினைக்கின்றேன்-கற்கின்ற நூல் வலையில்*
*பட்டிருந்த நூலாட்டி கேள்வனார்*
*கால் வலையில் பட்டிருந்தேன் காண்*

*“குன்ற மேந்தி குளிர்மழை காத்த பிரான்...”* ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தில் கோகுலத்தை குளிர் மழையிலிருந்து காப்பாற்றியவன். கோவர்த்தன மலையை ஏழு நாட்கள் சுண்டு விரலால் தூக்கிப் பிடித்துக் காப்பாற்றியவன்.

கோவர்த்தன மலை, செய் நன்றி மறக்காமல், தானும் ஏதாவது செய்ய நினைத்து, ஏழுமலையாகி ஏழுமலையான் என்ற திருநாமம் தந்து, பகவானை மலை மேல்வைத்துக் கொண்டாடியதாம். *“நன் மணி வண்ணனூர்”* என்று திருவேங்கடத்தைப் புகழ்கிறார் திருமழிசையாழ்வார்.

*“நல்ல நீலமணி போன்ற திருக்கரத்தையும் ஸ்பாவத்தையும் உடையவன் ஊர்”* என்று பாடுகிறார் (நான் முகன் திருவந்தாதி 47). *“விலை மதிப்பற்றவன், அதேசமயம் ஸௌலப்பன் அமலன், திருவேங்கடம்”* என்று பெரியாழ்வார் பாட, *“சென்று வணங்குமினோ சேணுயர் வேங்கடத்தை”* என்று திருமழிசையாழ்வார் பாடி மகிழ்கிறார். வாருங்கள் திருமலை சென்று ஏழுமலையானை வணங்கி, மகிழ்ந்து வாழ்வோம். கோவிந்தா! கோவிந்தா ஹரி கோவிந்தா! வேங்கடம் அடை நெஞ்சமே.

## கோமாதா நம் குலமாதா



நமது இந்து சம்பிரதாயத்திலும், தர்ம சாஸ்த்திரங்களிலும், புராணங்களிலும், இதிகாசங்களிலும், பசுவை மேன்மையானதாகப் பறைசாற்றப்படுகிறது. தாய் தனது குழந்தைகளைக் காப்பது போல பசுவும் நம்மை காக்கின்றது. ஆகையினால்தான் பசுவை “கோமாதா” என்கின்றனர். ஒவ்வொரு மானிடனும் தன் தாய் தந்தையருக்கு சேவை புரிந்து தமது கடமையைச் செய்வது போல, மானிடரின் கோரிக்கைகளை நிறைவேற்றி அவனுடைய ஆயுள் ஆரோக்கியத்தைக் காக்கும் பசுவை காப்பதும் நமது தர்மமாகும்.

பசுவின் சரீரத்தில் பதினான்கு உலகங்கள் இருப்பதாகக் கூறுவர். எல்லா தெய்வங்களின் உருவாக வீற்றிருக்கும் பசு இந்துக்களால் வணங்கப்படும் தெய்வமாக விளங்குகிறது. நமக்கு அனைத்து செல்வங்களையும் கிடைக்க அருள வல்லது கோமாதா பூஜையே ஆகும். திருவேங்கடமுடையானின் அவதார வரலாற்றிலும் கூட, பசுதான் திருவேங்கடமுடையானை முதலில் தரிசித்து சீனிவாசனே கோவிந்தன் என்பதையும் நமக்கு காட்டியருளியது. புற்றிலே வீற்றிருந்த எம்பெருமானுக்கு தன் மடியிலிருந்த அமிர்தமான பாலை தானாகவே சுறந்து இறைவனின் பசியைப் போக்கியது. பசுவின் பால் மட்டுமல்லாமல் அதனுடைய கோமியமும், சாணமும் மானிடர்களுக்குப் பல வகைகளில் பயனளிக்கின்றது. பசுவானது மனிதன் உயிருடன் இருக்கும் பொழுது அவனுக்கு ஐஸ்வர்யம் அளிக்கின்றது. அவன் இறந்தாலும் “கோதானம்” செய்வதன் மூலம் உத்தம லோகத்தில் சேர்க்கின்றது.

*“மங்களம் தர்சனம் ப்ராதர் பூஜாநம் பரமம் சுபம் ஸ்பர்சனம் பரமம் தீர்தம் நாஸ்திதநு ஸமாக்வசித்”*

அதிகாலையில் பசுவைக் காண்பது மங்களகரமானதாகும். பூஜிப்பது மிகவும் நன்மையளிக்கும். பசுவைத் தொடுவது தீர்த்தத்தை சேவிப்பதற்குச் சமமாகும். பசுவிற்கு இணையானது ஒன்றுமில்லை.

***ஸ்ரீமத் சுந்தரஜாமாத்ரு முனிமானஸவாஸினே! ஸர்வலோக நிவாஸாய ஸ்ரீநிவாஸாய மங்களம்!!***

அகிலாண்டகோடி ப்ரஹ்ம்மாண்ட நாயகனான திருவேங்கடமுடையானே ஜீவாத்மாக்களை எப்போதும் காத்து அனைத்து நன்மைகளையும் அருள்பவன். அந்த எம்பெருமானை நொடிப் பொழுதாவது கண்டு வணங்க வேண்டும் எனும் விருப்பமில்லாதவராய் எவருமே இருக்க இயலாது. ***''வானவர் வானவர்கோனொடும் நமன்றெழும் திருவேங்கடம்''*** என்றும், ***''காடும் வானரமும் வேடுமுடை வேங்கடம்''*** என்றும் சொல்லுகிறபடி நித்யஸூரிகள் முதலாக இவ்வுலகத்து ஜீவராசிகள் ஈராக அனைவரும் விரும்பிவந்து பற்றத்தக்கதாகத் திருவேங்கடம் பெருமைகொண்டு விளங்குகிறது.

அம்மலையின் ஒரு பகுதி போன்றவனாய், கூடாரை வெல்லும் சீர் கோவிந்தனான திருவேங்கடமுடையானும் அனைவரின் சிந்தையையும் கவர்ந்து தன்பால் ஆதரம் பெருக வைக்கிறான். சாதாரண மனிதர்கள் அந்த எம்பெருமானைக் கண்டு வணங்கும்போது உலக வாழ்க்கைக்குத் தேவையான நன்மைகளை எல்லாம் ப்ரார்த்திக்கிறார்கள். ஆத்மாவை விவேகித்தறிந்த ஞானிகள் அவனை வணங்கும்போது ஆத்மாவின் நன்மையான ஸம்ஸாரத்திலிருந்து விடுதலை எனும் முக்தியை வேண்டுகிறார்கள். ஞானம் கனிந்த நலமெனும் பக்தி கொண்டிருப்பவர்கள் எம்பெருமானிடம் எப்போதும் சேர்ந்திருந்து தொண்டு புரிய வேண்டும் என்று விரும்புகிறார்கள்.



# மாமுனி மனத்துள்ளான்

- முனைவர் ஸ்ரீ. உ. வே. அத்தங்கி ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, திருவல்லிக்கேணி

## பாரம்பரியமான உடைகளை அணிவோம்! திருமலையின் புனிதத்தைக் காப்போம்!!

**சனாதன முறைப்படி எந்த தெய்வ நிகழ்ச்சிகளிலும் நாம் பாரம்பரியமான உடைகளை அணிதல் வேண்டும். குறிப்பாக ஆலயங்களுக்குச் செல்லும் போது நாம் நம் பண்பாட்டின்படி பாரம்பரியமான ஆடைகளையே உடுத்திச் செல்லுதல் வேண்டும். அவ்வகையில் திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களை நம் இந்து கலாசாரத்தின்படி பாரம்பரியமான ஆடைகளையே அணிந்து வர வலியுறுத்துகின்றது.**

**ஆண்கள் வேஷ்டி, மேல்துண்டு, சட்டை, குர்தா, பைஜாமா. பெண்கள் புடவை, இரவிக்கை, துப்பட்டா வுடன் கூடிய சுடிதார், சிறுமிகள் பாவாடை சட்டை. முக்கியமாக ஆர்ஜித சேவை, சிறப்பு நுழைவு தரிசனத்திற்கு வரும் பக்தர்கள் கட்டாயம் இம்முறை யினைக் கடைபிடிக்க வேண்டும். அவர்கள் குடும்ப வழக்கப்படி நெற்றியில் திலகமும் அணிதல் வேண்டும்.**



எம்பெருமானாலேயே மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்கள் தங்களுக்கு என்று ஒரு நன்மையையும் கருதாமல், எம்பெருமானின் நன்மை கள் எப்போதும் சிறந்து விளங்க வேண்டும் என்று பரிவோடு அவனுக்குப் பல்லாண்டு பாடி, அவன் ஒரு குறைவின்றி அனைத்து வளங்களுடன், மேலான ஆனந்தத்துடன், கண் எச்சில் படாமல் இன்புற்றிருக்க வேண்டும் என்று ஆசைப்படுவர். இவ்வாறு விரும்பு தலையே ஸ்ரீவைஷ்ணவர்கள் மங்களாசாஸனம் என்பர்.


ஆழ்வார்களை அடியொற்றி ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யர்களனைவரும் திவ்யதேசங்களில் எழுந்தருளி இருக்கும் எம்பெருமானுக்கு எப்போதும் பரிவுடன் மங்களாசாஸனம் செய்தனர். ப்ரதிவாதி பயங்கரம் அண்ணன் எனும் ஆசார்யர் திருமலையப் பனுக்கு மங்களாசாஸனமாக "ஸ்ரீவேங்கடேச மங் களம்" எனும் ஸ்தோத்ர நூலை அருளிச் செய்து உள்ளார்.

இவ்வாசார்யருக்கு உண்டான தன்னேற்றம் தனது ஆசார்யரான மணவாள மாமுனிகளின் அன்பு நியமனத்துடன் மங்களாசாஸனம் செய்தமையாகும். ஒருவன் தன் விருப்பத்தினால் எம்பெருமானுக்குப் பல்லாண்டு பாடுவதைவிட, ஆசார்யனின் விருப்பத் திற்காக எம்பெருமானுக்குப் பல்லாண்டு பாடுவது என்பது எம்பெருமானுக்கு மிகுந்த ஆனந்தத்தைக் கொடுக்கும். எனவே ஸ்ரீ வேங்கடேச மங்களம் எனும் இந்நூல் மிகுந்த பெருமை வாய்ந்ததாகும்.

இந்நூலில் 14 சுலோகங்கள் உள்ளன. திருவேங்கடவனின் பல பெருமைகளை முதல் 12 சுலோகங்களில் விண்ணப்பித்து மங்களாசாஸனம் செய்து, பின்னர் அத்தனை பெருமைகளும் எம்பெருமானிடம் எப்போதும் விளங்கி நிற்பதன்


திருமலை திருப்பதி தேவஸ்தானம்

### வாகன ஓட்டுனர்களின் கவனத்திற்கு...



உலகிலேயே விலை மதிப்பற்றது உயிர் மட்டும்தான். அந்த உயிரினைக் காத்திட பாதுகாப்பான பயணத்தை மேற்கொள்வோம்!

- திருமலைக்குச் சொந்த வாகனத்தில் வரும் பக்தர்கள் கூடுமானவரை ஓட்டுனர்களுக்குப் போதிய ஓய்வினை அளித்திடுங்கள். வாகன ஓட்டுனர்களின் பாதுகாப்பே நமது பாதுகாப்பாகும்.
- மலைவழிப்பாதையில் வாகனங்களை ஓட்டும் போது கவனமாகச் செயல்படவும். பிற வாகனங் களை முந்திச் செல்லாதீர்கள்.
- அனைவரும் கட்டாயமாக சீட் பெல்டை அணிந்து கொண்டு பாதுகாப்பாக பயணம் செய்யுங்கள்.
- திருமலைக்கு இருச்சக்கர வாகனத்தில் வருபவர்கள் தலைக்கவசத்தை அணியுங்கள். தலைக்கவசமே உயிர் கவசமாகும்.

## திருவடிகளை சரணடைவோம்



இறைவனுடைய திருவடிகளே நம்மை உய்விக்கும். தன் திருவடியை ஏந்தி பக்தர்கள் வணங்க அவர்களுடைய துயரங்களை நீக்கி அருளி ஆட்கொள்பவன் திருவேங்கடவன்.

திருவடியில் உலகத்தை அளந்த உலகளந்த உத்தமனாகிய திருமால் நெறியினை இவ்வுலகில் பரப்ப, அறியாமையாகிய இருளைப் போக்கி மெய் அறிவாகிய ஞானத்தை மக்களிடையே தோற்றுவித்து அனைவரும் திருமால் திருவடியைச் சென்றடைய தொண்டு புரிந்தவர்கள் ஆழ்வார்கள்.

இராமபிரானின் திருவடி நகல்களான பாதுகைகளே தவ வாழ்வு மேற்கொண்டிருக்கும் பரதனுக்கு உதவின. ஈண்டு அடிதாய் உதவியது.

கல்லுருவான அகலிகை முன் உருவம் கொண்டு நிற்க, விசுவாமித்திரர் இராமனிடம் அகலிகை வரலாற்றைக் கூறுகிறார். "கை வண்ணம் அங்கு கண்டேன் – கால்வண்ணம் இங்கு கண்டேன்" என்று கம்பர், "கால் வண்ணத்தைப் பற்றி" எடுத்துரைத்துள்ளார். எம்பெருமான் திருவடிகளில் நாம் சரணம் புகுந்தால், அந்த மாயவன் நமக்கு முக்தியையும் அளிக்க வல்லவனாவான்.

**சித்தாந்த ரத்னம் ஆர். தெய்வவீரலெட்சுமி, தூத்துக்குடி.**

காரணத்தை நிறைவாக இரண்டு சுலோகங்களில் விண்ணப்பித்து பல்லாண்டு பாடுகிறார் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணன் ஸ்வாமி. திருவேங்கடவனின் அனைத்து பெருமைகளும் சிறிதும் குறைவின்றி எப்போதும் விளங்கி நிற்பதற்கு காரணம் யாது எனில், "முனிமானஸவாஸினே" என்று குறிப்பிடுகிறார்.

அதாவது அவர் ஒரு முனியின் மனத்தில் வசிப்பதாலேயே அனைத்து மங்களங்களும் அவரிடம் பெருகிக் கொண்டேயிருக்கிறது. திருமலையப்பனுக்கு திருவேங்கட மலை முழுவதும் வசிப்பிடமாக இருக்க, அதைவிட ஒரு முனியின் மனத்தில் வசிப்பதா அவருக்கு மங்களங்களைப்பெருக்கி ஏற்றமளிக்கிறது எனில், ஆமென்பதே ஆசார்யர்களின் கருத்தாகும். *''மனனசீல: முனி:''* என்கிறபடி சிறிதும் இடையூறு இன்றி எப்போதும் தொடர்ந்து எம்பெருமானை அன்போடு நினைத்துக் கொண்டிருப்பவர் முனி எனப்படுகிறார்.

திருமலையைக் காட்டிலும் அன்புடன் தன்னை எப்போதும் சிந்திப்பவரின் மனத்தில் வசிப்பதற்கு திருமலையப்பன் மிகவும் மகிழ்கிறார். மேலே சுலோகத்தில் குறிப்பிட்ட முனி எவரெனில் ஸ்ரீமத் ஸுந்தரஜாமாத்ரு முனியெனும் அழகிய மணவாள மாமுனியேயாவர். அழகிய மணவாளன் எனும் திருநாமத்தையுடைய முனி என்றும், அழகிய மணவாளன் எம்பெருமானைச் சிந்தித்துக் கொண்டே இருக்கும் முனியென்றும் இரு விதமாகப் பொருளை உணரலாம். அழகிய மணவாளன் என்பது திருவரங்கத்து எம்பெருமானின் திருநாமம். *''வேங்கட மாமலை வானவர்கள் சந்திசெய்ய நின்றான் அரங்கத்தர வினணையான்''* (அமலநாதிபிரான் 3) என்கிறபடி இருவரும் ஒருவரே எனப்பட்டதால், அழகிய மணவாளன் எம்பெருமானைச் சிந்தித்தல் என்பது திருவேங்கடமுடையானைச் சிந்தித்தலாகும் எனச் சொல்லக் குறை இல்லை.

ஆழ்வார்களின் பாசுரங்களை நோக்கினால், திருமலை முதலான திவ்ய தேசங்களில் எம்பெருமான் வசிப்பதே ஆழ்வார்கள் மற்றும் அவர்களை ஒத்த அடியவர்களின் உள்ளத்தைக் கைப்பற்றி வசிப்பதற்காகவே எனும் கருத்து வெளிப்படுவதாக ஆசார்யர்கள் விளக்குகிறார்கள். பூதத்தாழ்வார் *''மனத்து உள்ளான் வேங்கடத்தான்''* (இரண்டாம் திருவந்தாதி 28) என்று அருளிச் செய்துள்ளார்.

திருமலையப்பன் ஆழ்வாரின் மனதை இருப்பிடமாகக் கொண்டபின் திருமலையையே துறக்க திருவுள்ளம் கொண்டதையும் ஆழ்வார் அறிந்து, பதைத்து, *''இளங்கோயில் கைவிடேல்''* (இரண்டாம் திருவந்தாதி 54) என்று அருளிச்செய்தார். அதாவது ஆழ்வாரின் மனது பெருங்கோயில்; அந்த கோயில் வசிப்பிடமாகக் கிட்டுவதற்கு முன்பு தனக்கு பாலாலயம்/இளங்கோயில்

## திருமலையின் இயற்கையைக் காத்திடுவோம்

திருமலை ஏழு மலைகளின் கூட்டம். அந்த எழில் கொஞ்சும் மலைகளைப் பற்றி ஆழ்வார்கள், ஆசாரியர்கள், இசை ஞானிகள் தங்களுடைய பாசுரங்களில், கீர்த்தனைகளில் பாடியுள்ளனர். *“வீங்கு நீர் அருவி வேங்கடம்”* என்று சிலப்பதிகாரத்தில் வர்ணிக்கப்பட்ட திருமலையை நாம் நம் அடுத்த சந்ததியினருக்கு நாம் கண்டு இன்புற்ற வண்ணமே அளித்திட வேண்டும். அதற்கு பிளாஸ்டிக் பொருட்கள், குப்பைகள் போன்றவற்றை திருமலையிலும், மலைவழிச்சாலைகளிலும் ஆங்காங்கே வீசி எறியாமல் இருக்க வேண்டும். இதனால் இயற்கை மட்டுமின்றி இயற்கையை வளர்த்திடும் பல்லுயிர்களும் வாழ்ந்திடும். திருவேங்கடவன் குடி கொண்டிருக்கும் இத்திருமலையின் இயற்கை எழிலை நாமும் காத்து நம் சந்ததிகளுக்கும் அளிப்பது நம் கடமையாகும்.



எனும் சிறிது கால, சிறிய வசிப்பிட மாகத்தான் திருமலையையே எம்பெருமான் கருதியதாகவும், ஆழ்வாரின் உள்ளத்தையடைந்தபின் இளங் கோயிலைக் கைவிட எம்பெருமான் திருவுள்ளமாக, அதைக் கைவிட வேண்டாம் என்று ஆழ்வார் ப்ரார்த்திக்கிறார்.

எம்பெருமானைத் தான்பெற்றது திருமலையிலிருந்துதான் என்று திருமலையின் இடத்து நன்றி உணர்வாலும், மேலும் தம்மைப் பெற்றாற்போல் எம்பெருமான் பல அடியவர்களைப் பெற்று மகிழ வேண்டும் எனும் கருத்தினால் ஆழ்வார் இப்படி ப்ரார்த்திக்க, எம்பெருமானும் இசைந்து திருமலையில் நித்யமாக எழுந்தருளியுள்ளார்.

*‘‘இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம்... அவை தம்மொடும் வந்திருப்பிடம் மாயன் இராமாநுசன் மனத்து’’* (இராமாநுச நூற்றந்தாதி 106) எனும் பாசுரத்தில் இராமாநுசரின் திருவுள்ளத்தில் திருமலையப்பன் திருமலையோடு குடிகொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. திருமலையப்பன் ச்ரியப்பதியே என்று இராமாநுசர் திடமாக நிலைநாட்டி அவ்வெம்பெருமானுக்கு மங்களாசாஸனம் செய்தமை அனைவரும் அறிந்ததே. இராமாநுசரே மீண்டும் மணவாள மாமுனியாக அவதரிக்க, அவரின் மனத்திலும் திருமலையப்பன் மிக்க மையலோடு வசிக்கிறார்.

அனைத்து ஆழ்வார்களின் ஏற்றமும், அவர்களின் அருளிச் செயல்களின் ஏற்றமும், அருள் பெற்ற நாதமுனி முதலான திருவாய்மொழிப் பிள்ளை ஈறாகவுள்ள அனைத்து ஆசார்யர்களின் ஏற்றத்தையும், அவர்கள் அருளிச்செய்த நூல்களின் ஏற்றத்தையும் முழுவதுமாக உணர்ந்து நூல்களாக அருளிச்செய்த பெருமை மணவாள மாமுனிக்கே உண்டான தன்னேற்றமாகும். இதனாலேயே எம்பெருமான் திருவரங்கநாதன் மணவாள மாமுனியைத் தனது ஆசார்யராகவேற்று தானே சிஷ்யனாகி “ஸ்ரீசைலேச தயாபாத்ரம்” எனும் தனியனை சமர்பித்தான்.

மேலும், தானும் ஆசார்யாபிமானத்தைப் பெறுவதற்காக ஆசார்ய னான மணவாள மாமுனியின் உள்ளத்தையே தனது மேலான இருப் பிடமாக்கிக் கொண்டு விட்டுவிலகாமல் வசிக்கிறான் போலும். *‘‘காலே காலே வரவரமுனி: கல்பயந் மங்களானி’’* என்று எப்போதும் மங்களா சாஸனம் செய்துகொண்டிருக்கும் இவர் மனத்தில் வசிப்பதே திருமலையப்பனின் மங்களங்களனைத்தும் பெருகுவதற்கும் காரணமாகும்.

எத்தனையோ ஆசார்யர்களிருப்பினும், திருமலையப்பனுக்கு மங்களாசாஸனமாக ஒரு ஸ்தோத்ர நூல் இயற்றப்படவேண்டும் எனும் ஆசைகொண்டு தமது சிஷ்யரிடம் நியமித்து அதை நிறைவேற்றியவர் மணவாள மாமுனி ஒருவரே ஆவர். ஆகவே அதை உணர்த்தவே ப்ரதிவாதி பயங்கரம் அண்ணன் *‘‘ஸ்ரீமத் சுந்தரஜாமாத்ரு முனிமானஸவாஸினே’’* என்று அருளிச்செய்தார்.

மணவாளமாமுனியின் உள்ளத்தை வசிப்பிடமாகக் கொண்ட பின்னரே அனைத்து உலகங்களையும் தனக்கு வசிப்பிடமாகக் கொண்டு இருக்கும் தன்மை விளங்குகிறது எனும் கருத்து தோன்ற *‘‘ஸர்வலோக நிவாஸாய’’* என்பதை அடுத்ததாக அருளிச்செய்கிறார்.



தொடரும்...

செப்டம்பர் மாதம் ஆவணி புரட்டாசி ஆகிய இரு புனித மாதங்களின் சங்கமமாக அமைகிறது. இது வர்ஷ ருது எனப்படும் மழைக்காலத்தின் சிறப்புமிக்க பகுதி. இயற்கை செழித்து, பூமி பசுமையால் நிரம்பும் இந்தக் காலத்தில், மிகவும் முக்கியமான இரண்டு திருநாள்கள் வருகின்றன.

1.ஆவணி ரோகிணி ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி, 2.புரட்டாசி திருவோணம் ஸ்ரீ வேங்கடேசப் பெருமான் (மலையப்பன்) அவதாரத் திருநாள்.

ஆவணி மாதத்தில் ரோகிணி நட்சத்திரத்தில் ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி நாடெங்கும் பக்தி பூர்வமாகக் கொண்டாடப்படுகிறது. கண்ணனின் அவதார மகிமையை நினைவுகூறும் வகையில் கோயில்களில் சிறப்பு திருமஞ்சனம், அலங்காரம், உற்சவம், பகவத் கீதை பாராயணம், பாகவதப் பிரவசனம் ஆகியவை நடைபெறுகின்றன.

இல்லங்களிலும் குழந்தைக் கண்ணனின் திருவடிச் சுவடுகளை வரைந்து, வெண்ணெய், சீடை, முறுக்கு, அவல், பொரி போன்ற நைவேத்தியங் களைப் படைத்து பக்தர்கள் வழிபடுகின்றனர்.

அதேபோல், புரட்டாசி மாதம் திருவோண நட்சத்திரத்தை முன்னிட்டு திருவேங்கடமுடையா னின் அவதாரத் திருநாளாக திருமலையில் நடை பெறும் திருமலையப்ப ஸ்வாமி பிரம்மோற்சவம் உலகப் புகழ்பெற்ற வைபவமாகும்.

இவ்வாண்டு திருமலையில் 2 பிரம்மோற்சவங் கள் நடைபெறுவது ஒரு சிறப்பம்சமாகும்.

பொதுவாக ஆண்டுதோறும் நடைபெறும் வருடாந்திர பிரம்மோற்சவத்துடன் (செப்டம்பர் 14 முதல் 23 வரை) தெலுங்கு மாதம் சாந்திரமானக் கணக்கின்படி அதிக மாதம் வருவதால் இந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில் நவராத்திரி பிரம்மோற்சவமும் நடைபெறுகிறது. இதனால் ஒரே ஆண்டில் இரண்டு முறை மலையப்ப ஸ்வாமி பிரம்மாண்டமான உற்சவ வைபவங்களில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலிக்கும் அரிய வாய்ப்பு கிடைத்துள்ளது.



# மலையைத் தாங்கிய கண்ணனும் மலை மீது நிற்கும் மலையப்பனும்

– பேராசிரியர் எஸ்.கோகுலாச்சாரி,
புவனகிரி, 94434 39963

9 நாட்கள் நடைபெறும் இந்த மகோற்சவத்தில் மலையப்ப ஸ்வாமி பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார். கருட சேவை, திருத்தேர், சக்கர ஸ்நானம் போன்றவற்றிற்கு பக்தர்கள் இலட்சக்கணக்கில் வருகின்றனர்.

ஆவணியில் கண்ணனின் அவதார மகிமையும், புரட்டாசியில் மலையப்பனின் அருள்மகிமையும் தொடர்ச்சியாகக் கொண்டாடப்படுவது, கண்ணனும் மலையப்பனும் ஒருவரே என்பதை அழகாக எடுத்துரைக்கிறது. துவாபர யுகத்தில் ஸ்ரீகிருஷ்ணராக அவதரித்து தர்மத்தை நிலைநாட்டி, பகவத் கீதையை உலகிற்கு அருளி, பக்தர்களைக் காத்து தனது அவதாரப் பணியை நிறைவு செய்தார். கலியுகத்தில், பக்தர்களுக்கு எளிதில் அருள்புரிய திருவேங்கடமுடையான் ஸ்ரீநிவாசப் பெருமாளாக திருமலையில் எழுந்தருளினார். துவாபர யுகத்தில் கண்ணனாக பக்தர்களுடன் கலந்து வாழ்ந்த ஸ்ரீமந்நாராயணன், கலியுகத்தில் திருவேங்கடவனாக திருவேங்கடமலையின் மீது *''மண்ணுக்கும் விண்ணுக்கும் வைப்பு''* என நின்று உலக மக்களுக்கு அருளாசி வழங்குகிறார். வைணவ சமயத்தின் பார்வையில், கண்ணனே மலையப்பன்; மலையப்பனே கண்ணன்.

**கண்ணன்-திருமலையப்பன் ஒற்றுமைகள்**

ஸ்ரீமந்நாராயணனின் திவ்ய அவதாரங்களில் கண்ணன் விபவ அவதாரம். மலையப்பன் அர்ச்சா அவதாரம். கண்ணன் கோவர்த்தன மலையை 7 நாள்கள் தாங்கினார்; ஸப்தகிரியாக 7 மலைகள் இணைந்து எம்பெருமானைத் தாங்குகிறது. இந்த விஷயத்தை ஆழ்வார்கள் பல பாசுரங்களில் அருளிச்செய்திருக்கிறார்கள். “குன்றமேந்தி குளிர் மழை காத்தவன் தான் மலையப்பன்” என்று நம்மாழ்வார் பாடுகிறார்.

இங்கே ஒரு கேள்வி வரும்... பகவான் மலையைத் (கோவர்தனகிரி) தாங்கியது சரி. மலையால் பகவானைத் தாங்க முடியுமா? இதற்கு பொய்கையாழ்வார் அருளிச்செய்த முதல் திருவந்தாதியில் (பாசுரம் 69) இடம் பெற்றுள்ள பாசுர வியாக்கியானம் பதில் தரும்.

*பாலன் தனதுருவாய் ஏழுலகுண்டு ஆலிலையின்*
*மேலன்று நீவளர்ந்த மெய்யென்பர் - ஆலன்று*
*வேலை நீருள்ளதோ? விண்ணதோ? மண்ணதோ?*
*சோலைசூழ் குன்றெடுத்தாய் சொல்லு!!*

என்று பொய்கையாழ்வார் பகவானிடம் வினவுகிறார். “பிரளய காலத்தில் ஏழுலகங்களையும் உன் திருவயிற்றில் அடக்கிக் கொண்டு, ஆலிலையின் மீது குழந்தையாகப் பள்ளிகொண்டாய் என பெரியோர் கூறுகின்றனர். அந்த ஆலிலை எங்கே இருந்தது? கடலிலா? விண்ணிலா? மண்ணிலா? நீயே சொல்ல வேண்டும்”.

இதன் உட்பொருள் மிகவும் ஆழமானது. ஏழுலகங்களையும் தாங்கும் பரம்பொருளை ஒரு சிறிய ஆலிலை எவ்வாறு தாங்க முடியும்? மனித அறிவால் இதை அளவிட முடியாது. அது பகவானின் அசாதாரண சக்தியாலும், அவரது சங்கல்பத்தாலும் நிகழ்ந்த திவ்ய லீலை..

அதேபோல, கோவர்த்தன மலையைத் தாங்கியவன் கண்ணன்; திருமலையின் மீது எழுந்தருளி இருப்பவன் மலையப்பன். உண்மையில் மலை பகவானைத் தாங்கவில்லை; பகவானின் சங்கல்பமே மலையையும் தாங்குகிறது. அவர் விரும்பியதால் ஆலிலை அவருக்குப் படுக்கை ஆகியது; அவர் அருளியதால் திருமலை அவரது திருவடிகளைத் தாங்கும் புண்ணியத்தைப் பெற்றது.

எனவே, “மலையைத் தாங்கியவன் மலையின் மீது நிற்கிறான்” என்பது முரண்பாடு அல்ல; அது பகவானின் அளவற்ற ஐச்வர்யத்தையும், எளிமையையும், பக்தர்களுக்காகத் தன்னைத் தாழ்த்திக் கொள்ளும் சௌலப்ய குணத்தையும் வெளிப்படுத்தும் திவ்ய ரகசியமாகும்.



கோவர்த்தனன் அவன்; ஏழுமலையப்பன் இவன். கோவர்த்தன மலையைத் தன் திருக்கரத்தால் தாங்கி, ஆயர்களையும் ஆநிரைகளையும் காத்தவன் கண்ணன். ஏழுமலையின் உச்சியில் நின்று, கலியுக மக்களின் வாழ்வைத் தாங்கி அருள்புரிபவன் ஏழுமலையப்பன். "அவன் கோவர்தனகிரி நாதன்; இவன் ஸப்தகிரி வாசன்". அவன் வேறு, இவன் வேறு அல்ல. யுகங்கள் மாறின; திருக்கோலங்கள் மாறின; ஆனால் கருணையும், காப்பாற்றும் குணமும், பக்தர்களிடம் கொண்ட வாத்ஸல்யமும் மாறவில்லை.

மலையைத் தாங்கிய கண்ணனே, மலையின் மீது நின்று அருள்புரியும் மலையப்பனாக கலியுகத்தில் விளங்குகிறார். இருவரும் கலியுகத்தில் எளிதில் அணுகக்கூடிய கருணை வடிவங்கள். பசுக்களையும், எளிய மக்களையும் நேசித்தவன் கண்ணன்; வேறுபாடின்றி அனைவரையும் அரவணைப்பவன் மலையப்பன். இருவரும் பக்தர்களின் பாரத்தைத் தாங்களே ஏற்றுக் கொள்பவர்கள்.

கண்ணன் கோபாலன்; மலையப்பன் கோவிந்தன். "கோவிந்தா" என்ற நாமம் இருவருக்கும் பொதுவானது. கண்ணன் வெண்ணெயை விரும்பியவர்; மலையப்பனுக்கும் நவநீதம், வெண்ணெய் உள்ளிட்ட இனிய நைவேத்தியங்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன. கண்ணன் குழல் ஊதி உலகை ஈர்த்தார்; மலையப்பன் தமது திவ்ய மங்கள சௌந்தர்யத்தால் உலகையே கவர்கிறார். கண்ணன் பகவத் கீதையை அருளினார்; மலையப்பன் அந்த கீதையின் உபதேசங்களை வாழ்வில் நடைமுறைப்படுத்த வழிகாட்டும் கலியுக வரதனாக விளங்குகிறார். கண்ணனுக்கு ருக்மிணி, சத்யபாமா; திருவேங்கடவனுக்கு அலர்மேல் மங்கை (பத்மாவதி). இந்த வைபவத்தை,

*அகலகில்லேன் இறையும் என்று*
*அலர்மேல் மங்கை உறை மார்பா*
*நிகர் இல் புகழாய் உலகம் மூன்று*
*உடையாய் என்னை ஆள்வானே*
*நிகர் இல் அமரர் முனிக்கணங்கள்*
*விரும்பும் திருவேங்கடத்தானே*
*புகல் ஒன்று இல்லா அடியேன் உன்*
*அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே*

என்ற பாசுரத்தால் நம்மாழ்வார் விளக்குகிறார். கண்ணன் தனது சரம சுலோகத்தில் *''மாம் ஏகம் சரணம் வ்ரஜ''* என்றதால், நம்மாழ்வார் அதே கண்ணனின் அர்ச்சாவதார வைபவமான மலையப்ப ஸ்வாமியிடம் பிராட்டியை முன்னிட்டுச் சரணாகதி அநுஷ்டித்தார். கண்ணன் மீது ஆண்டாள் பேரன்பு கொண்டாள்; அதே ஆண்டாளின் மாலையை ஏற்று அணியும் பெருமை மலையப்பனுக்கும் உண்டு. கண்ணனின் வாழ்க்கையில் லீலைகள் நிறைந்து உள்ளன; மலையப்பனின் திருமலை மகிமையிலும் எண்ணற்ற அருள்லீலைகள் கூறப்படுகின்றன. கண்ணன் பக்தர்களின் மனதில் குடி கொண்டவர்; மலையப்பன் திருமலையில் நின்றாலும், பக்தர்களின் இதயத்திலும் குடி கொண்டிருப்பவர். இருவரையும் தரிசிப்பதால் பாவங்கள் நீங்கி, பக்தி, அமைதி, செல்வம், இறையருள் பெருகும் என்று சாஸ்திரங்கள் போற்றுகின்றன. நிறைவாக திருமங்கை ஆழ்வாரின் அற்புத பாசுரத்தோடு நிறைவு செய்வோம்.

*நின்ற மாமரு திற்று வீழ நடந்த நின்மலன் நேமியான்*
*என்றும் வானவர் கைதொ ழும்இணைத் தாம ரையடி*
*யெம்பிரான்*
*கன்றி மாரி பொழிந் திடக்கடி தாநி ரைக்கிடர்*
*நீக்குவான்சென்று குன்ற மெடுத்த வன்திரு வேங்*
*கடமடை நெஞ்சமே!*

இப்பாசுரத்தில் ஆழ்வார், கண்ணபிரானின் பல திருவிளையாடல்களை நினைவுபடுத்துகிறார். மருத மரங்களைச் சாய்த்தவனும், தேவர்களால் எப்போதும் வணங்கப்படும் சக்கரத்தாழ்வானை ஏந்திய பரம்பொருளும், இந்திரன் பொழிந்த பெருமழையில் இருந்து பசுக்களையும், ஆயர்களையும் காப்பதற்காக கோவர்த்தன மலையைத் தூக்கிய கண்ணன் தான், இன்று திருவேங்கட மலையில் எழுந்தருளி இருப்பவன் என்று தெளிவாகக் கூறுகிறார்.

ஆழ்வார் இறுதியில், *''சென்று குன்றம் எடுத்த வன் திருவேங்கடம் அடை நெஞ்சமே!''* என்று தம் மனதிற்கே உபதேசம் செய்கிறார். "கோவர்த்தன மலையைத்தூக்கிய அந்தக் கண்ணனே இன்று திருவேங்கடத்தில் நின்று அருள்புரிகிறான்; ஆகையால், என் மனமே! திருவேங்கடத்தை அடைந்து அவனைச் சரணடைவாய்" என்று அழைக்கிறார். ஒரே அடியில், கோவர்த்தன கிரிதாரியும் திருவேங்கடவனும் ஒருவரே என்ற வைணவ சித்தாந்தத்தை திருமங்கையாழ்வார் அழகாக நிலை நாட்டுகிறார். ஸ்ரீமந்நாராயணன் துவாபர யுகத்தில் கண்ணனாகவும், கலியுகத்தில் திருவேங்கடமுடையானாகவும் அருள்புரிகிறார் என்பது ஆழ்வாரின் சத்திய வாக்கு.

கோடிக்கணக்கான பக்தர்களின் குறைகளைத் தீர்த்து வைத்து அவர்களின் குடும்பங்களில் குதூகலம் நிறையச் செய்யும் வரப்பிரசாத மூர்த்தியாய்த் திகழ்கின்றார் திருப்பதி ஸ்ரீவேங்கடாஜலபதி. அதனால்தான் “திருப்பதி சென்று திரும்பி வந்தால் ஒரு திருப்பம் நேருமடா! உன் விருப்பம் கூடுமடா!” என்று கவிஞர்கள் திருமலையின் புகழைப் போற்றி பாடுகின்றனர். உலகத்தில் விளங்குகின்ற எண்ணற்ற ஆலயங்களில் முதன்மை இடத்தில் முத்திரைப் பதிக்கிறது திருப்பதி.

***கொங்கு அலர்ந்த மலர்க் குருந்தம் ஒசித்த கோவலன் எம்பிரான்***
***சங்கு தங்கு தடங்கடல் துயில் கொண்ட, தாமரைக் கண்ணினன்***
***பொங்கு புள்ளினை வாய் பிளந்த புராணர் தம் இடம் பொங்கு நீர்ச்***
***செங்கயல் திளைக்கும் சுனைத் திருவேங்கடம் அடைநெஞ்சமே!***

பெரிய திருமொழியில் திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பாசுரமான இதற்கு முந்தைய ஏழாம் திருமொழியில், சிங்கவேள் குன்றின் (அஹோபிலம்) மிகக் கடுமையான வெப்பச் சூழலையும், அதன் கரடுமுரடான அடர்ந்த காடுகளையும் விவரித்து ஆழ்வாரின் நெஞ்சம் தளர்ந்தது. ***“சென்று காண்டற்கரிய கோயில்”*** என்றும், ***“தெய்வமல்லால் செல்லவொண்ணாச் சிங்கவேள் குன்றம்”*** என்றும் பாடி வருந்திய ஆழ்வாரை நோக்கி, எம்பெருமான் தன் காருண்யத்தை வெளிப்படுத்தினான். சிங்கவேள் குன்றின் அச்சுறுத்தும் வெம்மைக்கு நேர்மாறாக, குளிர்ச்சியான சோலைகளும், வற்றாத சுனைகளும் நிறைந்த திருவேங்கட மலையில் தான் மிக எளிய வடிவில் அனைவருக்கும் சேவை சாதிப்பதை எம்பெருமான் உணர்த்தினான்.

***“தெழிகுரலருவித் திருவேங்கடம்”*** என்றும், ***“தெண்ணிறைச்சுனை நீர்த்திருவேங்கடம்”*** என்றும் போற்றப்படும் திருமலைக்கு வந்து, தன் சோர்வை நீக்கிப் பேரின்பம் அடையுமாறு ஆழ்வாரை எம்பெருமான் ஆட்கொண்டான். இத்தெய்வீக வழிகாட்டுதலை ஏற்ற திருமங்கை ஆழ்வார், தன் நெஞ்சு குளிரப் பாடிய பதிகமே ***“கொங்கலர்ந்த மலர்க்குருந்தம்”*** என்று தொடங்கும் முதற்பத்து எட்டாந்திருமொழியாகும். இத்திருமொழியும் இதற்கடுத்த 3 பதிகங்களும் சேர்ந்து மொத்தம் நாற்பது பாசுரங்கள் திருவேங்கடப் பெருமானின் மேன்மைகளை வாரி வழங்குகின்றன.

சிங்கவேள் குன்றத்தில் அனுபவித்த வெம்மைக்கு முற்றிலும் நேர்மாறான தண்மையையும் ஆறுதலையும் திருமலையில் அனுபவித்த ஆழ்வார், பேரின்பப் பரவசத்துடன் இப்பதிகத்தை



# செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருவேங்கடவா!

– திருமதி கோ.அறிவுசெல்வி ராஜாராம்
திண்டிவனம், 9150176597

அருளிச்செய்தார். திருமலை திருவேங்கடவனே "உகந்தருளின நிலம்" என்பதால் ஏழுமலை ஏற்றமுடையதாயிற்று. வேதமே பாடிய ஒரே தலம். ரிக்வேதம், *"விகடே கிரீம் கச்ச"* என்கிறது. அதாவது மலை என்றாலே திருவேங்கடத்தைத்தான் குறிப்பிடுவதாகக் கொள்வது மரபு ஆகும்.

எம்பெருமானின் ஐந்து நிலை பரம், வ்யூகம், விபவம், அந்தர்யாமி, மற்றும் அர்ச்சை என உரைத்த ஆழ்வார் ***"விண் மீதிருப்பாய் மலைமேல் நிற்பாய், கடல் சேர்ப்பாய், மண்மீதுழல்வாய் இவற்றளெங்கும் மறைந்துறைவாய்!"*** வைகுந்தம் என்ற பரம், திருவேங்கடம் எனும் அர்ச்சை, பாற்கடல் எனும் வியூகம், பூமியில் தேடி, ஓடி உழன்று மனிசர்க்காய் படாதனப்பட்டதாகிற விபவாவதாரம், எல்லாவற்றிலும் மறைந்து நிற்கும் அந்தர்யாமி என்று சொல்வது அர்ச்சைக்கு இணையிலாத தனிச்சீருடையதான திருவேங்கடமே என்று உணரவேண்டும்.

கம்பராமாயணத்தில் கம்பர் கிஷ்கிந்தா காண்டத்தில் "நாட விட்ட படலத்தில்" சுக்ரிவன் சீதையைத் தேட அங்கதன் தலைமையில் எழுபது வெள்ளச்சேனையின் அளவை காட்டி இராமனை மகிழ்விக்கிறான். இராமனும் மகிழ்ந்து சீதையைத் தேட சிந்தையைச் செலுத்த கட்டளை இடுகிறான். அங்கதன் தலைமையில் செல்லும் வானரவீரர்களை தென் திசையில் செல்லுமாறு ஆணையிடுகிறான். அவ்வாறு செல்லும் அங்கதன், அனுமன் ஜாம்பவான் மிகச் சிறந்த வானர வீரர்களுக்கு தேடவேண்டிய இடங்களையும் அதன் சிறப்புகளையும் கூறி அனுப்புகிறான். அந்த இடங்களுக்குள் திருமலையும் வருகிறது. மற்ற இடங்களை சாதாரணமாகப் பாடிய கம்பன் ஆழ்வார் பாடலாகிய ***"குன்றமேந்தி குளிர்மழைக் காத்தவன்"*** பாசுரத்தையொட்டி பாடுகிறார். எம்பெருமான் எழுந்தருளியுள்ள அம்மலையின் பெருமைகளை சுக்ரிவன் வானரவீரர்களுக்குக் கூறுகிறான்.



## மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா அன்னப்பிரசாத மையம்

தானத்தில் சிறந்தது அன்னதானம். யாரானாலும் போதும் என்று சொல்லும் ஒரே தானம் அன்னதானம். "அன்னப்பிரசாதம்" எனும் பெயரில் இலவசமாக உணவு அளிப்பதே நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டதே ஸ்ரீவேங்கடேஸ்வரா நித்ய அன்னப்பிரசாதம் டிரஸ்ட். உங்களால் முடிந்த அளவிற்கு இந்தத் திட்டத்திற்காக நன்கொடை செலுத்துங்கள். காய்கறிகள் மற்றும் பொருட்கள் அளிப்பதன் வாயிலாகவும் பக்தர்களும் உதவலாம்.

- ⇨ அன்னம் பரபிரம்ம வடிவம் தயவு செய்து வீணாக்காதீர்கள்.
- ⇨ அனைத்து பக்தர்களுக்கும் அன்னப்பிரசாதம் எளிதில் கிடைக்கிறது.
- ⇨ அன்னப்பிரசாதம் பெறுமிடத்தில் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு முதலிடம் அளியுங்கள்.
- ⇨ திருமலையில் கைக்குழந்தைகளுக்கு தேவையான பால் எப்பொழுதும் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தேவையானவர்கள் வைகுண்டம்-2 அன்னப்பிரசாதம் அலுவலகத்தை அணுகி பெற்றுக் கொள்ளுங்கள்.

திருமலை எப்பேர்ப்பட்ட குன்றம், சிகரங்கள் பொருந்தியக் குன்றம், பெருமை பொருந்திய ஏழுமலையை அடைபவர்களாயின் நெடுங்காலத் தொடர்புடைய கொடிய பாவங்களெல்லாம் நீங்கி, முக்தி அடைவார்கள். அந்த மலையை அணுகாமல் விலகிச் செல்லுங்கள் என்கிறான் சுக்ரிவன். மலையை அணுகினால் பாதகங்கள் நீங்கி முக்தி அடைய நேரிடும், அதனால் சீதையைத் தேடிச்செல்லும் பணி தடையாகி விடும்.

எனவே ஏழுமலையை அணுகாதிர்கள் என கம்பர் தன் பாடலில் ***"கோடு உறு மால் வரை அதனைக் குறுகுதிரேல், உம் நெடிய கொடுமை நீங்கி, வீடு உறுதிர்"*** எனப் பாடியுள்ளார். ஒரே ஒரு முறை "கோவிந்தா" என அழைத்தாலும் அடியார்களின் செடியாய வல்வினைகளைத் தீர்த்தருள்வான் ஸ்ரீநிவாஸன். நாமும் அவ்வாறே அழைத்து உய்வு பெறுவோமாக!

திருவனந்தாழ்வானே திருமலையாக இருந்துகொண்டு ஸ்ரீநிவாஸனைத் தாங்கி நிற்கிறான். "வேங்கடமே வேங்கடமே" என்றாலே புண்ணியமருளிடுவான். வேங்கட மலையைக் கண்டாலே




**பக்தர்களுக்கு விண்ணப்பம்**

திருமலையில் திருமுடிக்காணிக்கையைச் செலுத்துவது பாரம்பரியமாகக் கடைபிடிக்கப்பட்டு வருகின்ற ஒரு நேர்த்தி கடனாகும். திருமலையில் தலைமுடிக் காணிக்கைச் செலுத்துவதற்கு எவ்விதமான கட்டணத்தையும் தி.தி.தே. பெறுவதில்லை. ஆகையால் பக்தர்கள் தலைமுடிக் காணிக்கையைச் செலுத்தும்போது முடி இறக்குபவர்கள் பணம் கேட்டால் அவர்களின் விவரங்களை டோல்ப்ரீ எண். **1800-425-4141** க்குத் தெரிவியுங்கள்.

– செயலாட்சித் தலைவர்


பாவம் தொலையும். ஏழுமலை மீது ஏறிச்சென்று ஸ்ரீநிவாஸனை வணங்கி விட்டால் அதுவே பிறவிப் பயன். அதனாலேயே பெரியோர்கள் திருவேங்கட யாத்திரையை முக்கியமாகக் கருதினார்கள். பகவானை பெற்றிருக்கும் பாக்கியத்தால் திருமலை வானளாவி நிமிர்ந்து நிற்கிறது. விண்ணோர்கள் இறங்கி வந்து சேவித்து பயனடைகிறார்கள். மண்ணோர்கள் ஏழுமலையை ஏறிச்சென்று அருளும், புண்ணியமும் பெறுகிறார்கள். *''செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே, நெடியானே வேங்கடவா நின்கோயிலின்வாசல், அடியாரும் வானவரு மரம்பையரும் கிடந்தியங்கும், படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே''* (பெருமாள் திருமொழி 4.9).

பக்தர்கள் செல்லும் வழியில் ஒரு படியாக இருந்தால், எல்லா பக்தர்களும் அந்த வழியே தான் செல்வார்கள் என்று சொல்ல முடியாது, ஆகையால் தான் எல்லா பக்தர்களுக்கும் சேவை செய்ய முடியாது. எங்கேயோ ஒரு படியாக இருப்பதைக் காட்டிலும் அது பெருமாளின் வாசல் படியாக இருந்தால், அதற்கு பெருமாளின் தரிசனம் எப்போதும் கிடைக்கக்கூடும், எல்லா பக்தர்களின் பாதத்துளிகளும் படும். ஆதலால், தான் அங்கு ஒரு வாசற்படியாக வேண்டும் என்று அடுத்த பாசுரத்தில் தனது விசேஷ விருப்பத்தைத் தெரிவிக்கின்றார்.

வல்வினைகள் என்ற, எத்தனையோ பிறவிகளாகத் தீர்க்க இயலாத பாவங்களைத் தன்னுடைய கருணையினால் தீர்க்கும் திருவேங்கடமுடையான், அவன் கோயில் வாசலில் படியாய்க் கிடந்து, அவன் பவள வாயினை பார்த்துக்கொண்டே இருப்பேன் என்று குலசேகர ஆழ்வார் சொல்கிறார். நானே உயர்ந்த பொருள் என்று தன்னை உணர்த்திக் கொண்டு ஸ்ரீநிவாஸன் அங்கு உறைகிறான். அவன் திருவாகிய செல்வன். பாரத நாட்டிற்கே தலைமை தாங்கி விளங்குவது திருமலை, அனைவரையும் அழைத்து அணைத்து காப்பாற்றுகிறான்.

அதுவே நாயகனாய் நின்ற மலையரையன். அம் மலைமீது வண்டிகளில் செல்லுதல் அநுசிதம் (தகாதது எனப் பொருள்) என்றே ஆசார்யர்கள் கூறுகின்றனர். தன்னை ஸேவிப்பதற்கு யாராவது நடந்து வந்தால் பகவான் பெரிதும் மகிழ்ந்து ஆ! ஆ! என்று அருளுகிறான் என பூர்வர்களின் அபிமானம். பிராட்டியின் புருஷகாரத்தினாலேயே எம்பெருமானின் திருவருளைப் பெறமுடியும் என அறுதியிட்டு சரணாகதி லக்ஷணத்தையும் *''புகலொன்றில்லா அடியேன்''* என்பதனால் மனஸ்ஸாலோ, வாக்கினாலோ, சரீரத்தினாலோ சரணாகதியைச் செய்யலாம்.

*அகலகில்லேனிறையுமென்று அலர்மேல் மங்கையுறைமார்பா! நிகரில்புகழாய்! உலகமூன்றுடையாய்! என்னையாள்வானே! நிகரிலமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே! புகலொன்றில்லா அடியேன் உன்னடிக்கீழமர்ந்துபுகுந்தேனே!*

என்று சொன்னாலே போதும் கன்றிழந்த தலைநாகு தோள் கன்றுக்கு இரங்குமாப்போலே திருவேங்கடவன் இரக்கத்தோடு நன்மை அளித்துக் காப்பான். *''இருப்பிடம் வைகுந்தம்வேங்கடம்''* என்னுமாப்போலே ஸ்ரீ வைகுண்டத்தில் நித்யனாக இருக்கும் எம்பெருமான் அவ்விருப்பிடத்தைவிட்டு வெறுத்துதான் வானோர்க்கு மட்டும் தெய்வமில்லை இந்த பூமியில் வாழ்பவருக்கும் நான்தான் தெய்வம் என்பதை உணர்த்தும் வண்ணம் விண்ணோர்க்கும், மண்ணோர்க்கும் நடுநாயகமாக இருக்கும் உயர்ந்த மலைகளையும், புஷ்கரணிகளையும் உடைய இடத்தை இருப்பிடமாகக் கொண்டு செடியாய வல்வினைகளைத் தீர்க்கும் வள்ளலாக வலம் வந்து ரக்ஷிக்கிறான் ரக்ஷகன் என்றென்றுமே!



15-09-2026 (இரவு)
பெரிய சேஷ
வாகனம்

16-09-2026 (பகல்)
சிறிய சேஷ
வாகனம்

16-09-2026 (இரவு)
ஹம்ஸ
வாகனம்

17-09-2026 (பகல்)
சிம்ம
வாகனம்



17-09-2026 (இரவு)
முத்துப்பந்தல்
வாகனம்



18-09-2026 (பகல்)
கல்ப விருக்ஷ
வாகனம்



18-09-2026 (இரவு)
சர்வ பூபால
வாகனம்




19-09-2026 (பகல்)
மோகினி
அவதாரம்



19-09-2026 (இரவு)
கருட
வாகனம்



20-09-2026 (பகல்)
ஹனுமத்
வாகனம்



20-09-2026 (மாலை)
தங்கத்
திருத்தேர்



20-09-2026 (இரவு)
யானை
வாகனம்


21-09-2026 (பகல்)
சூரியப்பிரபை
வாகனம்
21-09-2026 (இரவு)
சந்திரப்பிரபை
வாகனம்
22-09-2026 (இரவு)
குதிரை
வாகனம்
23-09-2026 (பகல்)
சக்கர
ஸ்நானம்
23-09-2026(இரவு)
துவஜ
அவரோஹணம்

# திக்கெங்கும் தரிசிப்போம் திருவேங்கடவனை



இந்த ஆலயங்களின் கூடுதல் விவரங்களை www.tirumala.org (or) ttdevasthanams.ap.gov.in என்ற இணைய தளம் வாயிலாக அறியலாம்.

**திருமதி வைஷ்ணவி சேஷகிரி, திருப்பதி.**

திருமலையில் திருவேங்கடவனைத் தரிசிக்க தினந்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் அலை மோதுவது அனைவரும் அறிந்ததே. திருமலைக்கு வர இயலாதவர்களுக்கும் திருவேங்கடவனின் திருவருள் கிட்டிடும் வகையில் திருமலை திருக்கோயிலைப் போன்றே ஆங்காங்கே தி.தி.தேவஸ்தானம் புதியதாக பல ஆலயங்களை நிர்மாணித்தும், நித்ய பூஜைகள் செய்ய இயலாமல் இருக்கும் பல ஆலயங்களைப் புணரமைத்தும், தன் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்து, நித்திய பூஜை களை நிரந்தரமாகச் செய்து வருகின்றது. பக்தர்கள் அங்குள்ள ஆலயத்தைத் தரிசித்தும் வேங்கடவனின் அருள் பெறலாம்.

திருமலைக்குச் சென்று நேர்த்திக்கடன்களைச் செலுத்த முடியாத பக்தர்களுக்காகவும், தங்கள் வழிபாடுகளையும் பிற சடங்குகளைச் செய்திடவும் ஒருங்கிணைத்த ஆந்திர மாநிலத்தில் தி.தி.தே. அமைத்துள்ள திருவேங்கடமுடையானின் ஆலயங் களை இந்த பிரம்மோத்ஸவ வேளையில் தரிசிப் போம் வாருங்கள்.

## ஸ்ரீ வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம் - ரிஷி கொண்டா, விசாகப்பட்டினம்

விசாகப்பட்டினம், ரிஷிகொண்டாவில் ஒரு புகழ்பெற்ற புனித யாத்திரை தலமாக அமைந்து உள்ளது. கோயிலின் விக்ரக பிரதிஷ்டை மற்றும் மஹாசம்ப்ரோக்ஷணம் 23.03.2022 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

### அமைவிடம்

ஆர்.கே. கடற்கரையிலிருந்து ரிஷிகொண்டா வழியாக பீமிலி கடற்கரைக்குச் செல்லும் ஆந்திர மாநில அரசு பேருந்துகளும், தனியார் வாகனங்க ளும் உள்ளன. இக்கோயில் சென்னை – கொல்கத்தா தேசிய நெடுஞ்சாலைக்கு அருகில் அமைந்துள்ளது.

## ஸ்ரீவேங்கடேஸ்வரஸ்வாமி ஆலயம்-அமராவதி

அமராவதியில் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி கோயிலை திருமலை திருப்பதி தேவஸ்தானம் மிகச் சிறப்பான முறையில் கட்டியுள்ளது. இக்கோயில் ஜூன் 2022–ல் விக்ரக பிரதிஷ்டையுடன் திறக்கப் பட்டது. தரிசனத்திற்காக தினமும் காலை 06:00 மணி











முதல் இரவு 08:00 மணி வரை நடை திறந்திருக்கும். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அதிகாலையில் மூலவருக்கு அபிஷேகம் நடைபெறும்.

**அமைவிடம்**

மங்களகிரியில் இருந்து 13 கி.மீ. தொலைவிலும், விஜயவாடாவிலிருந்து 15 கி.மீ. தொலைவிலும், குண்டூரிலிருந்து 40 கி.மீ. தொலைவிலும் இவ்வாலயம் அமைந்துள்ளது.

**ஸ்ரீ வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம் - சீதம்பேட்டை, பார்வதிபுரம், மன்யம்**

இக்கோயிலின் மஹாசம்ப்ரோக்ஷணம் 04.05.2023 அன்று நடைபெற்றது. இக்கோயிலில் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமிக்கு வலதுபுறம் ஸ்ரீபத்மாவதித் தாயார் சன்னதியும், இடதுபுறம் ஸ்ரீகோதாதேவி தாயார் சன்னதியும் அமைந்துள்ளன. ராஜகோபுரம், மடப்பள்ளி மற்றும் உக்ராணம் (பொருட்கள் சேமிப்பு அறை) ஆகியவை கோயில் பிரகாரத்திற்கு உள்ளேயே கட்டப்பட்டுள்ளன.

**அமைவிடம்**

இக்கோயில் பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 2 கி.மீ. தொலைவிலும், ஸ்ரீகாகுளம் சாலை ரயில் நிலையத்திலிருந்து 28 கி.மீ. தொலைவிலும் மற்றும் சீபுருபள்ளி ரயில் நிலையத்திலிருந்து 53 கி.மீ தொலைவிலும் அமைந்துள்ளது.

**ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம் - ரம்பச்சோதவரம்**

மாநிலம் முழுவதும் உள்ள தொலைதூரக் கிராமங்களிலும் சனாதன தர்மத்தைப் பரப்புவதற்கான பணிகளை திருமலை திருப்பதி தேவஸ்தானம் பெரும் அளவில் முன்னெடுத்து உள்ளது. அவ்வகையில் அல்லூரி சீதாராமராஜு மாவட்டத்தில் உள்ள ரம்பச்சோதவரத்தில் மலைவாழ் மக்கள் வாழும் பகுதியில் ரூ.4.50 கோடி செலவில் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி கோயிலை தி.தி. தே. கட்டியுள்ளது.

**அமைவிடம்**

இக்கோயிலுக்கு ஆந்திர மாநில அரசு பேருந்து வசதி உள்ளது. மேலும், தனியார் வாகனங்கள் மற்றும் சொந்த வாகனங்கள் மூலமாகவும் இக்கோயிலைச் சென்றடையலாம்.

**ஸ்ரீ கல்யாண வெங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம் - நாராயணவனம்**

ஆகாச மகாராஜா நிலத்தை உழுதபோது, தாமரை மலரில் (பத்மம்) ஸ்ரீ பத்மாவதித் தாயார் அவதரித்த தெய்வீகத் தலம் நாராயணவனம் ஆகும்.

ஸ்ரீநிவாசப் பெருமாள் வேட்டையாடுவதற்காக வனத்திற்கு வந்தபோது, பத்மாவதித் தாயார் தனது தோழிகளுடன் விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்து, அவர் மீது அன்பு கொண்டு, வகுள மாதாவின் உதவியுடன் இத்தலத்தில் திருமணம் செய்து கொண்டார். நாராயணனே மாப்பிள்ளையாக அவதரித்து ஸ்ரீபத்மாவதியைத் திருமணம் செய்து கொண்டதால், இத்தலம் “நாராயணபுரம்” என்று அழைக்கப்பட்டு இன்று “நாராயணவரம்” அல்லது “நாராயணவனம்” என்று அழைக்கப்படுகிறது.

ஸ்ரீபத்மாவதி, ஸ்ரீ வேங்கடேஸ்வர ஸ்வாமியின் திருமணத்தின் நினைவாக, ஆகாச மகாராஜா நாராயணவனத்தில் ஒரு கோயிலைக் கட்டினார். இங்கு ஸ்ரீ கல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி மற்றும் ஸ்ரீ பத்மாவதித் தாயாருக்கு தனித்தனி சன்னதிகள் உள்ளன. இது தவிர, இக்கோயிலின் பிரதான ராஜகோபுரம் பேரரசர் ஸ்ரீகிருஷ்ண தேவராயரால் கட்டப்பட்டது. இக்கோயில் ஏழு நிலைகளோடு 150 அடி உயரத்தில் மிக அழகாகக் காட்சியளிக்கின்றது.

ஆண்டுதோறும் வைகுண்ட துவாதசி அன்று இக்கோயிலின் வடக்கு வாசல் திறக்கப்படுகிறது. இங்கு ஸ்வாமியின் திருக்கரத்தில் கல்யாண கங்கணம், வேட்டை வாள் கொண்டு நேத்ர தரிசனத்து டன் அருள்பாலிக்கின்றார்.

வேங்கடாசல புராணத்தின்படி, வேதவதியே இத்தலத்தில் பத்மாவதியாக அவதரித்தார். ஸ்ரீபத்மாவதித் தாயார் நான்கு திருக்கரங்களுடன் தாமரை மலரில் அமர்ந்த நிலையில் காட்சியளிக்கிறார்.

இக்கோயில் 29.04.1967 அன்று தி.தி. தேவஸ்தான நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. ஸ்ரீ கல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமிக்கு ஆர்ஜித சேவையாக "நித்ய கல்யாண" உற்சவம் நடத்தப்படுகிறது. ஸ்ரீ ஆண்டாள் தாயார், ஸ்ரீகோதண்ட ராம ஸ்வாமி, ஸ்ரீரங்கநாத ஸ்வாமி மற்றும் ஸ்ரீராஜ மன்னார் ஸ்வாமியும் இத்திருக்கோயிலில் காட்சி அளிக்கின்றனர்.

### உப கோயில்கள்

ஸ்ரீஆஞ்சநேய ஸ்வாமி கோயில், ஸ்ரீ பராசரேஸ்வர ஸ்வாமி கோயில், ஸ்ரீ வீரபத்ர ஸ்வாமி கோயில், ஸ்ரீசக்தி விநாயக ஸ்வாமி கோயில், ஸ்ரீஅகஸ்தீஸ்வர ஸ்வாமி கோயில், ஸ்ரீஅவிநாசுஷி அம்மன் கோயில் என சில கோயில்களும் அமைந்துள்ளன.

### அமைவிடம்

அரக்கோணம் – ரேணிகுண்டா ரயில் மார்க்கத்தில் புத்தூர் ரயில் நிலையத்தில் இருந்து 10 கி.மீ. தொலைவிலும், திருப்பதி யிலிருந்து 55 கி.மீ. தொலைவிலும் இத் திருக்கோயில் அமைந்துள்ளது.

### ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம் - விஜயவாடா

விஜயவாடாவில் உள்ள ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி கோயில் தி.தி.தே. கல்யாணமண்டப வளாகத்தில் அமைந்துள்ளது. இக்கோயிலின் மஹா சம்ப்ரோக்ஷணம் 07.06.2010 அன்று நடைபெற்றது. இக்கோயிலில் தினமும் காலை 5:00 மணிக்கு சுப்ரபாதத்துடன் நடைதிறக்கப்பட்டு இரவு 8:30 மணிக்கு ஏகாந்த சேவையுடன் நடை சாத்தப்படுகின்றது.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்று அபிஷேகமும், சனிக் கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இரவு ஊஞ்சல் சேவையும் நடத்தப்படுகிறது.

### அமைவிடம்

இக்கோயில் விஜயவாடா ரயில் நிலையத்திலிருந்து 3.3 கி.மீ. தொலைவிலும், பேருந்து நிலையத்திலிருந்து 2.7 கி.மீ. தொலைவிலும் அமைந்து உள்ளது. பக்தர்கள் எம்.ஜி. ரோடு வழியாக விஜயவாடா ரயில் நிலையத்தில் இருந்து 10 நிமிடங்களிலும், பேருந்து நிலையத்தில் இருந்து 8 நிமிடங்களி லும் இக்கோயிலை வந்து அடையலாம்.




### ஸ்ரீ பிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம் - அப்பளாய குண்ட்டா

1000 ஆண்டுகள் பழமையான இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க இக்கோயில். புராணங்களின்படி, ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி நாராயணவனத்தில் ஸ்ரீபத்மாவதித் தாயாரைத் திருமணம் செய்து கொண்டு, திருமலையில் உள்ள வகுள மாதாவைக் காணச்



செல்லும் வழியில், ஸ்ரீசித்தேஸ்வர முனி தவம் செய்து கொண்டிருந்த இத்தலத்திற்கு வருகை தந்தார். முனிவரின் வேண்டுகோளுக்கிணங்க ஸ்வாமியும் ஒரு திருக்கரத்தில் அபய ஹஸ்தத்துடன் ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வரராகக் காட்சியளித்தார்.

கார்வேடி நகரம் மன்னர்கள் இக்கோயிலைக் கட்டினார்கள், அதுமட்டுமின்றி திருமலை, திருப்பதி மற்றும் திருச்சானூர் கோயில்களுக்கு இணையாக இந்த ஆலயத்தில் அனைத்து உற்சவங்களையும் சிறப்பாக நடத்தினர்.

இக்கோயில் வளாகத்தில் ஸ்ரீ பத்மாவதித் தாயார், ஸ்ரீ ஆண்டாள் தாயாருக்கு தனித்தனி சன்னதிகள் அமைந்து உள்ளன. திருப்பதி பேருந்து நிலையத்திலிருந்து 1 மணி நேரத்திற்கு ஒரு பேருந்து வசதியும் உள்ளது.

## ஸ்ரீ வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம் - பிதாபுரம்

இக்கோயில் 19–ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகும். கோயில் வரலாற்றின்படி, ஸ்ரீபால நாகு லச்சன்னா என்ற வணிகர் தனக்குக் குழந்தை பாக்கியம் இல்லாததால் மிகவும் மன வேதனையில் இருந்தார். அப்போது ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி அவரது கனவில் தோன்றி, கிராமத்தின் மேற்குத் திசையில் ஒரு கோயிலைக் கட்டும்படி கூறினார். கிராம மக்களின் உதவியுடன், ஸ்ரீ பால வேங்கடேஸ்வர ஸ்வாமியைப் பிரதிஷ்டை செய்தார். பின்னர், ஸ்ரீ வேங்கடேஸ்வர ஸ்வாமியின் அருளால் ஸ்ரீ பாலநாகு லச்சன்னாவுக்குக் குழந்தை பாக்கியம் கிடைத்ததுடன், அவரது வணிகமும் செழித்து வளர்ந்தது. அதன் பிறகு, ஸ்ரீபத்மாவதித் தாயார் மற்றும் ஸ்ரீ கோவிந்த ராஜ ஸ்வாமி விக்ரகங்களும் நிறுவப்பட்டன.

### கோயிலின் சிறப்புகள்

இக்கோயில் 14–07–2000 அன்று தி. தி. தே. நிர்வாகத்தின்கீழ் கொண்டு வரப்பட்டது. சேதமடைந்திருந்த பழைய கோயில் முழுமையாக அகற்றப்பட்டு, புதிய கோயில் கட்டப்பட்டது. அதைத் தொடர்ந்து 20.06.2018 அன்று சம்ப்ரோக்ஷணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இக்கோயிலில் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமியின் கருவறைக்கு வலதுபுறம் ஸ்ரீ கோவிந்தராஜ ஸ்வாமி சன்னதியும், இடதுபுறம் ஸ்ரீஜெகந்நாத ஸ்வாமி, பலபத்ரர் மற்றும் சுபத்ரா தாயார் சன்னதிகளும் உள்ளன. உள் பிரகாரத்தில் வலதுபுறம் ஸ்ரீ பத்மாவதித் தாயார் சன்னதியும், இடதுபுறம் ஸ்ரீ கோதா தேவி தாயார் சன்னதியும் அமைந்துள்ளன.

### அமைவிடம்

பேருந்து நிலையத்திலிருந்து 2 கி.மீ. தொலைவிலும், ரயில் நிலையத்திலிருந்து 500 மீ. தொலைவிலும், காகிநாடாவிலிருந்து 20 கி.மீ.தொலைவிலும் அமைந்துள்ளது.

*தொடர்ந்து தரிசிப்போம்...*



# சனீஸ்வரனும் ஸ்ரீநிவாசப் பெருமாளும்



**இது ஒரு சிறு வரலாற்று நிகழ்வு! பெருமாளுக்கும், சனீஸ்வரனுக்கும் உகந்த சனிக்கிழமைகளில் விஷ்ணு மூர்த்தியான திருவேங்கடவனை சரணடைந்தால் சனியின் பிடியிலிருந்து எவ்வாறு தப்பலாம் என்பதை அறிய இதோ இதை படித்து தெரிந்துக்கொள்வோம் வாருங்கள்!**

**– திருமதி சுபா தியாகராஜன்,**
**சேலம், 9994722352**

நம் கர்மவினைகளுக்கு ஏற்ப நன்மைகளையும் தீமைகளையும் செயல்படுத்தவே நவகிரகங்களை இறைவன் தன் செயல் அதிகாரிகளாக நியமித்து இருப்பதை அனைவரும் அறிவோம். அதிலும் சனி பகவான் என்றால் அனைவருமே பயபக்தியுடன் வணங்குவதைக் காணலாம். காரணம் சனியின் செயல் அப்படி. வாழ்நாளில் ஒருமுறையேனும் சனியின் பிடியில் அகப்படுவோர் தங்களின் பாவபுண்ணியங்களுக்கேற்ப இம்மனித வாழ்வின் இன்ப துன்பங்களை அனுபவித்தே ஆகவேண்டும்.

“சனியைப் போல் கொடுப்பாரும் இல்லை; கெடுப்பாரும் இல்லை” என்பது ஆன்மீகவியலாளரின் கருத்து. கோடீஸ்வரனாக இருந்தாலும், அஞ்சா நெஞ்சனாக இருந்தாலும் சனியின் பிடியில் சிக்காதவர் யாரும் இல்லை. உலக உண்மைகளை கடும் சோதனைகள் மூலம் உணர்த்தி மனிதனிடத்தில் நேர்மையையும் நல்வாழ்வினையும் அருள்வதில் சனிக்கு நிகர் எவருமில்லை எனலாம்.

ஆனால், அப்பேர்ப்பட்ட சனி பகவான் முப்பெரும் தெய்வங்களுள் காக்கும் தெய்வமாக அருள்புரியும் அந்த மகாவிஷ்ணுவிற்குப் பணிந்து அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர் பக்தரை சோதித்த கதையைக் காண்போம்.

ஒரு சமயம் வேகமாகப் புறப்பட்ட சனி பகவானை இடையில் வந்து மரித்தார் விஷ்ணு பகவான். சனியின் பார்வை தெய்வத்திடம் பலிக்காதென்பதால் நேராக நின்ற பெருமாளிடம் “ஐயனே என்னைத் தடுத்து நிறுத்தும் காரணம் என்ன?” என்ற சனியிடம், “நீ யாரைப் பிடிப்பதற்காக இவ்வளவு அவசரமாகச் சென்று கொண்டிருக்கிறாய் என்பதை தெரிந்து கொள்ளலாமா?” எனக் கேட்டார்.

மந்தகாசப் புன்னகையுடன் வினவிய பெருமாளைப் பார்த்த சனி “உமக்குத் தெரியாததைப் போன்று கேட்கலாமா? தாங்கள் இங்கு என்னைப் போக விடாமல் தடுக்கும் காரணமும் அதுவே அல்லவா? இருந்தாலும் கூறுகிறேன். உம்முடைய தீவிர பக்தனான ராதாகிருஷ்ணன் எனும் ஆலயத் திருப்பணி செய்யும் மனிதரைப் பிடிக்கும் காலம் இது. அதற்காகவே செல்கிறேன்” என்றார்.

“அதைப்பற்றி பேசவே உம்மைத் தடுத்து நிறுத்தினேன். அவன் என் மேல் உள்ள பக்தியால் என் பெருமைகளை எடுத்துக்கூறி ஆன்மீகத்தை வளர்த்து வருகிறான். மேலும், பழுதடைந்த ஆலயங்களை எல்லாம் பிறரிடம் கையேந்தி கொடைகள் பெற்று அதன்மூலம் ஆலயத்தை புதுப்பித்து திருப்பணிகள் செய்து வருகிறான். நீ அவனைத் துன்பப்படுத்துவதை எப்படி என் மனம் பொறுக்கும்?

தெய்வத்தின் மனதிலும் ஈரம். ஆனால் சனி கடமையில் சுத்தமானவன் அல்லவா?. பெருமாளே அந்த ஈசனே சொன்னாலும் என் கடமை தான் எனக்கு முக்கியம். ஆனாலும், தங்கள் மனம் கவர்ந்த பக்தனுக்காக தாங்கள் கவலைப்படுவதைப் பார்க்க முடிய வில்லை. ஆகவே ஏழரை வருடங்க ளுக்குப் பதில் ஏழரை மாதங்கள் அவனைப் பிடித்துக் கொள்கிறேன்'' என்றார் சனி.

உடனே பெருமாள் "அவ்வளவு கஷ்டங்களை அவன் தாங்க மாட் டான். ஒரு ஏழரை நாழிகை மட்டும் அவனைப்பிடித்து உன் கடமையை ஆற்றுமாறு கேட்டு கொள்கிறேன்'' எனக்கேட்க, சனிக்கு பெரும் மகிழ்ச்சி. "நல்லது ஏழரை நாழிகை யில் அவனைப்படுத்தும் பாட்டைக் காண தயாராக இருங்கள் வருகி றேன்...'' என்றார். பெருமூச்சு விட்ட பெருமாளும் நடப்பதைக் காணும் ஆவலில் பூலோகம் வந்தார்.

விஷ்ணு சுலோகங்கள் சொல்லி காலை வழிபாட்டை முடித்த ராதாகிருஷ்ணன் புதியதாகக் கட்டத் துவங்கியிருக்கும் ஆலய கணக்கு களைப் பார்க்கத் துவங்கினான். இதுதான் சமயமென்று அவரைப் பற்றினான் சனீஸ்வரன். அப்போது அங்கு வந்த இருவர் நன்கொடை என்று சொல்லி ஒரு மூட்டையை அவரிடம் தந்து வணங்கி விட்டு அவசரமாகச் சென்றனர். அதை பின்னர் பிரிக்கலாம் என்றெண்ணி மீண்டும் கணக்குகளைப் பார்க்கத் துவங்கியவனை மீண்டும் அழைத்தது ஒரு குரல். நிமிர்ந்து பார்த்தவரை என்னவென்று கேள்வி எழுப்பக்கூட அனுமதிக்காமல் அரசவைக்கு இழுத்துச் சென்று அரசன் முன் நிறுத்தினான் ஒரு காவலாளி.

அங்கு இருந்த பணக்கார சீமாட்டி "இதோ இவர்தான் கடைசி யாக கோயிலுக்கு நன்கொடை என்று என் இல்லத்திற்கு வந்தவர். இவர் தான் அந்த நகைகளை எடுத்திருக்க வேண்டும்'' என்றாள். ராதா கிருஷ்ணன் பதறினார். "ஐயோ என்ன





- திரு.நம்பி எஸ்.தேவர்,
நவிமும்பை, 99674 72373


*பாதத்தைக் காட்டி பலன் தருவாய் காரண நாரணனே*
*வேதத்தை யான்பயின்று வெற்றி அடைந்திட*
*நாதத்தை ஏற்றி நானுன்னை நாளும் சேவிப்பேன்*
*வேதாசலனே! விண்ணோர் வணங்கும் கோமானே*

*நாதத்தில் உறைபவனே கீதத்தில் திகழ்பவனே*
*வித்தகனே வேதவெற்பில் விளையாடி வாழ்பவனே*
*வேழம் விளிபிதுங்க வீழ்ந்துபட வீழ்த்தியவனே*
*கருடாசலத்தில் வீற்றிருக்கும் கண்கண்ட தெய்வமே*

*விண்ணில் விரிந்து மண்ணில் மலர்ந்த மணமலரே*
*என்னுள்ளத்திலுள்ள காரிருளை நீக்கும் கருணைக் கடலே*
*திண்ணமாய் உன் துதிப்பாடி சேவிக்க அருள்வாய்*
*அஞ்சனாசலத்தில் அனைவருக்கும் ஆறுதல் தரும் அருமருந்தே*

*பொன்னாசனத்தில் புனிதமாய் வீற்றிருக்கும் குணக்குன்றே*
*சஞ்சலத்தில் வீழ்ந்தோரை வாழ வைக்கும் மாலவனே*
*தஞ்சமடைந்தவர்களை காலமெல்லாம் காக்கும் கருணைக் கடலே!*

*விருஷாசலத்தில் வினை களையவேரூன்றி நிற்பவனே*
*சேஷாசலத்தில் சிறந்தமர்ந்து சிறப்பிக்கும் சீமானே*
*பேரானந்தத்தில் பெருகி வரும் பெரிய பெருமாளே*
*பரலோக வாழ்விற்கு நற்பாதை காட்டும் நாரணனே*

*நாராயணசலத்தில் நான்கண்ட பூரணனே பரம்பொருளே*
*அரவணையில் அமர்ந்துள்ள ஆயர்குலக் கொழுந்தே*
*அமரர்கோனே அகிலமெல்லாம் பரந்து விரிந்தவனே*
*அண்டத்திலிருந்து பிண்டமாக ஆனவனே அன்புடன் சேவிப்போம்!*

*சேஷாசலத்தில் சிறந்து திக்கெட்டும் திகழ்பவனே*
*வேதாசலத்தின் மண்ணில் வேதவெற்பாய் நின்றவனே*
*கோதையின் மாலைச்சூடி மனமகிழ்ந்து நிற்பவனே*
*பாதையைக் காட்டி கலியில் எம்மை காத்தருள்வாய்!*

இது. நான் எதற்கு உங்கள் நகைகளை எடுக்க வேண்டும். பகவான் புண்ணியத்தில் மூன்று வேளை உணவுடன் இருக்க ஆலயம், உடுக்க காவித் துணின்னு இருக்கேன். நான் குற்றமற்றவன்" எனப் பதறி அழ, சீமாட்டியின் குற்றச்சாட்டை நிரூபித்தது அவர் இருந்த இடத்தில் இருந்து காவலாளி கொண்டு வந்திருந்த மூட்டை. "நீங்கள் குற்றமற்றவர் என்றால் இது..." கூறியபடி அரசர் முன் அதைப் பிரிக்க, அதில் இருந்தது சீமாட்டியின் தொலைந்த நகைகள்... ஆகா சனீஸ்வரனின் விளையாட்டு துவங்கி விட்டது.

நகைகளைத் திருடிய குற்றத்திற்காக ராதா கிருஷ்ணனுக்கு சவுக்கடிகளும் சாணிக்கரைசலும் பொதுமக்கள் முன்னிலையில் நிறைவேற்றப்பட்டது. இவ்வளவு நாள் கட்டிகாத்த மானம் போய் இப்படித் திருட்டுப் பட்டதுக்கு ஆளாக நேர்ந்ததை எண்ணி மனம் வேதனையுற்ற ராதாகிருஷ்ணன் சவுக்கடியி னால் உடல் முழுதும் ரத்தக் காயங்களுடன் இனி வாழ்ந்து என்ன பயன் என்று தள்ளாடியபடி தான் ஆலயத்திருப்பணி செய்த பெருமாள் ஆலயத்தின் திருக்குளம் முன் நின்று "பெருமாளே! என் நினைவு தெரிந்த நாள் முதல் உன்னைத் தவிர வேறொன்றும் என் சிந்தையில் நிறுத்தியதில்லை. இந்தப் பழியை யும் நீ எனக்குத் தந்த பரிசாகவே நினைக்கிறேன். ஆயினும் இந்த மனிதப்பிறவி இப்படியொரு பழியைச் சுமந்து வாழ்தல் வீண். இந்த உயிரை உன் காலடியில் சேர்க்கிறேன்" என்று சொல்லியவாறு குளத்தில் விழப்போனவரை தடுத்தது அசரீரி. "நில் லுங்கள். நான்தான் சனீஸ்வரன். உங்களின் இந்த துயரத்துக்கு நானே காரணம். பெருமாள் மீதான உங் களின் பக்தியினால் பெருமாளின் வேண்டுகோளை ஏற்று வெறும் ஏழரை நாழிகை மட்டுமே இத்துன்பங் களை நீங்கள் அனுபவிக்க நேர்ந்தது. இனி உங்கள் பழிச்சொல் நீங்கும் கவலை வேண்டாம்".

அப்போது அங்கு வந்த அரசரும் சீமாட்டியும், ராதாகிருஷ்ணனிடம் வந்து நகைகளைத் திருடிய திருடர்கள் மாட்டிக்கொள்வோம் என்று அஞ்சி நன் கொடையாக அவரிடம் அதைச் சேர்த்ததாகவும், அவர்களாகவே தங்கள் குற்றத்தை ஒப்புக் கொண்ட தாகவும் கூறி தங்களை மன்னிக்கும்படி வேண்டினர். பிராயச்சித்தமாக அந்த நகைகளை எல்லாம் ராதா கிருஷ்ணன் செய்யும் ஆலயத் திருப்பணிக்குத் தருவதாக சீமாட்டி அவரிடமே ஒப்படைத்தாள்.

ராதாகிருஷ்ணனுக்காக பெருமாளே சனியிடம் வேண்டுகோள் வைத்த செய்தி ஊர்மக்களுக்கு தெரியவர மாலை மரியாதைகளுடன் அவரை வர வேற்றனர். தன் துன்பங்கள் அனைத்தும் மறந்து பெருமாளுக்கு நன்றி கூறித் தன் இறைப் பணியைப் புது உற்சாகத்தோடு வாழ்நாள் முழுதும் செய்து பெருமாளின் திருவடி சேர்ந்தார் ராதா கிருஷ்ணன்.

## ஸப்தகிரி ஜூலை 2026 விடைகள்

1. திருவேங்கடமுடையான்.
2. பாண்டவர்களுடன்.
3. ஸ்ரீசௌம்யநாதர்.
4. பூரிசிரவஸூ.
5. மாசி, அஸ்வினி.
6. அபிராமிபட்டர்.
7. திருமலை நம்பி.
8. முருகப்பெருமான்.
9. உத்திரட்டாதி.
10. பாரதியார்.
11. மணவாளமாமுனிகள்.
12. ஸ்ரீமூர்த்திப்பெருமாள்.
13. சிவபெருமான்.
14. அர்ஜுனன்.
15. கம்பர்.






## போட்டி எண். 48

**சரியாகப் பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றி பெற்றவர்கள்**

1. செல்வி தரணிகா,
மன்னார்குடி, திருவாரூர்.
2. செல்வன் தருண்,
மகாவீர் நகர், பாண்டிசேரி.
3. செல்வி சௌவரந்திகா,
பரமத்திவேலூர், நாமக்கல்.



# உலகு தன்னை வாழ நின்ற நம்பீ!


– டாக்டர் ஜி. கௌசல்யா விஜயன், வேலூர், 9944774860


இறைவன் மீது கொண்ட அன்பில் ஆழ்ந்தவர்கள் ஆழ்வார்கள். அவர்களில் பெரியாழ்வார் தான் மட்டும் அல்லாமல் தன் உடைமைகள் (பொருட்கள்) அத்தனையையும் இறைவனுக்கு அற்பணம் செய்கிறார். எப்படி எனில் இறைவனை அன்புடன் அழைக்கிறார். இறைவன் ஆயிரம் பெயர்களை உடையவன். அந்தப் பெயர்களில் எதையாவது சுட்டுகின்றாரா? என்றால் இல்லை.

அவர் இறைவனை "நம்பீ" என்று அழைக்கிறார். "நம்பி" என்றால் ஆண்களில் சிறந்தவன் என்று பொருள். நற்குணங்களை உடைய "நம்பீ!" என்று அழைத்துப் பேசமுற்படுகிறார், பேசுகிறார். "ஏழு மலையில் நின்ற கோலத்தில் உலகை வாழவைப்பவனே! ஆயர்பாடியில் யசோதை உன்னைத் தாம்புக்கயிற்றால் கட்டியதால் வயிற்றில் தழும்பு ஏற்பட்டு அன்று முதல் "தாமோதரன்" என்று அழைக்கப் பட்டவனே,

உன் அன்பினுக்கு அடிமையான நான் என்னையும், என் பொருட்களையும் உன்னுடைமையாக்கினேன். அதற்கான அடையாளம் உன் கையில் உள்ள "சக்கரப்" பொறியைக் "காய்ச்சி" என் உடலில் ஒற்றிக் கொண்டேன். உன் அடியவனான நான் அடுத்து செய்ய வேண்டிய செயலென்ன? உன் கட்டளைக்காகக் காத்திருக்கிறேன் என்று கேட்கிறார்.

*சென்னி ஓங்கு தண் திருவேங்கடம் உடையாய் உலகு*
*தன்னை வாழ நின்ற நம்பீ தாமோதரா சதிரா*
*என்னையும் என்னுடைமையையும் உன் சக்கரப் பொறி ஒற்றிக் கொண்டு*
*நின் அருளே புரிந்து இருந்தேன் இனி என் திருக்குறிப்பே?*

பெரியாழ்வார் என்ற பெயரிலேயே "பெரிய" என்ற சொல் அடங்கியிருந்தாலும் எல்லாரையும் விட பெரியவனான இறைவனது கட்டளையை ஏற்று கடமையாற்ற வேண்டும். மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறார் பெரியாழ்வார் வேங்கடவன் கட்டளை கேட்டு காத்திருப்பதன் மூலம்.

ஆழ்வார் கேட்டபின்னும் இறைவன் தராமல் இருப்பானா? இறைவன் அருளைத் தந்து விட்டான். அதில் திளைக்கிறார் ஆழ்வார். அவரது பாவங்கள் காடுபோல் செழித்திருந்தன அவை அழிந்தன. (ஆழ்வாரின் பாவங்களே கடலளவு பெருகி இருந்தது என்றால் நாம் செய்யும் பாவங்களுக்கு அளவுகோல் ஏது). கருடன் மீது உலாவரும் இறைவா! பாவங்கள் போனதால் பிறவிக் கடல் வற்றிற்று. "அறிவு" எனக்கு வந்தது என்கிறார். எந்த அறிவு என்றால் "உலகியல் மாயையாகிய அறியாமை நீங்கி இறைவனைப் பற்றிய ஆன்மீக அறிவு கிட்டியது" என்கிறார். இதனை நமக்கு உணர்த்தும் பாசுரம்.

*பறவை ஏறு பரம்புருடா! நீ என்னைக் கைக் கொண்டபின்*
*பிறவி என்னும் கடலும் வற்றிப்பெரும்பதம் ஆகின்றதால்*
*இறவு செய்யும் பாவக்காடு தீக் கொளீ இ வேகின்ற தால்*
*அறிவை என்னும் அமுதவாறு தலைப்பற்றி வாய்க் கொண்டது*

அறிவு பெற்ற ஆழ்வாரை இனியும் ஏமாற்ற முடியாது என்று உணர்ந்த அறியாமையின் இருப்பிடமான இது நாள்வரை அவரை அழுத்திக் கொண்டிருந்த "பாவங்கள்" அவரைவிட்டு விலகி இருள் செறிந்த புதரினை அடைக்கலமடைந்தன. அதனால், பாற்கடல் கடைந்து அமுதத்தை கலசத்தில் நிறைத்தது போன்று உடல் உருகி வாய்திறந்து உன் நாமம் துதித்து பிறவிப் பிணிக்கு மருந்தான உன்னை என்னுள் நிறைத்துக் கொண்டேன். இனி என் அருகில் காலன் வர மாட்டான் என்கிறார்.

*"கொடுமை செய்யும் கூற்றுமும் என் கோலாடி, குறுகப் பெறா தடவரைத் தோள் சக்கரபாணீ சார்ங்கவில் சேவகனே"* என்பது அப்பாசுரம். "என் தந்தை போன்றவனே, இருடிகளின் தலைவனான "இருடிகேசா" உன்னை என்னுள் முழுவதுமாக நிறைத்துக் கொண்டேன்" என்கிறார். யாரொருவர், நான், எனது என்ற ஆணவமும், மாயையும் நீங்கப் பெற்று இறைவனின் பாதங்களைச் சரண் அடைபவனுள் இறைவன் தங்குவான் என்பதற்குத் தன்னை உதாரணம் ஆக்குகின்றார் பெரியாழ்வார்.


பெரியாழ்வாரின் உடம்பாகியக் கோயிலினுள் கருவறையும், கருவறையுள் மாயனான மாதவன் நிலைபெற்று நின்று விட்டான் எப்படி? என்பதைப் பாசுரம் சொற்சித்திரம் ஆக்குகின்றது.

*உன்னுடைய விக்கிரமம் ஒன்று ஒழியாமல் எல்லாம்*
*என்னுடைய நெஞ்சகம் பால் சுவர்வழி எழுதிக் கொண்டேன்*

வேங்கடமுடையான்பால் பேரன்பு கொண்ட பெரியாழ்வார் இறைவனுக்கு அன்புக் கட்டளை இடுகிறார். அக்கட்டளை, "என் உடலைக் கோயிலாகக் கொண்டு என் உள்ளமாகிய சுவற்றில் என்னால் சித்திரமாக்கப்பட்டு விட்ட நீ இனி எங்குமே போகக் கூடாது" என்று பேராசைப்பட்டு கட்டளை இடுகின்றான். இதற்கு உலகியல் நிகழ்ச்சி ஒன்றையும் உதாரணமாகக் கூறுகிறார்.

ஒரு அரசன் தான்பெற்ற வெற்றியின் அடையாளமாகத் தன் முத்திரை பொறித்த ஆணைச் சக்கரத்தையே அந்நாட்டிலும் வழங்குவான். பாண்டிய அரசன் இமயமலையில் தன் மீன் சின்னத்தைப் பொறித்தது போல, இறைவா! உனது சக்கரப் பொறியை என் உடலில் பொறித்துக் கொண்டதன் மூலம் நான் உன் அடிமை என்பது தெளிவாகிறது.

அது மட்டுமல்லாது உனது சிவந்த திருவடிகளை என் தலைமீது வைத்து ஆசி வழங்கினாய். இதன் அடையாளமாகத் தான் இன்றும் பெருமாள் சந்நிதியில் "சடகோபரது திருமுடி" பக்தர்களுக்கு அணிவிக்கப்படுகின்றது. இவை மட்டுமல்லாது



பலரது அகந்தையை அழித்து அடிமை கொண்டான் இறைவன் என்பதை,

*மருப்பொசித்தாய் மல் அடர்த்தாய் என்று*
*என்று உன் வாசகமே*
*உருப்பொலிந்த நாவினேனை*
*உனக்குரித்து ஆக்கினையே*

என்கிறது பெரியாழ்வார் பாசுரம். மூவுலகிலும் உன் அருள் பெற்றவர்களில் என்னைவிடச் சிறந்தவர் இல்லை. நீ உனது அன்பை, கருணையை, அருளைச் சிறிய அளவிலேயே ஆதிசேஷனிடமும் கருடனிடமும் வைத்தாய். உன் அருளை அதிகமாகப் பெற்ற காரணத்தால் என் உடல் முழுதும் அவ்விறையன்பு பெருகக் கண்களில் கண்ணீர் பெருக்கெடுக்கின்றது.

பக்தனின் அன்பு இறைவன் மீது ஒரு பங்கு என்றால், இறைவன் பாற்கடலை விட்டுவிட்டு வந்து விட்டார். பாற்கடலில் "அனந்தசேஷன்" மட்டும் தனியே கிடக்கிறான் என்பதைப் படிப்பார் மனம் கொள்ளும் வகையில் பாசுரமாக்குகிறார். அதுமட்டுமின்றி காந்த சொரூபனான வேங்கடவனின் சுடரொளி அழகையும்,

## வாமனரான திருவேங்கடவன்



வாமனர் தம்முடைய திருவடியால் மூன்றடி நிலம் தானமாக வேண்டினார். மஹாபலி நீரினால் தானம் வார்த்தபின், வாமனர் மண்ணிற்கும் நெடிது வளர்ந்து ஓரடியால் பூலோகத்தினையும், இரண்டாவது அடியால் விண்ணுலகத்தினையும் அளந்து, மூன்றாவது அடிக்கு இடம் போதாமையால் மகாபலியின் விருப்பப்படி அவனது தலைமேல் வைக்க, மகாபலி பாதாள லோகத்திற்குள் அழுத்தப்பட்டான். இந்திரனுக்கு திருவிக்கிரம அவதாரத்தினால் மறுபடியும் இந்திர பதவி கிடைத்தது. பொய்கையாழ்வார் வாமன அவதாரத்தினை திருவேங்கடவனிடம் அனுபவித்து அடியார்களுக்கு பரமபத புருஷார்த்தமான பேரின்ப வாழ்வினை நிறைவோடு பெருமாள் அருளுவதாகப் பாசுரமிடுகிறார்.

*வழிநின்று நின்னைத் தொழுவார் வழுவா*
*மொழிநின்ற மூர்த்தியரே யாவர் - பழுதொன்றும்*
*வாராத வண்ணமே விண்கொடுக்கும், மண்ணளந்த*
*சீரான் திருவேங்கடம்.*

*பனிக்கடலில் பள்ளி கோளைப் பழக விட்டு ஓடிவந்து என்*
*மனக்கடலில் வாழவல்ல மாய மணாள நம்பீ!*
*தனிக்கடலே தனிச்சுடரேதனிஉலகே...*

தனிச்சுடராக, தனி உலகாக இறைவனைக் காணுகிறார். மேலும் "இறைவனது பேரொளி" தன் நெஞ்சில் சுடரொளியாக ஆனதையும், அவர் வடமதுரை, வைகுந்தம், மதில் சூழ்ந்த துவாரகை முதலிய ஊர்களை விட்டு பெரியாழ்வார் நெஞ்சை இடமாகக் கொண்ட தன்மையைப் பெருமிதத்தோடும் கூறுகின்றார்.

*தடவரைவாய் மிளிர்ந்து மின்னும் தவளநெடும் கொடிப் போல்*
*சுடர் ஒளியாய் நெஞ்சினுள்ளே தோன்றும் என் சோதி நம்பி*
*வடதடமும் வைகுந்தமும் மதிள் துவராபதியும்*
*இடவகைகள் இகழ்ந்திட்டு என்பால் இடவகை கொண்டனையே!*

முதல் பாசுரத்தில் சென்னி ஓங்குவேங்கட மலையில் உலகம் வாழ நின்றவன். அடியவனது அன்புக்கு ஆட்பட்டு அவ்வடியவர் நெஞ்சைக் கோயிலாகக் கொள்வான் என்பது கடைசி பாசுரத்தில் தெரிய வருகிறது. அப்படி இறைவன் அடியவர் மனதை தன் இருப்பிடமாகக் கொள்ளும் போது முதல் பாசுரத்தில் குறிப்பிட்டது போன்று நின்ற கோலத்தில் இல்லை. சுடரொளியாகக் காட்சி அளிக்கிறான். ஏன் இந்த மாற்றம் எனில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு படிகளில் முதல்பாசுரத்தில் ஆழ்வார் ஊனக் கண்களால் இறைவனைக் கோயிலுள் காண்கிறார். அப்போது அவர் சரியை நிலையிலுள்ளார். பின் சரணடைகிறார். இறைவனின் சக்கரப் பொறியைப் பொறிப்பது கிரியை நிலை. ஆழ்வார் மனம் இறைவனைத் தியானிக்கிறது. யோகநெறி நிற்கிறார். ஞானம் கிட்டுகிறது. ஞானத்தின் பயனாய்க் கோயிலுள் சிலையாய் நின்ற இறைவன் பெரியாழ்வாரின் உள்ளத்தில் ஓவியமாகிறார். பின்பும் தொடர்ந்து ஆழ்வார் ஞானமார்க்கம் சென்றதால் ஓவியமும் மறைகின்றது, "ஒளிதோன்றுகின்றது". முதலில் அவ்வொளி சுடராய்த் தோன்றுகிறது. சுடர் வளர்ந்து. மின்னல் கொடியாகிறது, பின் சுடர் ஒளியாய் நிற்கிறது. இறைவனை ஜோதியாய், அருவமாய்க் கண்டார் பெரியாழ்வார்.

தான் பெற்ற இவ்வொளி நிலையே ஆகாய ரூபமான இறைவனுடன் ஜீவனை ஐக்கியப்படுத்தும் நிலை "பேரின்பநிலை". இவ்வின்ப நிலையைத் "தான்பெற்ற இன்பத்தை" உலகுக்கு உணர்த்தவே இப்பாசுரங்களை பெரியாழ்வார் படைத்துள்ளார். பேரின்ப நிலைக்கு ஜீவனை அழைத்துச் செல்வது உருவநிலையில் உள்ள இறைவனது "திரு உருவமே". ஊனக் கண்கொண்டு கோயிலினுள் உள்ள இறைவனைப் பார்த்துப் பார்த்துப் படியெடுத்து கண்கள் உலகமாயையில் இலயிக்காது. இறைவனது திருவுருவ அழகில் திளைத்து உடற்கோயிலாம் நெஞ்சக்கருவறையில் பார்க்கிறது. பார்க்கப்பார்க்க இறைவன் ஒளிவிடுவான் என்கிறது திருமந்திரம்.



# வேங்கடாத்ரி கவி தரிசித்த வேங்கடநாதன்

காயார் கோமடம்
சேஷாத்ரிதாஸன்,
சென்னை,
9486139685

வேங்கடாத்ரி கவியின் படைப்பில் திருவேங்கடநாதன் இவ்வுலகில் பிறந்துள்ள மக்கள் அனைவரையும் நல்வழிப்படுத்தவே வேதங்கள், உபநிஷத்துக்கள் ஆகியவை அவதரித்தன. அவற்றின் மெய்ப்பொருளை உள்ளது உள்ளபடி அறிந்து கொள்ளும் திறன் அனைவரிடத்திலும் இல்லை என்பதால் வேதசாஸ்திரங்களின் சாரத்தினை உள்ளடக்கிய பதினெட்டு புராணங்களும் இயற்றப்பட்டன.

பின்னர் பூரண அவதாரங்களாகிய ஸ்ரீராமர், ஸ்ரீகிருஷ்ணர் இருவரின் திவ்ய சரித்திரங்களை விவரிக்கும் ஸ்ரீமத்ராமாயணம், மஹாபாரதம் ஆகிய இதிகாசங்களும், ஸ்ரீமத்பாகவத மஹாபுராணமும் இயற்றப்பட்டன. வடமொழியில் பிறந்த வேத–வேதாந்த–புராண–பக்தி இலக்கியங்கள் பெரும்பாலும் பத்யம் எனப்படும் சுலோகங்கள், கவிதைகளால் ஆனவையாகும்.

காலப்போக்கில் சாமானியர்களும் பொருளுணர்ந்து பயன்பெற வேண்டும் என்ற பெருங்கருணையுடன் கத்யம் எனப்படும் உரைநடை வடிவிலான பக்திப் படைப்புகள் நம் முன்னோர்களாகிய சான்றோர்களால் அருளப்பட்டன.

ஸ்ரீமத்ராமாநுஜர் அருளிய சரணாகதி கத்யம், ஸ்ரீரங்க கத்யம், வைகுண்ட கத்யம், ஸ்ரீவேதாந்த தேசிகர் அருளிய ஸ்ரீரகுவீரகத்யம் ஆகியவை வடமொழி உரைநடையில் அமைந்த துதி நூல்களாகும்.

நாளடைவில், கவிதை (பத்யம்), உரைநடை (கத்யம்) ஆகிய இரண்டும் கலந்த புதிய வகைப் படைப்புகள் வடமொழியில் தோன்றின. புதுமையான வாசிப்பு அநுபவத்துடன் ஆன்மீக உணர்வையும் தோற்றுவிக்கும் இத்தகைய படைப்புகள் சம்பு என்று அழைக்கப்பட்டன. இவ்வகைப் படைப்புகளில் "விச்வகுணாதர்ச சம்பு" மிகவும் புகழ்பெற்று விளங்கும் சம்பு காவியமாகத் திகழ்கின்றது.

மகான் அப்பைய்ய தீக்ஷிதரின் மகனாகிய ரகுநாத தீக்ஷிதரின் திருமகனாக பதினேழாம் நூற்றாண்டில் அவதரித்த அரசாணிபாலை வேங்கடாத்ரிகவி என்பவரால் அருளப்பட்டதே விச்வகுணாதர்ச சம்பு ஆகும். உலக இயல்புகளைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக விளங்கும் இக்காவியம் வழக்கமான பக்தி ஆன்மீக இலக்கிய வடிவங்களிலிருந்து வேறுபட்ட கருவுடன் படைக்கப்பட்டு உள்ளது.

விசுவாவசு, கிருசானு ஆகிய இரண்டு கந்தர்வர்கள் நமது பாரததேசம் முழுவதையும் தரிசிக்க விரும்பித் தங்களுடைய விமானத்தில் ஆகாய மார்க்கமாக சஞ்சரித்த பொழுது அவர்கள் இருவருக்குமிடையில் நிகழ்ந்த உரையாடல்களின் வடிவமாக அமைந்த இக்காவியம் நமது கருத்தை வெகுவாகக் கவர்கின்றது.

சாதாரண மனிதர்களைப் போலவே இவ்விரு கந்தர்வர்களும் எதிரெதிரான குணாதிசயங்களைக் கொண்டவர்களாக விளங்குவது இக்காவியத்தினை மேலும் சுவாரசியம் ஆக்குகின்றது.

இவ்விருவரில், கிருசானு என்ற கந்தர்வன் எதிலும் குற்றங்களையே கண்டுபிடிப்பவன். விசுவாவசுவோ நேர் மறையான எண்ணம் கொண்டவனாக இருப்பதுடன், தன்னு டைய நண்பன் கிருசானுவின் எதிர்மறையான சிந்தனையைப் போக்க முயற்சிப்பவனாகவும் விளங்குகின்றான்.

இவ்வகையில், இமயமலையில் அமைந்து உள்ள பத்ரிகாசிரமம் உள்ளிட்ட வட இந்தியப் பிரதேசங்கள், குஜராத் (கூர்ஜரம்), மஹாராஷ்டிரம், ஆந்திரம், கர்நாடகம் ஆகிய பகுதிகளின் மேலாக வான்வெளியில் சஞ்சரிக்கும் இவ்விரு கந்தர்வர்களும் எம்பெருமான் திருவேங்கடமுடையான் எழுந்தருளியிருக்கும் திருவேங்கட மலையைத் தரிசித்தவாறு செய்யும் உரையாடல் மிகவும் விசேஷமாக அமைந்துள்ளது.

வாருங்கள், திருவேங்கடவனின் மகிமையை மேன்மேலும் நமது நெஞ்சில் பதியவைக்கின்ற விசுவகுணாதர்ச சம்புவினுள் நாமும் நுழைந்து அநுபவிப்போம்.

*ஸுரபிதமத மாலஸ்தோம புஷ்யத்ரஸால*
*ப்ரகர திலக ஸால ப்ரேஷ்ட ஸுஷ்டு த்ருஜால: ।*
*ச்ரித ஸம வநசீல: ஸ்ரீசலீலா அநுகூல:*
*சிதிலித பவமூல:சேவ்யதாம் சேஷசைல:।।*

நேர்மறைச் சிந்தனையுள்ளவனாகிய விசுவாவஸு கூறு கிறான்: நறுமணமுள்ள சாலமரம், மாமரம், திலகமரம், தேக்கு மரம் ஆகியவை செழித்துவளரக்கூடிய இத்திருவேங்கட மலையானது, தன்னை அண்டியவர்களைப் பாதுகாக்கும் ஸ்ரீஸ்ரீநிவாஸப்பெருமாளுடைய லீலைகளுக்கு இருப்பிடமாய் விளங்குகின்றது. மனிதர்களின் ஸம்ஸார பந்தத்திற்கு மருந்தாக வும் உள்ளது. ஹே க்ருசானுவே! இப்படிப்பட்ட மகிமைகள் வாய்ந்த திருமலையைச் சரணமடைவாயாக.

*பந்நகேஷு ச நகேஷு ககேஷு த்வீபிராஜஸு ப்ருஷத்ஸு த்ருஷத்ஸு ।*
*வல்லவிஷு ச தரீஷு ஜரீஷு ப்ரார்த்தயந்தி ஜநிமத்ர முநீந்த்ரா:।।*

விசுவாவஸு மேலும் கூறுகின்றான்: சிறந்த தவசீலர் களாகிய முனிவர்கள் இத்திருமலையில் பாம்புகளாகவோ, மரங்களாகவோ, பறவைகளாகவோ, புலிகளாகவோ, மான் களாகவோ, கற்களாகவோ, கொடிகளாகவோ, குகைகளாகவோ, அருவிகளாகவோ பிறக்கவேண்டுமென்று பிரார்த்தனை செய்கின்றனர். இப்படிப்பட்ட பெருமைகள் வாய்ந்த திருவேங்கட மலையைச் சரண் அடைவாயாக!

ஸ்ரீகுலசேகராழ்வார் தாம் அருளிய *''ஊனேறு செல்வத்து''* என்ற பதிகத்தில், மீன் முதலிய பல்வேறு வடிவங்களில் மட்டுமின்றி, *''படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே''* என்று எம்பெருமான் திருவேங்கடமுடையான் திருவடிகளில் மனமுருகிப் பிரார்த்திப்பதை நினைவு படுத்துவதாக விசுவா வஸுவின் கூற்று அமைந்திருப்பது இங்கே கவனிக்கத்தக்கது.

ஸ்ரீவேங்கடாத்ரி கவி திவ்வியப் பிர பந்தங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்ட வர் என்பதற்கு எடுத்துக்காட்டாகவும் இதைக் கொள்ளலாம். நேர்மறைச் சிந்தனையாளனாகிய விசுவாவஸு திருவேங்கட மலையைப் பற்றியும், அத் திருமலையில் எழுந்தருளி உள்ள ஸ்ரீஸ்ரீநிவாஸப் பெருமாளைப் பற்றியும் புகழ்ந்து பேசுவதைப் பொறுக்க முடி யாத எதிர்மறைச் சிந்தனையாளனாகிய கிருசானு கூறுவதைப் பார்ப்போம்.

*ஹந்த! வ்யபேத விஷயாந்தர*
*வ்யாஸங்கம் த்வதந்தரங்கம் தேவ ஏவ*
*அஸ்மிந் அநுபவதி த்ருடஸங்கம் ।*

நண்பனே! வேறு எந்தப் பொருளி லும் பற்றில்லாத நீ இந்தப் பெருமாளிடம் இவ்வளவு பற்று வைத்திருக்கிறாயே? என்று இளக்காரமான குரலில் கிருசானு கேட்கின்றான். அதைக்கேட்ட விசுவா வஸு, ஆம் நண்பனே! நீ கூறியது உண்மைதான் என்று கூறிவிட்டுத் தொடர்ந்து பேசுகின்றான்.

*தததீ சிராய ஸுததீ முர:ஸ்தலே:*
*தததீத ஸீம தததீ ஸுகம் ஸதாம் ।*
*ரஸிகஸ்ய சித்தம் இஹ கஸ்ய*
*தேவதா ப்ரதிபநநபந்நகனகாநகாஹதே।।*

ஹே க்ருசானுவே! தன்னுடைய திருமார்பிலே என்றென்றும் திருமகளை தரித்திருப்பவனும், ஸாதுஜனங்களுக்கு அளவற்ற ஆனந்தத்தை அளிப்பவனும், சேஷாசலம் என்னும் இத்திருமலையில் எழுந்தருளியிருப்பவனுமாகிய நம் திருவேங்கடமுடையானை யாருக்குத் தான் பிடிக்காது? என்று ஸ்ரீஸ்ரீநிவாஸனின் பெருமைகளை மேலும் எடுத்து உரைக்கிறான் விசுவாவஸு.

மேற்கண்ட சுலோகத்திலுள்ள *''ததீ சிராய ஸுததீ முர: ஸ்தலே''* என்பது, ஸ்ரீநம்மாழ்வார் அருளிய அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல்மங்கை உறைமார்பா! என்ற வரிகளை ஒத்திருப்பது திவ்யதம்பதிகளின்

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## தரிசனம் டிக்கெட் பெற்ற பக்தர்களின் கவனத்திற்கு...

- பக்தர்கள் டிக்கெட் பரிசோதனையின்போது தங்களின் தனிப்பட்ட டிக்கெட்/அசல் புகைப்பட அடையாள அட்டையைத் தவறாமல் காண்பித்தல் வேண்டும்.
- தரிசன டிக்கெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் மட்டுமே தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுவர். மற்றவர்களுக்கு அனுமதி இல்லை.
- பக்தர்கள் தங்களுடைய உடைமைகள், மின்னணுப் பொருட்களை உடைமைகள் பாதுகாப்பு மையத்தில் வைத்தல் வேண்டும்.
- லட்டு பிரசாதம் தரிசனத்திற்கு வந்தவர்களுக்கு (டிக்கெட் ஸ்கேன் செய்யப்பட்டவர்கள்) மட்டுமே இலவசமாக வழங்கப்படும். தரிசனத்திற்கு வர இயலாதவர்களுக்கு வழங்கப்படமாட்டாது.
- பக்தர்கள் தரிசனத்திற்காக டிக்கெட் ஸ்கேன் செய்த நேரத்திலிருந்து 24 மணி நேரத்திற்குள் பிரசாதத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.
- 12 வயதிற்குட்பட்ட சிறார்கள் மட்டும் வயது சான்றிதழைச் சரிபார்த்தப் பின்னரே இலவசமாக தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுவர்.
- காலுறை அணிந்து வருபவர்களை கண்டிப்பாக ஆலயத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.
- பக்தர்கள் பாரம்பரிய ஆடைகளை மட்டுமே அணிதல் வேண்டும்.



பக்தர்களாகிய நமக்கெல்லாம் மகிழ்ச்சியைத் தருகின்றது என்பதைக் கூறவும் வேண்டுமோ?

விசுவாவஸுவின் நல்வார்த்தைகளைச் சிறிது கவனத்தில் கொள்ளாத கிருசானு தனது விதண்டா வாதத்தை மேலும் தொடர்கின்றான். *“கிஸரே கேவலம் அர்த்த பரமமும் தேவம் அநுஸந்தத்ஸே?”* நண்பனே! செல்வம் குவிப்பதையே குறிக்கோளாகக் கொண்ட இத்தெய்வத்தை நீ ஏன் அநுஸந்திக்கின்றாய்?

*இஷ்ட ப்ராப்திம் அநிஷ்ட பங்கமபிவா ஸம்ப்ரார்த்யபக்த்யா ஜனை:*
*யத்தாதவ்யம் இதி ப்ரதிச்ருதமப்ருத் த்ரவ்யம் ததாப்தே பலே ।*
*தே தாஸ்யந்தி ந சேத் ஸ்வயம் பயமஸா*
*உத்பாத்ய தேஷாம் புந:*
*க்ருத்ஸ்நம் ஸார்த்த ஹிரண்யஹ்ருத்பத இதம்*
*க்ருஹ்ணாதி வ்ருத்யா ஸமம் ।।*

ஹே விசுவாவஸுவே! வேங்கடவனுடைய பக்தர்கள் இஷ்ட காரியங்களில் வெற்றி பெறுவதற்காகவோ அல்லது தங்களுடைய கஷ்டங்களைப் போக்கிக் கொள்வதற்காகவோ அவருக்குக் காணிக்கை செலுத்துவதாக வேண்டிக் கொள்கின்றனர். அவ்விதம் வேண்டிக் கொண்டு தங்கள் வேண்டுதல் நிறைவேறிய பின்பு தாங்கள் கூறிய காணிக்கையைச் செலுத்தா விட்டால், இந்த தெய்வம் அவர்களுக்கு பயத்தை உண்டு பண்ணி வட்டியும் முதலுமாகத் தனக்குரிய காணிக்கையை வசூல் செய்வதாகக் கூறுகின்றார்களே. இப்படிப்பட்ட தெய்வத்தையா நீ வணங்குகின்றாய்? என்று கிருசானு கேட்பதாக ஸ்ரீவேங்கடாத்ரி கவி கூறியிருப்பதன் மூலம் ஸ்ரீஸ்ரீநிவாஸப் பெருமாளுக்கு பக்தர்கள் வேண்டுதல் காணிக்கை செலுத்துவது என்பது பல நூற்றாண்டுகளாக வழக்கத்தில் உள்ளது என்பது நமக்குத் தெரிய வருகின்றது. இதைக் கேட்ட விசுவாவஸு பதறிப் போய் பதில் கூறுகின்றான்.

*கிஸரே கருணாநிதயே வேங்கடாசலபதயே*
*அபி அஸூயஸி, ச்ருணு தாவத் ।*

அடே கிருசானுவே! கருணையின் இருப்பிடமான நம் திருவேங்கடமுடையானிடம் கூட குற்றம் காண்கிறாயே? நான் சொல்வதைக் கேட்பாயாக!

*நியந்தா ஜந்தூநாம் நிகில ஜகத் உத்பாத விபவ*
*ப்ரதிக்ஷேபை: க்ரீடந் பரமபுருஷ: பந்நக நகே ।*
*பரத்வே ஸௌலப்ய ப்ரகடநக்ருதே வேங்கடபதி:*
*க்ருபாஸிந்து: காம் காம் நநு மநுஜலீலாம் ந*
*நநுதே।।*

அகில உலகங்களையும் படைத்தும் காத்தும் அழித்தும் லீலைகளைப் புரிகின்ற நம் திருவேங்கடவன் மனிதர்களைப் பல்வேறு காரியங்களைச் செய்யுமாறு நியமிக்கின்றான். இவ்வுலகில் பிறந்த

மனிதர்களால் எளிதில் அடையும் படியாக சேஷகிரியில் எழுந்தருளியுள்ள எளிமையின் இருப்பிடமாகிய நம் எம்பெருமான் மனிதர்களைப் போலவே பண்டமாற்று லீலைகளில் ஈடுபடுவதில் வியப்பு எதுவும் இல்லையே?

*கிமுப்யுபாதாய திசந்நபீஷ்டம் க்ருத்ஸ்நம் ஜநேப்ய:*
*ப்திரஞ்ச்னாத்ரே: ।*
*க்ருஷ்ணாவதாரீய குசைல ஸம்பத் ப்ரதாநரீதிம்*
*விவரீவரீதி ॥*

அஞ்சநாத்ரியில் எழுந்தருளியிருக்கும் நம் திருவேங்கடமுடையான் தம்முடைய பக்தர்களிடம் இருந்து காணிக்கைகளைப் பெற்றுக் கொண்டு அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவது என்பது ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தில் அவர் தம்முடைய நெருங்கிய நண்பராகிய குசேலரிடத்தில் அவலைப் பெற்றுக்கொண்டு அவருக்குப் பெரும் செல்வத்தை அருளியதையல்லாவா நினைவூட்டுகின்றது?

*ப்ரிய ஸஹசரீ லக்ஷ்மீ: ஸ்தாநம் ஸஹஸ்ர வஸு: ஸ்வயம்*
*குவலயபதி: ச்யாலோ ரத்நாகர ஸ்வசுரோ: ஹரே: ।*
*ததபி ஹரதி த்ரவ்யம் பூர்ணோ ஜகத்பதிரேஷ யத்*
*ததிஹ பஜதாம் கர்த்தும் நருணாமுதக்ரம்அநுக்ரஹம்॥*

ஸ்ரீலக்ஷ்மிதேவியே நம் திருவேங்கடமுடையானின் அன்பான மனைவி ஆவாள். ஒளி மிகுந்த சூரியமண்டலமே இவருடைய வசிப்பிடம். சந்திரனே இவருடைய மைத்துனன். சமுத்திரராஜனே இவருடைய மாமனார். இப்படிப்பட்ட பெருமைகள் யாவும் நம் திருவேங்கடமுடை யானிடம் இருந்தும் இவர் தம்முடைய பக்தர்களிடம் காணிக்கையைப் பெறுவது அவர்களுக்கு அருள் புரிவதற்காகவே.

*ஸமக்ராஹி ஹரேர் வேதை: ஸமக்ராஹிகுணாவலி:*
*ப்ரத்யக்ஷே அபி பரத்வே அஸ்ய ப்ரத்யக்ஷே அபி*
*நஸம்சய:*

பரம்பொருளாகிய ஸ்ரீமஹாவிஷ்ணுவின் குண அதிசயங்கள் அனைத்தும் வேதங்களின் மூலம் அறியப்படுகின்றன. நம் கண்களால் நேரில் பார்க்க இயலாத அந்தப் பரம்பொருளைப் பற்றிய சந்தேகங்கள் யாவும் பிரத்யக்ஷ தெய்வமாகிய நம் ஸ்ரீஸ்ரீநிவாஸனை தரிசித்தவுடன் நீங்கிவிடுகின்றன.

*அவலோகய தாவதுரகவர தரணீதர*
*சிரோமணேஸ்ச்ச க்ரபாணேரதி தர ஸுகர*
*வரநிகர விதரண கௌசலமதிபேசலம் ।*

திருமலையில் கோவிந்தன் குடிகொண்டு இருப்பதால் திருமலையில் எந்நேரமும் கோவிந்த நாம ஸ்மரணை செய்தல் வேண்டும். அனைவரையும் "கோவிந்தா" என்றே அழையுங்கள். இல்லங்களில் இருந்தாலும் "கோவிந்த நாமம்" பாராயணம் செய்தல் நன்று.




ஹே க்ருசானுவே, இங்கே பார்! இந்த சேஷாத்ரி மலையின் மேல் அழகாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீஸ்ரீநிவாஸப்பெருமாள் எவ்வளவு எளிதாகவும் அழகாகவும் இம்மக்களுக்கு வரங்களை அருளுகின்றார் என்பதைப் பார்! இவ்வாறு பலவிதமாகவும் திருவேங்கடமுடையானின் பெருமைகளை விசுவாவஸு எடுத்துக்கூற, கிருசானுவும் பதில் ஏதும் கூறாதிருந்தான். இதன் மூலம், விசுவாவஸுவின் நேர் மறையான சிந்தனையும் விவரிப்புகளும் கிருசானுவின் எதிர்மறைச் சிந்தனைகளுக்கு உரிய பதிலை அளித்து அவனை நல்வழிப்படுத்திய விதத்தை இக்காவியத்தின் மூலம் அறிந்து மகிழ்கின்றோம்.

இதைத் தொடர்ந்து விசுவாவஸு, கிருசானு ஆகிய கந்தர்வர்கள் இருவரும் திருவேங்கடமலைத் தொடரில் உள்ள வளம் மிகுந்த காடுகளைக் கண்டு மகிழ்ந்த பிறகு, சோளிங்கபுரம் மலை, ஸ்ரீபெரும்பூதூர், சென்னை, காஞ்சீபுரம், வேங்கடாத்ரி கவியின் அவதாரஸ்தலமாகிய அரசாணி பாலை அக்கிரகாரம், திருவஹீந்திரபுரம், சோழவளநாடு, ஸ்ரீராம ஸேது, புனிதமான தாமிரபரணி நதி, ஸ்ரீநம்மாழ்வார் அவதரித்த ஆழ்வார் திருநகரி ஆகிய பற்பல புனிதத் தலங்களையும் தரிசித்துத் தங்களுடைய அபிப்பிராயங்களைப் பரஸ்பரம் பரிமாறிக்கொண்ட பின்பு தங்களுடைய இருப்பிடத்திற்குத் திரும்பிச் சென்றதாக விசுவகுணாதர்ச சம்பு என்னும் அரிய, இனிய காவியம் கூறுகின்றது.

நம் திருவேங்கடமுடையான் புனிதமான இப்புரட்டாசி மாதத்தில் பிரம்மோற்சவம் கண்டருள இருக்கும் தருணத்தில் கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாக விளங்கும் திருவேங்கடமுடையானின் பெருமைகளையும், அவனுடைய தேவியின் மகிமைகளையும், அவன் தனது திருவுள்ளம் உகந்து எழுந்தருளியிருக்கும் திருமலையின் சிறப்புகளையும் அழகாக விவரிக்கும் விசுவகுணாதர்ச சம்பு என்ற காவியத்தைப் படித்து நாம் பிறவி அடைந்ததன் பலனைப் பெற்று இன்புறுவோமாக!

# குறுக்கெழுத்துப் புதிர் -122



### இடமிருந்து வலம்

01. 1008 தீபங்களால் அலங்கரித்து நடக்கின்ற பூஜை...(11)

06 வேங்கடவன் வலம் வருகின்ற சிறு சர்ப்பம்...(5) வாகனம்

10 திருமலையில் நடைபெறும் உற்சவங்கள்...(5) சேவைகள்

12. முத்துப்பந்தல் வாகனத்தில் ...(9) கிருஷ்ணனாக ஸ்ரீநிவாசர் காட்சியளிப்பார்.

16. பிரம்மோத்ஸவத்தின் (முதன்) முதலாக நடக்கின்ற விழா...(10)

17. செவ்வாய் அன்று நடக்கின்ற தங்கத்தாமரை வழிபாடு...(5) பாத பத்மாராதனம்.

19. திருமலையானுக்கு பல்வேறு ஊர்களில் நடத்தப்படுவது...(7) கல்யாணம்.

### வலமிருந்து இடம்

04. திருவேங்கடவனுக்கு செய்கின்ற 108 ...(6) அர்ச்சனை.

05. வெள்ளிதோறும் ஸ்ரீநிவாசருக்கு நடக்கின்ற திருமஞ்சனம்...(5)

07. பாவங்களை எரிப்பதால்...(5.

15. திருமலையப்ப ஸ்வாமி வலம் வருவது ...(5) வீதிகள்.

17. மலையேறும் நடைபாதை ...(4).

18. வேங்கடவனைச் சுமந்து செல்லும் மகா சர்ப்ப ஊர்தி...(9)

### மேலிருந்து கீழ்

01. அன்ன வாகனத்தில் மலையப்ப ஸ்வாமியின் தோற்றம்...(11)

02. இலவச திருமணம் நடத்தி வைக்கும் திட்டம்...(7)

03. திருமலையில் தரிசன வரிசை செல்லும் கட்டிடத் தொகுதி...(12)

04. மலையப்பஸ்வாமி வீதியுலா முடிந்ததும் பண்டிதர்கள் ...(5) பாராயணம் செய்வர்.

11. நாராயணகிரியில் தரிசனமளிப்பது...(6)

தொகுப்பு : திரு. டி.எம்.மனோகரன், தஞ்சாவூர், 99426 44807

புதிருக்கான விடை 47ஆம் பக்கத்தில் உள்ளது.
வாசகர்கள் சரி பார்க்கவும்...

### கீழிருந்து மேல்

08. பசுக்களைப் பராமரிக்கின்ற இடம் கோ...(5) சாலை.

09. திருமாலின் சிங்க வடிவம்...(5) தோற்றம்.

11. கற்பக விருக்ஷ வாகனத்தில் ...(6) ஸ்வாமியாக ஸ்ரீநிவாசர் காட்சியளிப்பார்.

13. 9ஆம் நாள் மாலை உபயதேவியருடன் எழுந்தருள்வது ...(7).

14. 3ஆம் நாள் காலை திருவேங்கடவன் சிம்ம வாகனத்தில் ...(7) வடிவில் வலம் வருவார்.

16. தன்னார்வ தொண்டர்களின் ஓய்வு கூடம்...(2) சதன்.

முதன்மை மருத்துவமனையின் நுழைவாயில் முன் ஆம்புலன்ஸ் நிற்கிறது. அதிலிருந்து வெளியே இறக்கப்பட்டு படுத்தபடுக்கையாக இருந்த என்னால் அசைய கூட முடியவில்லை. பரபரப்புடன் நான்கு பணியாளர்கள் வந்து படுக்கையோடு மின்தூக்கியை நோக்கியபடி கொண்டு செல்கிறார்கள். அந்த மருத்துவமனையின் எதிர் தெருவில் இருந்த ஸ்கேன் மையத்தில் முழு உடல் பரிசோதனையை முடித்துக்கொண்டு வரப்பட்டிருக்கிறேன்.

டிசம்பர் 30 திருப்பதியில் வைகுந்த ஏகாதசி சொர்க்க வாசல் தரிசனத்திற்கு ஆன்லைனில் டிக்கெட் எனக்கும் என் கணவருக்கும் மட்டும் கிடைத்து இருந்தன. அதற்குள் உடல்நிலை சரியாகி பயணம் செய்யக் கூடிய ஆரோக்கியம் கிடைத்து விட வேண்டும் என்று அந்த மருத்துவமனையில் ஒரு வாரத்திற்கு முன் காய்ச்சலுக்கான மருந்து மாத்திரைபெற்று வந்தேன். ஆனால் மீண்டும் அனலாய் கொதிக்கிறது.

நான்கு நாட்களாக இந்நிலை நீடிக்க, மருத்துவமனையில் இரத்தப் பரிசோதனை செய்ததில் உடலில் ஆக்ஸிஜன் அளவு வெகுவாக குறைந்து, வெள்ளை அணுக்களின் எண்ணிக்கையும் சரியான அளவில் இல்லை. உடலில் நோய்க்




கிருமி தொற்று ஏற்பட்டுள்ளது. அதற்கான மேற் சிகிச்சையைப் பெற வேண்டும். இல்லையெனில் நுரையீரல், சிறுநீரகப் பாதிப்பு ஏற்பட்டு உயிருக்கே ஆபத்து எனக் கூறி, அனைத்து வசதிகளும் கொண்ட மருத்துவமனைக்கு பரிந்துரைக்க அங்கே கொண்டு சேர்க்கப்பட்டேன்.

நோய் தொற்று அகற்றப்பட்டால் சரியாகிவிடும். தொடக்க நிலை தான் என்று கூறியதும் நான் டிசம்பர் 30 தரிசனத்தை இழக்காமல் பார்த்திட வேண்டும். அதற்குள் குணப்படுத்தி விடுங்கள் என்று வேண்டுகோள் விடுத்தேன். படுக்கை நோயாளியாக கண்களில் கண்ணீருடன் மருத்துவமனையின் ஹாலில் வைக்கப்பட்டு இருந்த திருவேங்கடவனிடம் "பெருமாளே நீதான் என்னை காப்பாற்றி உயிர்பிச்சை தரவேண்டும்" என்று பார்வையால் பிரார்த்தித்துக் கொண்டேன். ஒரு வினாடி தரிசனப் பிரார்த்தனை வழியும் கண்ணீர் யாவும் உண்மையானதை பின்னர் உணர்ந்தேன்

மூக்கில் ஆக்சிஜன் கப், ஒரு கையில் ஊசி டிரிப்ஸ் எனப் படுக்கையில் இருந்து நகர முடியாமல் படுத்தபடியே சிகிச்சைக்கு உட்பட்டிருந்தேன். ஸ்கேன் சோதனை ஜலதோஷம், நுரையீரல் நீர், மூச்சு விட சிரமம், உடலை அசைக்க இல்லாத நிலை, உயர் ரத்த அழுத்தம், படுக்கை புண் உள்ளது என்று முழு அளவிலான பாதிப்புகள் சொல்லி திருப்பதி செல்வதற்கு சாத்தியமே இல்லை வீட்டிற்கு அனுப்ப முடியாது என மருத்துவர்கள் கூறினர்.

எது நடந்தாலும் நாங்களே பொறுப்பு என்று கூறி எழுதி கொடுத்து அழைத்துச் செல்லுங்கள் எனத் தெரிவித்ததை என் மனம் எதிர்பார்க்கவில்லை. ஒரு லட்சத்து 90 ஆயிரம் செலவாகி இருந்தது. இன்னும் இருந்து சிகிச்சை தொடர்ந்தால் சேமிப்பு கையிருப்பு உயிர் யாவும் போய்விடுமோ என்று எண்ணியபடியே திரும்பிய என் கண்களில் அபய வரதன் வேங்கடவன் தென்பட உள்ளம் உருகி கண்ணீருடன் பிரார்த்தித்து அறைக்குத் திரும்பினேன். அப்போது கிராம கோயிலில் அர்ச்சனை செய்து வந்த அம்மாவும் தங்கையும் 2026 ஆம் ஆண்டிற்கான இராமர் சீதை லட்சுமணர் அனுமன் படமும் துளசியும் தந்து நெற்றியில் குங்குமத்தை பூசி விட்டனர்.

யார் துக்கப்படுவதையும் காண சகிக்க மாட்டேன் உடனே கலைந்து விடுவேன். அதுதான் எனக்குப்

பிடித்த தர்மம் என்று சீதையிடம் சுந்தரகாண்டத்தில் இராமர் கூறிய சொற்களும் நினைவுக்கு வர மனதில் தெம்பு வந்தது. எதுவானாலும் சரி என்னை வீட்டுக்கு அழைத்துச் சென்று விடுங்கள். தன்வந்திரி பெருமானைக் காட்டிலும் வேறு எவருளர் என்று என் கணவரிடமும் மகளிடமும் சொல்லி காரில் வீட்டுக்கு கொண்டு செல்லப்பட்டேன். சாமிக்கு எதிரில் கட்டிலைப் போட்டு படுக்க வைக்கப்பட்டேன். பார்வையில் பெருமாள், என் உதட்டில் ***"ஓம் நமோ வேங்கடேசாய"***, ***"ஓம் நமோ நாராயணாய"*** உச்சரிப்பு. என்னை பார்க்க வீட்டிற்கு வந்த மற்றொரு தங்கை திருப்பதியில் இருந்து வாங்கி வந்த 2026ஆம் ஆண்டிற்கான முழு அளவிலான பெருமாள் காலண்டர். சென்னை ஆவடியில் வருட பிறப்பை முன்னிட்டு தந்த பெருமாள் பத்மாவதித் தயார் நாட்காட்டி குங்குமம் என்று கொண்டு தர, திருப்பதிக்கு வர முடியாமல் இருந்த என்னை பார்க்க பெருமாளே தேடிவந்தது போல் உணர்ந்தேன்.

பிறகென்ன படிப்படியாக உடல் நலம் தேறினேன். நான்கு முறை பெருமாளை தரிசித்து விட்டேன். இரண்டு முறை முடிகாணிக்கை தந்தேன். வரிசையில் ஏறி இறங்கி சர்வ தரிசனம் டோக்கன் என்று பார்த்து திரும்பும் அளவுக்கு நடை உடை ஆரோக்கியம் மன வலிமையோடு உள்ளேன்.

மருத்துவமனை நுழைவு வாயிலில் முழு அளவில் பிரம்மாண்ட மாகத் தோற்றம் தந்த வேங்கடவன் கைகூப்பி வணங்க முடியாத நிலையில் கண்ணீருடன் சென்ற நேரத்தில் நான் கண்டு வேண்டியதற்கு செவி சாய்த்து என்னை காத்து அருளிய திருவேங்கடவன் மூக்குக்கும் நெஞ்சுக்கும் இடையே காற்றின் இயக்கம் எந்த நேரமும் நின்று விடக்கூடும் என்ற நிலையில் மரண வாசல் வரை சென்று விட்ட என்னை தாயினும் சாலப் புரிந்து காத்து மீட்ட என் அப்பனின் கருணை என்னவென்று சொல்வேன் தலையள்ளால் கைமாறு இலேன்.

**முனைவர் தி.கமலி,**
**சென்னை**

## குறுக்கெழுத்துப் புதிர் விடை -122

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ச | 2 க | ஸ் | ர | தீ | பா | ரா | த | னை | சே | 3 வை | ல |
| ர | ல் | ண | சி | ம | நா | ர | ஸ் | க | 4 ச | கு | பா |
| ஸ் | யா | க்ஷ | ச் | ம் | க | க்ஷே | பி | 5 அ | து | ண் | கோ |
| வ | ண | ர | ரு | 6 சி | றி | ய | சே | ஷ | ர் | ட | ஜ |
| தி | வே | ம் | தி | ர | ம் | ட | க | ங் | 7 வே | ம் | ரா |
| தே | தி | 8 ச | க | 9 ந | | 10 ஆ | ர் | ஜி | த | கி | 11 ஸ்ரீ |
| வி | 12 கா | ளி | ங் | க | ந | ர் | த் | த | ன | யூ | வா |
| வ | வா | | 13 த | 14 யோ | ட | மா | கு | ன் | 15 நா | கா | ரி |
| டி | 16 சே | னா | தி | ப | தி | உ | ற் | ஸ | வ | ம் | பா |
| வ | | | ரி | பி | லி | 17 அ | ஷ் | ட | த | ள | தா |
| ம் | ன | க | வா | ஷ | சே | ய | ரி | 18 பெ | | க் | லு |
| | | | 19 ஸ்ரீ | நி | வா | ச | தி | ரு | க் | ஸ் | |




ஏழு மலைகள் நிறைந்த திருமலையில் நித்தியவாசம் செய்யும் கலியுகக் கண்கண்ட தெய்வமான திருவேங்கடவன் தங்கள் வாழ்வில் நடத்திய திருவிளையாடல்கள் அதாவது தங்களுக்கு ஸ்வாமியின் திருவருள் கிடைத்த விதத்தினை ஸப்தகிரி பத்திரிகையில் வெளியிடுவதற்கு ஏதுவாக ஸப்தகிரி அலுவலகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

*எங்கள் முகவரி :*
**பிரதான ஆசிரியர்,**
**"ஸப்தகிரி" அலுவலகம்,**
**2வது தளம்,**
**தி.தி.தே. அச்சகக் கட்டிடம்,**
**கபிலத்தீர்த்தம் சாலை,**
**திருப்பதி - 517 507.**



# செப்டம்பர் 2026
# ராசி பலன்கள்



- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.

**மேஷம்**

மாதத்தின் பிற்பகுதியில் தொழில் வளர்ச்சி நன்கு அமையும். புது வாகனம் வாங்கும் யோகம் உண்டு. செலவிற்கேற்ற வருமானம் உண்டு. கடன் வாங்கி சுபச் செலவுகள் செய்வீர். தம்பதியரிடையே ஆரோக்கியம்/ஒற்றுமை இருக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு நினைத்த இடத்தில் இடமாற்றம் கிடைக்கும். தொழிலில் புதிய முயற்சிக ளில் வெற்றி கிடைக்கும். தெய்வபல ஆதரவு மிக்க மாதமிது.

**ரிஷபம்**

கடன் வாங்கி மனை, புது வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டு. சகோதர வழியில் இருந்த பிரச்சனைகள் தீரும். குழந்தை பாக்கியம் அமையும். தொழிலில் புதிய முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்கும். தாராள பண வருமானம் உண்டு. வெளிநாடு செல்ல விரும்புவோரின் ஆசை நிறைவேறும். எதிர் பார்த்ததைவிட நல்ல யோகத்தைத் தரும் மாதமிது.

**மிதுனம்**

மாதத்தின் முன் பகுதியில் ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. தொழிலில் வேலைப் பளு அதிகம் ஆகும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். பெற்றோரின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. தொழிலில் தாமதமாகப் புது முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உத்தியோ கஸ்தர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கும். கடுமையாக உழைத்து தாமதமாக முன்னேறும் மாதமிது.

**கடகம்**

தொழிலில் செலவுகள் அதிகமாகும். ஆரோக்கியத் தில் இருந்த குறைபாடுகளுக்கு நல்ல மருத்துவம் கிடைக்கும். குடும்ப உறவினர்களிடம் பேசும்போது விவாதத்தைத் தவிர்க்கவும். நண்பர்கள், உறவினர்கள் உதவிகள் கிடைக்கும். மாணவர்கள் கடுமையாக படித்தல் வேண்டும். குழந்தைகளின் கல்விக்காக செலவுகள் அதிகமாகும். நன்மையும் தீமையும் கலந்த மாதமிது.

**சிம்மம்**

செலவுகள் அதிகமாகும். வேலைப்பளு காரணமாக தூக்கம் குறையும். உங்கள் குடும்ப ஆரோக்கியத் திற்கு நல்ல மருத்துவம் கிடைக்கும். எல்லா காரியங்களிலும் முடிவெடுப்பதிலும், வெற்றியும் தாமதமாக அமையும். பழைய வாகனங்களை பழுது பார்த்து வைத்துக் கொள்ளவும். தம்பதியர் இடையே பிரச்சனை ஏற்பட்டுப் பிறகு சரியாகும். மிகவும் எச்சரிக்கையுடன் முன்னேறும் மாதமிது.

**கன்னி**

மாதத்தின் பின்பகுதியில் முன்னேற்றம் உண்டாகும். தொழிலில் அலைச்சலும் வளர்ச்சியும் கலந்து இருக்கும். தாயாரின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. கண்டக சனியின் காரணமாகத் திருஷ்டி ஏற்பட்டு காரியங்களும் தாமதமாகும். கடுமையான முயற்சிக்குப் பின் வெற்றி கிடைக்கும். தொழிலில் பழைய பாக்கிகள் வசூலாகும். கடுமையாக உழைத்து முன்னேறும் மாதமிது.

**துலாம்**

தொழிலில் பழைய பாக்கிகள் வசூலாகும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வீடு, மனை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டு. உத்தி யோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வும் மாற்றமும் உண்டு. குழந்தைகள் படிப்பிற்காகச் செலவுகள் அதிகமாகும். தம்பதியரிடையே நல்லுறவு உண்டாகும். பலதுறைகளிலும் இருந்த பிரச்சனைகள் தீர்ந்து சாதிக்கும் மாதமிது.

**விருச்சிகம்**

மாதத்தின் முன்பகுதியில் அலைச்சலும் பின் பகுதியில் முன்னேற்றமும் உண்டாகும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். பூர்வீகச் சொத்துக்களில் இருந்த வில்லங்கம் தீரும். குடும்பத்தில் விரைவில் சுப காரியங்கள் நடக்கும். செலவிற்கு ஏற்ற வருமானம் உண்டு. உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வும் ஊதிய உயர்வும் உண்டு. நினைத்ததைச் சாதிக்கும் மாதமிது.

**தனுசு**

தொழிலில் அலைச்சலும், பிரயாணமும் அதிகம் ஆகும். குடும்ப ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. பூர்வீகச் சொத்துக்கள் குறித்து சில மாதங்கள் பேசாமல் இருப்பது நல்லது. திருஷ்டியால் தொழிலில் மந்தநிலை ஏற்படும். கடன் கொடுப்பதையும், கடன் வாங்குவதையும் தவிர்ப்பது நல்லது. மிகவும் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டிய மாதமிது.

**மகரம்**

தெய்வ பலத்தினால் நினைத்ததைச் சாதிப்பீர். தொழிலில் புதிய முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு பதவி/ஊதிய உயர்வு கிடைக்கும். மாதத்தின் பின்பகுதியில் உடல் உஷ்ணம் குறையும். பூர்வீகச் சொத்து பிரச்சனைகள் தீரும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். நல்ல முன்னேற்றமும் யோகமும் பெறும் மாதம் இது.

**கும்பம்**

தனவரவு உண்டு. குடும்ப ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. வேலைப்பளு அதிகரிக்கும். தொழில் வளர்ச்சி நன்கு அமையும். மருத்துவச் செலவுகள் அதிகமாகும். மாணவர்கள் அக்கறையுடன் படித்தல் வேண்டும். உத்தியோகஸ்தர்களுக்கு பதவி உயர்வு உண்டு. தம்பதியருக்குள் சிறு பிரச்சனை ஏற்பட்டுப் பிறகு சரியாகும். கடுமையாக உழைத்து முன்னேறும் மாதம் இது

**மீனம்**

உடலில் இனம் தெரியாத வலி ஏற்பட்டுப் பிறகு சரியாகும். பேசும் போது விவாதத்தைத் தவிர்க்க வும். பழைய பாக்கிகள் வசூலாகும். வேலைப் பளுக்கேற்ற வருமானம் கிடைக்கும். குழந்தை பாக்கியம் விரைவில் கிடைக்கும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். குழந்தைகளுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. கடுமையாக உழைத்து முன்னேறும் மாதம் இது.

# பல்சுவைப் பகுதி

சிறுவர் உலகம்

## எண்களை இணைத்து வண்ணம் தீட்டுங்கள்



## தெரிந்து கொள்ளுங்கள் !



திருவேங்கடமுடையான் தினமும் ஹாதிராம் பாவாஜியுடன் பகடை ஆடி வந்தார்.



திருமலை நம்பி கொண்டு வந்த பானையை உடைத்து திருவேங்கடமுடையான் தண்ணீர் அருந்தினார்.



சிறுவன் வடிவில் திருவேங்கடமுடையான் வந்து அனந்தாழ்வான் மனைவிக்கு மண் சுமந்து உதவினார்.

## பக்தர்கள் பெயரை அவர்களுக்காக அளித்த குறிப்பினால் கண்டறியவும்.



1. தெலுங்கு கீர்த்தனைகளால் திருவேங்கடவனைத் துதித்தவர்
2. படியாய்க் கிடந்து திருவேங்கடவனின் பவளவாய் காண்பவர்
3. திருவேங்கடவனுக்கு முத்து ஆரத்தி சேவை செய்தவர்
4. பூந்தோட்டம் அமைத்து திருவேங்கடவனுக்கு புஷ்பக் கைங்கர்யம் செய்தவர்

**விடைகள்**

1) அன்னமய்யா, 2) குலசேகராழ்வார்,
3) தரிகொண்ட வெங்கமாம்பா,
4) அனந்தாழ்வான்.

## வேண்டுதல்கள் இங்கே சித்திர வடிவில்

(1)



(4)



(2)



(5)




(3)



படத்தினைப் பெயரோடு பொருத்துக

அ) துலாபாரம்
ஆ) அங்கப்பிரதக்ஷிணம்
இ) நடந்து மலையேறுதல்
ஈ) திருமுடிக்காணிக்கை
உ) அகண்டம்

திருவேங்கடமுடையானுக்கு பலவிதமாக பிரார்த்தனைகளை பக்தர்கள் செய்து வருகின்றனர். அதில் ஒரு சில பிரார்த்தனைகள் இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது.

**விடைகள்**

1) உ, 2) ஆ, 3) அ, 4) இ, 5) ஈ






திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி போட்டி எண்-50

**ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!**

1. “சென்று வணங்குமினோ சேணுயர் வேங்கடத்தை” என்று கூறிய ஆழ்வார்.............................................
2. வேதமயன் என்பதற்கு உரையாசிரியர்கள் கூறும் பொருள் ...........................................................
3. “ஶ்ரீமத் ஸுந்தராஜ மாத்ருமுனி” என்றழைக்கப்படும் ஆசார்யர் ....................................................
4. “நீர்மை எனும் குணம் உடையவன்” என்று ஆழ்வார் யாரைக் குறிப்பிடுகிறார் ......................................
5. செடியாய வல்வினைகளைத் தீர்த்தருள்பவன் ..........................................................................
6. “ஞானப்பிரான்” என்றழைக்கப்படும் அவதாரம் ...........................................................................
7. “உலகு தன்னை வாழ நின்ற நம்பி” என்று எம்பெருமானைப் போற்றியவர் .........................................
8. “பேணி வரு வேங்கடவா என்னுள்ளம் புகுந்தாய்” என்று பாசுரமிட்டவர் .........................................
9. “விச்வ குணதர்ச சம்பு” எனும் காவியத்தைப் படைத்தவர் ..........................................................
10. “கால் வண்ணம் இங்கு கண்டேன்” என கம்பர் குறிப்பிடும் திருவடிக்குரியவர் ....................................
11. “விகடே கிரீம்கச்ச” என்று கூறும் வேத நூல் ............................................................................
12. “ஶ்ரீவேங்கடேச மங்களம்” எனும் ஸ்தோத்ர நூலை அருளிச் செய்தவர் ..............................................
13. எந்த மலை நம் பாவங்களைச் சுட்டெறிக்கும் ..............................................................................
14. “செங்கயல் திளைக்கும் சுனைத் திருவேங்கடம்” எனப் போற்றுபவர் ..............................................
15. வராக சரம சுலோகம் யாருக்கு யாரால் உபதேசிக்கப்பட்டது ..........................................................



## போட்டிக்கான நிபந்தனைகள்



- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்கு உட்பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்தியக் குடி மக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்தப் பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, 2nd Floor, T.T.D. Press Building, K.T. Road, Tirupati -517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியைக் குறித்து எவ்விதத் தகவல்களும் தொலைபேசி வாயிலாகத் தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலை பேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.09.2026.

**விடையை எழுதுங்கள்!**
**திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்!!**

| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதாரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |

சக்கரத்தைச் சுற்றுங்கள்!

அதே வண்ணக் கட்டத்தில் விடையை எழுதுங்கள்!!






## விடைகள்

1) பிரம்மோத்ஸவம், 2) சக்கரஸ்நானம், 3) ஹம்சவாகனம், 4)ஸ்ரீகிருஷ்ணர் 5) அனுமத் வாகனம், 6) சிம்ம வாகனம், 7) கல்பவிருக்ஷ வாகனம், 8)சூரியப்பிரபை வாகனம்.

திருமலையப்ப ஸ்வாமி எழுந்தருளிய வாகனத்தை பெயருடன் ஒப்பிடவும்!




1) கருட வாகனம்
2) சந்திரப்பிரபை
3) முத்துப்பந்தல்
4) கல்ப விருக்ஷ வாகனம்
5) சூரியப்பிரபை
6) கஜ வாகனம்
7) திருத்தேர்
8) தங்கத் தேர்
9) சிறிய சேஷ வாகனம்
10) சர்வபூபால வாகனம்

விடை :
1) 2, 2) 4, 3) 9, 4) 6, 5) 7, 6) 5, 7) 3



அர்ச்சை வடிவில் இத்திருமலையில் நின்ற கோலத்தில் தரிசனம் தரும் அந்த எம்பெருமானுக்கு பிரம்ம தேவரே முன்னிருந்து நடத்தும் பிரம்மோத்ஸவம் இது. அதை அனைவருக்கும் தெரிவிக்கும் வண்ணமாக, காலையிலும், இரவிலும் எம்பெருமான் வீதி உலா காணும்போது அந்த வாகனங்களுக்கு முன்பாக பிரம்ம ரதம் என்ற சிறு தேர் இழுத்துச் செல்லப்படுகிறது. இந்த ரதத்தின் வழிகாட்டுதலைத் தொடர்ந்தே வாகன சேவைகள், இத்திருமலையில் நடைபெறுகின்றன. இந்த விசேஷம் வேறு எந்த திவ்ய தேசங்களிலும் வழக்கில் இல்லை. இதுவே திருவேங்கட முடையானை கலியுகத் தெய்வம் என்பதை நிரூபிக்கிறது.


**‘பிரம்ம ரதம்’ தெரிந்து கொள்வோம்!**

சித்திரக் கதை

# கோவர்த்தன கிரியை ஏந்திய
# கோவிந்தன்

கதை : திரு.ஸ்ரீநிவாச தீக்ஷிதுலு
சித்திரம் : திரு.துவாரகநாத்.




யாதவர்களின் பிரார்த்தனையைக் கேட்டு ஸ்ரீ கிருஷ்ணரும் கோவர்த்தனகிரியைத் தன் சுண்டு விரலால் தூக்கிப் பிடித்துக்கொண்டு...
அனைவரும் மலையின் கீழே வாருங்கள்! வாருங்கள்!
7 நாட்கள் தொடர் மழைக்குப் பிறகு இந்திரனும் தன் தவறை உணர்ந்தான். மழையை நிறுத்திவிட்டு ஸ்ரீ கிருஷ்ணரிடம் சரணடைந்தான்.
கிருஷ்ணம் வந்தே தேவதேவம்
தேவாதி தேவா! எங்களை மன்னியுங்கள். இனி இதுபோன்ற தவறைச் செய்யாமல் தர்ம வழியையே கடைபிடிப்போம்.
ஸ்ரீ கிருஷ்ணரும் தன் கருணை மழையால் இந்திரனை மன்னித்தருளினார்.
இந்திரா! பேராசையும், அகந்தையுமே ஆணவத்திற்குக் காரணம் ஆகின்றன.
மீண்டும் கோவர்த்தனகிரியை அதன் நிலையிலேயே வைத்தார் கோவிந்தன். யாதவர்களும் தம் நன்றியைத் தெரிவித்து விட்டு ஆநிரைகளுடன் பிருந்தாவனத்தை வந்தடைந்தனர்.
நம் ஆணவத்தை விடுத்து இயற்கையையும், இறைவனையும் வணங்குதல் வேண்டும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

(சமய மாத இதழ்)

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : ________________
(பெரிய எழுத்துக்களில்) ________________
________________
________________

அலைபேசி எண் : ☐☐☐☐☐☐☐☐☐☐

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ.240/– ☐ ரூ.2,400/–(12 வருடங்கள்)

4. சந்தா புதுப்பித்தல் :

(அ) சந்தா எண். :

(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :

பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ./ஐ.பி.ஓ., இணையதளம்)

ரசீது எண் : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை/காசோலை

எண். : தேதி:

இடம் :

நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்சென்டர்

**உங்களுக்காக**

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடைத் திட்டங்கள் குறித்து அறிய... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877-2233333**
**2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/– ஆயுள்சந்தா ரூ.2,400/– (12 வருடங்கள்) இணையதளம் (https://ttdevasthanams.ap.gov.in), இ.எம்.ஓ., வரைவோலை, ஐ.பி.ஓ., டி.டி.–யை "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி" எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ (அ) வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
2வது தளம்,
தி.தி.தே.அச்சகக்கட்டிடம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி – 517507.

Printed by Sri R.V. Vijayakumar, B.A., B.Ed., and Published by Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D. P.G.Dip. in JMC. on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.,P.G.Dip. in JMC.



17-07-2026 அன்று திருவரங்கம் அரங்கநாதஸ்வாமி திருக்கோயில் சார்பில் திருவேங்கடமுடையானுக்கு பட்டு வஸ்திரங்களைச் சமர்பித்த மாண்புமிகு தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.ரமேஷ் அவர்கள் உடன் தி.தி.தே. ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரிய ஜீயர் ஸ்வாமிகள், ஸ்ரீஸ்ரீஸ்ரீ சின்ன ஜீயர் ஸ்வாமிகள் மற்றும் உயரதிகாரிகள்



03-07-2026 அன்று திருப்பதியில் வகுளமாதா ஆலயத்தில் சிறார்களுக்கான “அக்ஷர கோவிந்தம்-அன்னப்ராசனம்” நிகழ்ச்சியைத் துவக்கி வைத்த தி.தி.தே.பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு.பி.ஆர். நாயுடு அவர்களுடன் தி.தி.தே. செயலாட்சித்தலைவர், பொறுப்பாண்மைக் குழு உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உயரதிகாரிகள்




ஸ்ரீவாரி சேவையில் மருத்துவர்களும் சேவைபுரியும் வகையில் தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு.எம்.ரவிச்சந்திரா ஐ.ஏ.எஸ். அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட “ஸ்ரீவாரி வைத்யசேவை” நிகழ்ச்சியில் பங்கு கொண்ட கூடுதல் செயலாட்சித்தலைவர் திரு.சிஎச்.வெங்கைய சௌதரி ஐ.ஆர்.எஸ். அவர்கள், திருப்பதி இணைச்செயலாட்சித்தலைவர் டாக்டர் சரத், ஐ.ஏ.எஸ். (ஓய்வு) அவர்கள் மற்றும் உயரதிகாரிகள்



திருப்பதி அருகில் உள்ள சந்திரகிரியில் அமைந்துள்ள ஸ்ரீ கோதண்டராம ஸ்வாமி ஆலயத்தில் 10-07-2026 அன்று ஸ்ரீமகாலக்ஷ்மி தாயாருக்கு நடைபெற்ற “மஹாலக்ஷ்மி திருவிளக்குப் பூஜை” திருக்காட்சி



08-07-2026 அன்று தி.தி.தே.பொறுப்பாண்மைக்குழுவில் பதவி அடிப்படையில் உறுப்பினராக பொறுப்பேற்ற ஆந்திர மாநில இந்து சமய அறநிலையத்துறை செயலாளர் திரு.கே.கன்னபாபு அவர்களுக்கு ஸ்வாமி பிரசாதத்தை வழங்கும் தி.தி.தே. கூடுதல் செயலாட்சித்தலைவர் திரு.சிஎச்.வெங்கைய சௌதரி ஐ.ஆர்.எஸ். அவர்கள் மற்றும் சி.வி.&எஸ்.ஓ. திரு. முரளிக்கிருஷ்ணா ஐ.பி.எஸ். அவர்கள்



10-08-2026 அன்று திரு.பி. கோபிநாத் ஐ.ஏ.எஸ். அவர்கள் திருவேங்கடமுடையானைத் தரிசித்த பிறகு திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் இணைச்செயலாட்சித் தலைவராக (சுகாதாரம் மற்றும் கல்வித்துறை) பொறுப்பேற்றபோது



SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATEDMONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-08-2026 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No. APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/ 2024-2026 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No. PMGK/RNP/WPP-04(05)/2024-2026" Posting on 1st of Every month.

22-09-2026,
திருத்தேர்